# சந்நிதிச் செல்வம்



வல்வை ந. அனந்தராஜ்

R.Anantharaj
B.A (Hons), M.A.
Dip-in-Edu, Dip-in-[illegible]
SLPS, SLEAS

# சந்நிதிச் செல்வம்

(வரலாற்று ஆய்வு நூல்)

வல்வை. ந. அனந்தராஜ்

N.Anantharaj
B.A (Hons),M.A.
Dip-In-Edu, Dip-In Journ
SLPS, SLEAS

நந்தி பதிப்பகம்
வல்வெட்டித்துறை

## நூற் பட்டியல் தரவு

| | |
|---|---|
| நூல் | சந்நிதிச் செல்வம் |
| விடயம் | சமய ஆய்வு |
| ஆசிரியர் | அனந்தராஜ், ந. வல்வை |
| முகவரி | தெணியம்பைத் தெரு, வல்வெட்டித்துறை |
| பதிப்பு | முதலாம் பதிப்பு - 2001 |
| பதிப்புரிமை | திருமதி அ. வனிதா<br>36, புதிய சோனகத் தெரு<br>திருகோணமலை |
| முகப்பு ஓவியம் | ரமணி |
| பக்கம் | 150 |
| அளவு | 1/8 டிமை, 14 CM X 21 CM. |
| பிரதிகள் | 1000 |
| விலை | ரூபா 160 /= |
| அச்சுப்பதிப்பு | யுனி ஆட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்<br>புளூமென்டால் வீதி,<br>கொழும்பு - 13. |

ISBN 955 - 96845 - 1 -5

## BIBLIOGRAPHICAL DATA

| | |
|---|---|
| TITLE | SANNITHY SELVAM |
| SUBJECT | RESEARCH ON RELIGION |
| AUTHOR | ANANTHARAJ, N. VALVAI |
| ADDRESS | THENIAMBAI STREET,<br>VALVETTITURAI |
| EDITION | FIRST EDITION - 2001 |
| COPYRIGHT | Mrs. A. VANITHA<br>36, NEW MOOR STREET<br>TRINCOMALEE |
| FRONT COVER | RAMANY |
| PAGE | 150 |
| SIZE | 1/8 DEMY, 14CM X 21CM |
| COPIES | 1000 |
| PRICE | Rs. 160 /= |
| PRINTED BY | UNIE ARTS (PVT) LTD.<br>BLOEMENDHAL ROAD<br>COLOMBO - 13 |

# சந்நிதிச் செல்வம்

உள்ளே..................


| | | |
|---|---|---|
| | ஆசியுரை | v |
| | முன்னுரை | ix |
| 1. | ஈழத்தில் முருக வழிபாடு – ஓர் அறிமுகம் | 1 |
| 2. | சந்நிதிச் செல்வமும் அமைவிடமும் | 10 |
| 3. | செல்வச் சந்நிதியின் தோற்றம் | 16 |
| 4. | சந்நிதியின் பூசை முறைகள் | 23 |
| 5. | சந்நிதியின் வருடாந்த மகோற்சவம் | 29 |
| 6. | சந்நிதியின் விசேட வழிபாடுகளும், சடங்குகளும் | 37 |
| 7. | எச்சரிக்கையும் பராக்கும் | 41 |
| 8. | சந்நிதியின் மரபுகளும் பாரம்பரியங்களும் | 43 |
| 9. | சந்நிதியின் நேர்த்திகள் | 55 |
| 10. | சந்நிதியின் சித்தர்களும், யோகிகளும் | 58 |
| 11. | சந்நிதியின் மடங்களும் ஆச்சிரமங்களும் | 72 |
| 12. | சந்நிதியும் கதிர்காமமும் – ஒரு ஒப்பீடு | 78 |
| 13. | சந்நிதியான் அற்புதங்கள் | 83 |
| 14. | சந்நிதியில் அதிகரித்து வரும் ஆகமச் சாயல் | 129 |
| 15. | திருப்பள்ளியெழுச்சி | 134 |
| | உசாத்துணை நூல்கள் | 138 |

# காணிக்கை

என் வாழ்வின் ஓர் அங்கமாய்
உணர் வாய் மூச்சாய் கலந்தே
துன் புறு தொல்லை யகற்றி
தொடர் தரும் துயரம் நீக்கித்
தென் புடன் என்றும் வாழ
தொண்டைமான் கரை யமர்ந்தே
என்னுடன் துணையாய் நிற்கும்
சந்நிதியானுக் கிந்நூல் காணிக்கை.

*- வல்வை. ந. அனந்தராஜ் -*



# என்னுரை

ஈழத்தில் மரபு வழிப்பட்ட முருக வழிபாடு பற்றிய ஒரு சிந்தனையும் அவை தொடர்பான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின், அது கொண்டைமானாறு செல்வச் சந்நிதியுடனேயே ஆரம்பிக்கப்பட வேண்டும். 'சந்நிதி' என்ற சொல் பொதுவாக 'இறைவன்' இருக்கும் கோயிலைக் குறிப்பதற்குப் பயன்பட்டாலும், இங்கு சந்நிதியே கோயிலாக உருவகிக்கப்பட்டுள்ளமை சந்நிதி முருகன் ஆலயத்தின் சிறப்பமிசமாகும்.

சந்நிதி பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும் போது பின்வரும் நான்கு முக்கிய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

1. சந்நிதி அமைந்துள்ள இயற்கைச் சூழலும் சுற்றிவர உள்ள மடங்களும்.

2. சந்நிதியின் வழிபாட்டு மரபுகளும் சடங்குகளும்.

3. சந்நிதியைத் தமது பிரதான வழிபாட்டுத் தலமாகக் கொள்வோரின் சமூகவியல் பண்புகளும் அவர்களது மனோநிலைகளும்.

4. சந்நிதியின் பூசகர் பரம்பரையினரின் பண்புகளும், அவர்களுக்கும் கோயிலுக்கும் உள்ள தொடர்புகளும்.

என்ற வகையில் ஆய்வு செய்யப்படும் பொழுதுதான் "சந்நிதி" என்ற அந்தப் பெரியதொரு மத ஸ்தாபனத்தைப் பற்றிய விரிவானதும் முழுமையானதுமான பதிவுகளை உருவாக்க முடியும்.

சந்நிதி கோயிலின் பூசை முறைகளும் சடங்குகளும் பிராமணிய முறை சாராததும், ஆகம நெறிகளுக்குட்படாததுமான பாரம்பரிய வழிபாட்டு மரபுகளைக் கொண்டவையாக இருப்பதே அதன் சிறப்பான அமிசமாகும். அதுவே சந்நிதிக்கேயுரிய தனித்துவமான பண்புகளும் கூட. அந்தப் பண்புகளில் இருந்தும் சந்நிதியின் சடங்குகளும் மரபுகளும் விலகிச் செல்லுமாயின் சந்நிதியின் தனித்துவம் மாறுவதுடன், அதன் வழிபாடியற்றும் போக்கும், பூசை முறைகளும் மாற்றப்படுவதும் தவிர்க்க முடியாததாகிவிடும். அப்பொழுது பாரம்பரியமாக இருந்து வந்த பூசகர் மரபு ஒன்று காலப்போக்கில் அருகி, சமூக அதிகாரமுடையோரின் கைக்கு மாறுவதன் மூலம் அதுவும் காலத்தின் தேவையென்ற நியாயத்தை உருவாக்கி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தமிழ்ப் பண்பாட்டின் செந்செறி சாராத நாட்டார் மயப்படுத்தப்பபட்ட வழிபாட்டு மரபு ஒன்று சந்நிதியில் காலம் காலமாக இருந்து வந்தமையினாலேயே, சாதாரண மக்களும்கூட சந்நிதியானுடன் "உறவு கலந்த" ஒரு நிலையில் பேசி மகிழ்ந்து தம் குறைகளைப் பகிர்ந்து கொள்ளும் உயர்மட்ட பக்தி உணர்வு மேலோங்கி இருந்தது. அதுவே சந்நிதியின் சூழலில் பார்த்து மகிழும் ஒரு சிறப்பான அமிசமாக உள்ளது.

அத்தகைய மரபுகளும், சடங்கு முறைகளும், வழிபடு தன்மையும் சமஸ்கிருத மயப்படுத்துகை மூலம் அழிந்து விடக் கூடாது என்பதே சந்நிதியின் வழிபடு குழமத்தின் வேண்டுதல்களும் விருப்பமுமாகும் என்பதைச் சந்நிதியின் சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

அந்த வகையில் சந்நிதியின் ஆகமம் சாராத வழிபாட்டு மரபுகள் இருந்து வந்த காலம் முதல் படிப்படியாக ஆகமச் சாயல் மருவிவரும் தற்காலம் வரை சந்நிதியானுடன் நெருங்கி உறவாடி

வருபவன் என்ற வகையில் "சந்நிதிச் செல்வம்" என்ற இந்த நூலை எழுதுவதற்கான கட்டளையையும் "அவனே" எனக்குப் பணித்துள்ளான்

"சந்நிதியானின் அற்புதங்கள்" பற்றி தவத்திரு முருகேசு சுவாமிகள் மூலமும், சந்நிதியானின் வழிபாடியற்றுவோரின் அனுபவங்கள் மூலமும், எனது சொந்த மத அனுபவங்கள் மூலமும் அறிந்து அந்தப் பேரின்ப உணர்வில் திளைத்திருந்த போதுதான், அந்த உணர்வுகளை எல்லோருடனும் பகிர்ந்து ஆனந்தமயப்பட வேண்டும் என்ற சிந்தனை உருப்பெற்றது. அதன் பயன் மிகுந்த அறுவடையே "சந்நிதிச் செல்வம்" என்ற இந்த நூலாக முகிழ்த்து நிற்கின்றது.

சந்நிதியின் வரலாறு பற்றி எழுதவேண்டும் என்ற உந்து சக்தி ஏற்படுவதற்கு எனது சொந்த மத அனுபவங்கள் மட்டுமின்றி, பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களது "சந்நிதிச் செல்வம்" பற்றிய அவரது புதிய அணுகுமுறையிலான சிந்தனையும், பேராசிரியர். அ. சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரின் "ஆற்றங்கரையான்" நூலின் பரிமாணமும், திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்களின் கட்டுரையும் ஒரு காரணமாக இருந்தது.

"சந்நிதிச் செல்வம்" பற்றிய விரிவான நூல் ஒன்றினை எழுதுவதற்குப் பல நெஞ்சங்கள் உதவ முன்வந்தன. சந்நிதி பற்றிய தகவல்களைத் தந்தும், வீடியோ ஒளிப்பதிவு நாடாக்களையும் புகைப்படங்களையும் தந்தும் இதனை உருப்பெற உதவிய அன்பர்களுக்கும் ஆலய அர்ச்சகர்களுக்கும் என்றும் கடமைப் பட்டுள்ளேன். இந் நூலுக்கான உணர்வு பூர்வமான முகப்பு ஓவியத்தை வரைந்து தந்த நண்பர் 'ஓவியர் ரமணி'யின் கைவண்ணம் அட்டையை அலங்கரிக்கின்றது.


இந்நூலை எழுதி முடித்தபின் அதற்கான அணிந்துரையைத் தருமாறு கோட்டபொழுது. "சந்நிதியானுக்கு எழுதவேண்டியது எனது கடமை" என்று மனமுவந்து கூறி அது தொடர்பான ஆலோசனையையும் அதற்கான தலைப்பையும் வழங்கிய எனது பெருமதிப்புக்குரிய பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுக்கு 'சந்நிதியானின் கடாட்சம்' என்றும் இருக்கும்.

சந்நிதிச் செல்வத்தைச் சிறப்புற அச்சேற்றித் தந்தவர்கள் யுனி ஆட்ஸ் பிறைவேற் லிமிட்டெற் அச்சகத்தினர். அவர்களது அசுர வேகம் இந்நூலை விரைவில் அச்சேற்றி நூல் உருவில் வழங்கியுள்ளது.

இந்நூல் அழகுற வெளிவர உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது நன்றிகள் என்றும் உளவே.

தெணியம்பைத் தெரு,
வல்வெட்டித்துறை.

அன்பன்
வல்வை. ந. அனந்தராஜ்



# முன்னுரை

வாழ்த்துரையாகவல்ல
கடமையைச் செய்து முடித்துள்ளதற்கான
திருப்தி உரையாக
கார்த்திகேசு சிவத்தம்பி

தொண்டைமானாற்றுச் செல்வச்சந்நிதி கோயில், யாழ்ப்பாண இந்து, சைவ வழிபாட்டு மரபில் மிகவும் முக்கியமான ஓர் இடத்தைப் பெறுவது. அங்கு நிலவி வந்த வழிபாட்டு மரபுகள், யாழ்ப்பாணத்தின் சராசரி "ஆகம" முறைமைக் கோயில்களிலிருந்து பெரிதும் வேறுபட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் கூற்றிலிருந்து கிடைக்கும் தரவுகளை ஒழுங்குபடுத்தி நோக்கும் பொழுது, இக்கோயில் நீண்டகாலமாக ஒரு முக்கிய வழிபாட்டிடமாக (Cult Centre) விளங்கி வந்துள்ளமை தெரிய வருகின்றது. நிச்சயமாக வடமராட்சி, அச்சுவேலி, ஆவரங்கால், தொண்டைமனாற்றுக்குக் கிழக்கேயுள்ள கடற்கரைக் கிராமங்களாகிய பலாலி, மயிலிட்டி, மாதகல் ஆகிய இடங்களில் வாழ்வோர் இதனை ஒரு முக்கிய தலமாகக் கொண்டிருந்தனர் என்பதும் உண்மை. ஆனால் இக்கோயில் பற்றிய சைவநிலைக் கணிப்பு சென்ற நூற்றாண்டின் பின்னரைப் பகுதியிலிருந்தே தொடங்குகின்றதெனலாம். இக்கோயில் பற்றிய புலமைச் சிரத்தை மிகப்பின்பட்டதே.

இதற்குக் காரணங்கள் உள்ளன. இக்கோயிலில் நிலவும் பூசைமுறை, பூசகர்களின் சமூக நிலை என்பன புறக்கணிக்கப்பட முடியாத காரணிகள்.

ஆனால் இப்பொழுது படிப்படியாக ஆராய்ச்சிகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. சந்நிதி வட்டத்துக்கப்பாலான ஆய்வுச் சிரத்தைக்கு எடுத்துக் காட்டு திருமதி நாய்ச்சியார் செல்வநாயகத்தின் கட்டுரை.

யாழ்ப்பாண வாழ்க்கையின் பன்முகப்பாடுகள் துலக்கத்துலக்க சந்நிதி பற்றிய புலமைச் சிரத்தை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

பேராசிரியர் சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாசின் "ஆற்றங் கரையான்" நூலுக்குப் பின்னர் இந்நூல் வருகிறது.

இந்நூலின் முக்கியத்துவம் இது அக்கோயிலின் "உள்வீட்டுப் பிள்ளைகளினுள்" ஒருவரால் எழுதப்படுவது என்பதுதான். திருஅனந்தராஜ் சந்நிதித் திருவிழாவின் பொழுது "பூ எடுக்கும்" ஒருவராகச் சிறுவயது முதலே இருந்தவர். தொடர்ந்தும் சந்நிதியின் கருமங்களில் நிறைந்த ஈடுபாடுடையவர்.

இந்த நூலில், திரு. அனந்தராஜின் சந்நிதி பற்றிய ஒரு "ஒட்டு மொத்தமான" பார்வையைத் தருகிறார். சந்நிதியின் "இருப்பு"ப் பற்றிய சகல அம்சங்களும் இந்நூலில் வருகிறது.

திரு. அனந்தராஜ் தமக்குள்ள கல்விநிலை காரணமாக, சந்நிதியை ஈழத்து முருக வழிபாட்டு "வட்டத்தினுள்" வைத்துப் பார்ப்பதற்கான ஒரு முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

இந்நூலை மிக உன்னிப்பாக வாசித்து விட்டேன் என்று சொல்ல முடியவில்லை. எழுத்துப் பிரதி கிடைத்த சில தினங்களுக்குள் இக்குறிப்பை எழுத வேண்டியுள்ளது. மேலோட்டமாகத் "தட்டிப் பார்க்கும்" பொழுது ஒரு விடயம் என்னைப் பெரிதும் "கவர்கிறது". அதாவது சந்நிதியின் மரபுகளை ஆகம முறைமையிலிருந்து பெரிது வேறுபடும் மரபுகளை விவரிக்க முனைகின்ற பொழுது, அதற்கான "சொல் மரபு" (மொழியியல் மரபில் கூறினால் Register) ஆகம மரபுக்குரிய சொல் முறைமையிலிருந்து அதிலும் வேறுபட முடியாதுள்ள ஒரு "நிர்ப்பந்தம்" நன்கு புலனாகின்றது. அதாவ்து சந்நிதியின் தனித் தன்மைகளை, பொதுப்படியான "ஆகம" முறைமைக்குள் நின்றே பார்க்க வேண்டியுள்ளது. இது ஒரு முக்கியமான விடயமாக எனக்குப்படுகிறது. மதவிவரணம் பற்றிய எங்கள் மொழி ஆகம நெறிமுறைகளினாலேயே தீர்மானிக்கப்படுகிறது.

இதற்குப் பல காரணங்கள் உள்ளன. யாழ்ப்பாணச் சமூகம் மாறி வருகின்றது. இந்தச் சமூகம் அதன் சமூக, மதப்பாரம்பரியத்தில், ஸ்ரீநிவாஸ் கூறுகின்ற "சமஸ்கிருத நெறிப்படுகை"க்கு ஆட்பட்டுவிட்டது. அந்த சமஸ்கிருத மயப்பாட்டின் வருகையை

உட்புகுகையை கோயிற் கிரியைகளிலேயே காணுவது ஆச்சரியமன்று. சமூகத் தேவைகள் ஒருபுறமாக, மறுபுறத்தில் சமஸ்கிருத நெறிப்படுகைக்கான ஒரு மத நம்பிக்கைத் தேவையுமுள்ளது போலவே தெரிகிறது. மற்றக் கோயில்களில் நடைபெறுவது போன்று, இங்கும் முருகனுக்கு இவை இவை சொல்லப்படவேண்டுமென்ற ஓர் உந்துதல் எழுவது இயல்பே.

தெய்வத்தை "மனித நிலை"ப்படுத்தி, அத்தெய்வத்துடன் ஓர் "ஆள்நிலை" (Personal) உறவை ஏற்படுத்துவதுதான் "பக்தி" மார்க்கம். அது தமிழ், இந்தியாவுக்கு வழங்கிய கொடை.

தெய்வத்தை ஆள்நிலைப்படுத்தி அவரோடு அல்ல "அவனோடு" பேசுவது இந்தப் பக்தி மரபின் பிரதான அமிசம். இதற்கு உதாரணமாக நமது உயர்பாரம்பரியத்தில் மகானுபவர்களான நாயன்மார்கள் போன்றவர்களையே உதாரணங் காட்டுதல் மரபு.

ஆனால் சந்நிதியில் இது நாளாந்த நடவடிக்கை. வரும் பக்தர் (ஆண், பெண்) தனது கணக்கு வழக்குகளை விவரிப்பது மாத்திரமல்லாமல் முருகனிடத்தேயே (ஏன் இப்படிச் செய்கிறாய் என்று) கணக்கு வழக்குக் கேட்பது அங்கு நடக்கும் நாளாந்த சம்பவம். அவன் "அமுது", "மருந்தாகும்", அவன் கோயில் விளக்கில் உள்ள எண்ணெய் நிவாரணியாகும். அமுதும், எண்ணெயும் அல்ல முக்கியப்படுபவை, முக்கியப்படுவது அவற்றை அவ்வாறு நோக்கும் "மனநிலை". அந்த விசுவாசம் வந்து விட்டால், தாயுமானவர் சொல்வது போன்று,

*"இன்பநிலை தானேவந்து எய்தும்".*

அந்த உணர்வு இந்த நூலில் தெரிகிறது.

நண்பர் அனந்தராஜை வாழ்த்துகிறேன். இன்னொரு நிலை நின்று பார்த்தால் இது வாழ்த்தப்படவேண்டிய விடயம் அல்ல. திரு. அனந்தராஜ் தனது கடமையை நிறைவு செய்துள்ளார் என்றே சொல்ல வேண்டும்.

*27.06.2001* *அன்புடன்*

*கார்த்திகேசு சிவத்தம்பி*

# 1 ஈழத்தில் முருகவழிபாடு - ஓர் அறிமுகம்

இந்து மதத்தின் பிரிவுகளில் ஒன்றான ‘கௌமாரம்’ என்னும் பிரிவுக்குரிய கடவுளாகப் போற்றப்படுபவர் ‘குமரன்’ ஆகும். சண்முகன், சடாட்சரன், வேலவன், வடிவேலன், சுவாமிநாதன், மயிலேறும் பெருமாள், சேவற்கொடியோன், கந்தன், கடம்பன், கதிர்வேலன், கார்த்திகேயன், பழனியப்பன், குருபரன், குகன், ஆறுமுகன், உமாசுதன், சரவணபவன், மயில்வாகனன், ஞானபண்டிதன், தண்டாயுதபாணி, சேந்தன், சேயோன், விசாகன், தேவசேனாதிபதி என்றெல்லாம் பல்வேறு நாமங்களால் போற்றி வணங்கப்படும் முருகனின் திருநாமம் பரந்துபட்டிருப்பது போல் அவனது வழிபாடும் வியாபித்திருக்கின்றது.

முருகனைக் குறிஞ்சி நிலத் தெய்வமாகவும், தமிழ்க் கடவுளாகவும் வழிபடுவதும், அவனது புகழைப் பாடுவதும் பண்டைத் தமிழர் மரபாக இருந்து வந்தமையைப் பழம் சாசனங்கள், செப்பேடுகள், கல்வெட்டுக்கள் மூலமும், தமிழ் இலக்கியங்கள் மூலமும் அறிய முடிகின்றது.

“இலங்கையின் இந்துப் பாரம்பரியத்தில் செல்வச்சந்நிதி பெறும் இடம்” என்ற கட்டுரையில் முதுபெரும் தமிழ் அறிஞரும், பேராசிரியருமான கா. சிவத்தம்பி அவர்கள், இந்துப் பாரம்பரியத்தில் முருகன் தமிழ்க் கடவுளாக வழிபடப்படுவது பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> “இந்திய இந்துப் பாரம்பரியத்தில் முருகன் தமிழ்ப் பண்பாட்டுக்குச் சிறப்பான இந்துத் தெய்வம் என்பர். இன்றைய நிலையில் காணப்படும் முருக வழிபாடானது தமிழ் நாட்டின் முருக வழிபாட்டுப் பாரம்பரியத்தையும் வட இந்திய ஸ்கந்த மரபினையும் இணைப்பதாக உள்ளது. இந்தப் பண்பாட்டிணைவு திருமுருகாற்றுப் படையிலேயே நிறைவேறிவிட்டது. இந்நூல் ஏறத்தாழ கி. பி. 250 – 600 காப்பகுதிக்குரிய நூலாகும்”

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டது போன்று முருகனைத் தமிழர்களின் கடவுளாகவே வணங்கும் பாரம்பரியம் தமிழகத்திலும் ஈழத்திலும் தொன்று தொட்டு இருந்துவருவதைப் பண்டைய தமிழ் இலக்கியங்கள் வருணித்துள்ளமையைக் காணலாம்.

முருகனைப் பற்றி அருணகிரிநாதர் பாடும்பொழுது.

*"மொய்தான் அணி குழல் வள்ளியை*
*வேட்டவன் முத்தமிழால்*
*வைதாரையும் வாழ வைப்போன்"*

*"செந்தில் வாழ் செந்தமிழ் பெரியோனே"*
*"தண்டமிழ் மிகு நேய முருகேசா"*

என்றெல்லாம் தமிழோடு இணைந்து மனம் நெகிழப் பாடியுள்ளார்.

"ஆலவாய் அவிர் சடைக் கடவுளுடன்
குற்றம் எறிந்த குமர வேலும்
சங்கம் இருந்து *தமிழ்* ஆராய்ந்தான்"

எனத் திருமுறுகாற்றுப்படை தந்த நக்கீரரும்

" *சங்கத் தமிழனின்* தலைமைப் புலவன்"

என குமரகுருபரரும் தமிழ்த் தெய்வமாகிய முருகன் தமிழ் வடிவினனாக விளங்குகின்றான் எனவும் குறிப்பிட்டள்ளனர்.

அதே போன்று முருகனுடன் தமிழில் பேசி அவனுடன் நெருங்கி உறவாடி

*"அரியது கேட்கின் வரிவடி வேலோய்*
*அரிது அரிது மானிடராதல் அரிது"*

என்று தமிழால் நீண்டதொரு பாடலைப் பாடிய ஔவையாரும் முருகனைத் தமிழ்க் கடவுளாகவே நினைந்து உருகியுள்ளார்.

அந்த வகையில் தமிழகத்திலும் ஈழத்திலும் தமிழர்களின் தொன்மையான வழிபாடாக முருக வழிபாடே இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

தென்னிந்தியாவில் எவ்வாறு முருக வழிபாடு முக்கியத்துவம் பெற்று விளங்கியதோ, அவ்வாறே ஈழத்திலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் முருக வழிபாடு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வந்தமைக்கான சான்றாதாரங்கள் காணப்படுகின்றன.

ஆனால் அதே வேளையில் திருமூலர் இலங்கையைச் 'சிவபூமி' என்று சிறப்பித்து பாடியுள்ளமையும் உற்று நோக்கத் தக்கது.

அவரது திருமந்திரத்தின் 2701 ஆவது பாடல் மூலம் இலங்கையின் சிவ வழிபாட்டின் பெருமை கூறப்பட்டுள்ளது. இப் பாடல் கி. மு. 300 ஆண்டுகளுக்கு முன்னர் பாடப்பட்ட பாடலாக அமையலாம்.

*"மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை*
*கூரு மிவ்வானின் இலங்கைக் குறியுறு*
*சாருந் தில்லைவனத் தன்மா மயத்தூ*
*டேறுஞ் சுழுமுனை இவை சிவ பூமியே"*

இப் பாடலைப் பாடிய திருமூலரின் காலம் சோழப் பெருமன்னர் காலத்திற்கு முந்திய காலமானதால், இலங்கைக்கு பௌத்த மதம் பரவுவதற்கு முற்பட்ட காலத்திலேயே இலங்கையில் சைவசமயம் தழைத்தோங்கியிருந்தமையை அறிய முடிகின்றது. இலங்கையில் கி. மு. 3 ஆம் நூற்றாண்டிலேயே 'பௌத்த மதம்' கொண்டுவரப்பட்டமை குறிப்பிடதக்கது.

இலங்கையின் நான்கு திசைகளிலும் காணப்படும் சிவத்தலங்களும், அவற்றைப் பேணி வழிபட்டு வந்த மக்களின் பண்புகளுமே, திருமூலர் இலங்கையைச் 'சிவபூமி' என்று அழைத்தமைக்கான காரணங்களாக இருக்கலாம்.

இலங்கையின் வடக்கே நகுலேஸ்வரமும் (கீரிமலை), திருக்கேதீஸ்வரமும் (தலைமன்னார்), கிழக்கில் திருக்கோணஸ்வரமும் (திருகோணமலை), தெற்கே தொண்டேஸ்வரமும் (மாத்தறையில் உள்ள தெவிநுவர) மேற்கில் முன்னேஸ்வரமும் (சிலாபம்) அமைந்திருந்தன. புகழ்பெற்ற சிவவழிபாட்டுத் தலங்களான இவ்வைந்தும் 'ஈஸ்வரங்கள்' எனப் பெருமைப்படுத்தப்பட்டதாலேயே, இலங்கை 'சிவபூமி' என அழைக்கப்பட்டது.

சிங்கள மக்களின் மூலவர் எனக் கருதப்படும் விஜயன், இலங்கைக்கு வருவதற்கு முன்னரேயே ஈழத்தில் இவ்வைந்து ஈஸ்வரங்களும் இருந்ததாக சிங்கள, பௌத்த வரலாறு கூறும், மகாவம்சம், குறிப்பிடுகின்றது. கி. மு. 5ஆம் நூற்றாண்டில், விஜயன் வருவதற்கு முன்னர், ஈழநாட்டில் சைவம் செழிப்புற்றிருந்ததை " விஜயனின் வருகைக்கு முன்னரும் பின்னரும் ஈழநாட்டில் சைவமே சிறப்புற்றிருந்தது." என வண, வல்பொல இராகுல, எழுதிய "இலங்கையின் பௌத்த வரலாறு" என்னும் நூலில் குறிப்பிடப்பட்டள்ளார். சி. பிரிட்டோ என்ற வரலாற்றாசிரியர் தனது குறிப்பேட்டில்,

"விஜயனதும், அவனது தோழர்களினதும் சமயம் சைவசமயமே என்றும், சைவசமயமே இலங்கையின் மதமாக நீண்டகாலம் விளங்கியது" எனவும்

குறிப்பிடப்பட்டுள்ளமை, இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட இந்துப் பாரம்பரியம் ஒன்று இருந்தமை நிலைநாட்டப்பட்டுள்ளது எனலாம்.

இலங்கையில் உள்ள ஆதிபிராமி சாசனங்களில் 'சிவா' என்ற சொல் ஆட்களின் பெயராகப் பல இடங்களில் காணப்படுவதும் இலங்கையின் ஆதிமதமாகச் 'சைவம்' இருந்தமையையே புலப்படுத்துகின்றது.

இலங்கையின் சிவவழிபாடானது வடக்கு கிழக்கு பிரதேசகளுக்கு வெளியே உள்ள மொனராகலை, பொலநறுவை, அம்பாறை, அநுராதபுரம், அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கண்டி, புத்தளம் ஆகிய மாவட்டங்களிலும் கூடப் பரவியிருந்தமையை சங்ககாலத்துக்குச் சமமான ஈழத்து பிராமிச் சாசனங்களின் மூலமும் அறிய முடிகின்றது.

இவ்வாறு வரலாற்றுக்கு முந்திய காலம் தொட்டு சிவவழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்துவந்த சிவபூமியான இலங்கையில் முருக வழிபாடு எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதும் ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் இலங்கையில் முருக வழிபாடு பரவலாக இருந்து வந்தமையை படைக்கோயிலான கதிர்காமத்து வரலாற்றுடன் சேர்த்தே ஆராயப்படவேண்டியுள்ளது.

ஈழத்தில் உள்ள முருகன் கோயில்களில் திருப்படைக் கோயில்கள் எனப்படும் வேல் வழிபாட்டுத் தலங்களாகக் கதிர்காமம், செல்வச் சந்நிதி, மண்டூர் கந்தசுவாமி கோயில், சித்தாண்டிக் கந்தசுவாமி கோயில் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

கதிர்காமத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் உள்ள பிராமிச் சாசனங்களில் 'குமர' என்ற பெயரில் முடிவடையும் மக்கட் பெயர்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. குருநாகல் மாவட்டத்தில் ஒரு சாசனத்திலும், வவுனியா மாவட்டத்தில் இரு சாசனங்களிலும் 'விசாகன்' என்ற பெயர் காணப்படுகின்றது. வடமொழிக் கதையின்படி கார்த்திகேயேனுக்குரிய சிறப்பான நட்சத்திரம் விசாகமாகும். அதனாலேயே இன்று விசாகலிங்கம், விசாகரூபன், விசாகன் போன்ற மக்கட் பெயர்கள் ஈழத்தில் காணப்படுகின்றன.

இதே போன்று 'வேலு' என்ற பெயரும் இலங்கையின் பல மாவட்டங்களின் பிராமிச் சாசனங்களில் காணப்படுகின்றன. புத்தளம் மாவட்டத்திலும் மூன்று பிராமிச் சாசனங்கள் முருகன் பெயரைக் கொண்டுள்ளன. இவற்றைக் கொண்டு இலங்கையில் தொன்று தொட்டு 'சிவவழிபாடு' நிலவிய அதே காலப்பகுதியில் முருக வழிபாடும் நிலைபெற்றிருந்தமையை அறிய முடிகின்றது.

ஈழத்தின் வடக்கே செல்வச் சந்நிதி தொடக்கம் தெற்கே கதிர்காமம் வரை முருகன் சந்நிதானங்கள் பரந்த அளவில் காணப்படுகின்றன. இவ்வாலயங்களை கோயில் அமைப்பு, விக்கிரங்களின் தன்மை, வழிபாட்டு முறைகள், பூசை முறைகள், வழிபடுவோரின் மனோநிலை ஆகியவற்றைக் கொண்டு இரு வகையாகப் பாகுபடுத்தலாம்.

01. ஆகமம் சார்ந்த முருகன் ஆலயங்கள்.
02. ஆகமம் சாராத முருகன் ஆலயங்கள்.

இலங்கையில் ஆகம விதிப்படி ஆலயங்கள் அமைத்து, வேதாகம நெறிக்கமைய பிராமணர்களால் மந்திரம் கூறிப் பூசைகள் மேற்கொள்ளப்படும் ஆலயங்களாக நல்லூர் கந்தசுவாமி கோயில், மாவட்டபுரம் கந்தசுவாமி கோயில், வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில், கந்தவனக்கடவை ஆகிய ஆலயங்களையும், ஆகமம் சாராத, முறைப்படி மந்திரம் சொல்லிப் பூசைகள் நடைபெறாத, அந்தணர் அல்லாத சாதாரண சூத்திரர்களால் பூசைகள் மேற் கொள்ளப்படும் ஆலயங்களாக செல்வச் சந்நிதி, கதிர்காமம், மண்டூர் முருகன் ஆலயங்களையும் குறிப்பிடலாம். இத்தகைய ஆலயங்களில் ஆகம விதிகள் பின்பற்றப்படுவதில்லை. இங்கு தமிழர்களின் பாரம்பரியமான நெறிமுறைக்குட்பட்ட அன்பு வழிப்பட்ட வழிபாட்டினைக் காணலாம். இத்தகைய ஆலயங்களின் வழிபாடியற்றுவோராக சமூகத்தின் கீழ் நிலையில் இருந்த மக்கள் கூட்டம் பெருமளவுக்குக் காணப்படுகின்றனர்.

ஈழத்தில் திருப்புகழ் பெற்ற முருகன் தலமாக கதிர்காமம் விளங்குகின்றது. இதுவும் விஜயநகர நாயக்க காலத்தில் இலங்கையில் முருக வழிபாடு பெற்றிருந்த சிறப்பைக் காட்டுகின்றது.

*அருணகிரி நாதரின் திருப்புகழில்,*

*"இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்*
*பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே*
*குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா*
*கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே"*

என்ற பாடல் அடிகள் மூலமும்,

*"மணிதரளம் வீசியணியருவி சூழ*
*மரகதம யூரப் பெருமாள் காண்"*

என்ற பல்வேறு அடிகள் மூலமாகக் கதிர்காமத்தின் இயற்கை அழகினையும், கதிர்காமக் கந்தனின் பெருமைகளையும், அவன் அடியார்க்கு வழங்கும் சிறப்புக்களையும், அருணகிரிநாதர் எடுத்துக் கூறியுள்ளார்.

இவ்வாறு சிறப்பிக்கப்பட்ட ஈழத்தின் தொன்மை மிக்க முருகன் தலமான கதிர்காமத்தில் தற்பொழுது *''கப்புறாளைமார்''* எனப்படும் சிங்கள வேடுவர் பரம்பரையினரே பூசைகளை மேற்கொள்கின்றனர்.

இங்கும் செல்வச் சந்நிதி போன்று கப்புறாளைமார் வாயைக் கட்டியபடி பூசைகள் செய்கின்றனர். கதிர்காம உற்சவ காலத்தில் அலங்கரிக்கப்பட்ட பேழையை, முகபடாம் போட்ட யானையின் மீது வைத்து, கூடவே கப்புறாளையும் யானையின் மீது அமர்ந்து வீதியுலா வருவதைக் காணலாம்.

வாயை மூடிக் கட்டி மந்திரமின்றி வழிபாடியற்றும் வழக்கு பண்டைத் திராவிட மக்களின் மரபாகவே காணப்படுகின்றது. அதே போன்று முருகனின் ஊர்தியாக யானையையும் பண்டைய தமிழ் நூல்கள் குறிப்பிட்டுள்ளன. அத்தகைய பண்டைய தமிழர் மரபு இன்றும் கதிர்காமத்தில் பின்பற்றப்படுவது ஈழத்தில் நிலவும் முருக வழிபாட்டின் தொன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

கதிர்காமத்தில் கோயில் கொண்ட கதிர்காமசுவாமியின் பெருமையையும் அருள் ஆட்சியையும் நிலைநிறுத்தும் வகையில், திருக்கோணேஸ்வரத்தில் கோயில் கொண்டருளும் மாதுமை சமேத கோணேசப் பெருமானின் வருடாந்த மகோற்சவத்தின் 14ஆம், 15ஆம், 16ஆம் திருவிழாக்களில் ''கதிர்காம சுவாமி உற்சவம்'' கொண்டாடப்பட்டு வருகின்றது. ''கதிர்காமத்தில் பூசை செய்யும் கப்புறாளை வாய் கட்டி, பூசை செய்வதை நினைவுபடுத்தும் வகையில், கோணேசர் ஆலயத்தில் இடம்பெறும் கதிர்காமசுவாமி உற்சவ நாட்களில் வீதியுலாவில் சுவாமியைத் தூக்கிச் செல்லும் அடியார்களின் வாய்கள் சிவப்புத் துணியினால் கட்டப்பட்டிருக்கும். பாடல்பெற்ற சிவத்தலமான திருகோணேஸ்வரத்திலும் முருக வழிபாட்டின் முக்கியத்துவத்தையும் வியாபகத் தன்மையையும் இக்கதிர்காம சுவாமி உற்சவம் உணர்த்துகின்றது.

தமிழ்க் கடவுள் எனப் போற்றப்படும் முருகனை அடைவதற்கென வள்ளி அவதாரம் செய்த வள்ளிமலை, முருகன் வேடனாகவும், வேங்கை மரமாகவும் தோன்றி நாடகமாடிய கதிர்காமம், முருகனுடன் வள்ளியை விநாயகர் சேர்த்து வைத்த செல்லக் கதிர்காமம் ஆகியன ஈழத்திலேயே காணப்படுவதும் பெருமைக்குரிய விடயமாகும்.

''புத்த மதம், சித்தார்த்தரால் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்பே, இலங்கையில் உள்ள கதிர்காமம் முருக வழிபாட்டுத் தலமாக விளங்கியது. புத்தர், இலங்கைக்கு வந்து விஜயம் செய்த 16 இடங்களில் கதிர்காமமும் ஒன்று'' எனப் பிரபல வரலாற்றாசிரியரும், தொல்பொருள் ஆய்வாளருமான பேராசிரியர் எஸ். பரணவிதாரன 1946 ஆம் ஆண்டில் குறிப்பிட்டுள்ளமையும் மனங்கொள்ளத் தக்கது.

கதிர்காமத்தில் இன்றும் தமிழ், சிங்கள மக்கள் ஒன்று சேர்ந்து 'அரகர' ஒலியுடன், முருகனைப் பக்தியுடன் வணங்குவதையும், கற்பூரச் சட்டிகள், காவடிகள் முதலிய நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதையும் காணலாம்.

இது, ஈழத்தின் முருக வழிபாடானது, இனம், மதம், மொழி கடந்த ஒரு பக்தியுணர்வுடன் கடைப்பிடிக்கப்பட்டு வருவதைப் புலப்படுத்துவதாக உள்ளது.

இலங்கையின் மத்திய மாகாணத்தில் உள்ள கண்டியிலும் முருக வழிபாடானது 17ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே சிறப்பிடம் பெற்றிருந்தது. 18ஆம் நூற்றாண்டில் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனால், கண்டி பெரஹரா ஊர்வலத்தில் புத்த தந்தம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் விஷ்ணுவும், கதிர்காமக் கடவுளும், பத்தினித் தெய்வமும் வைக்கப்பட்டிருந்தன என்று 'றொபேட் நொக்ஸ்' என்ற பிரித்தானிய ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். கண்டியில் இன்றும் சிறப்புடன் வழிபடப்படும் கதிரேசன் கோயில் கண்டியின் முருகவழிபாட்டுப் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டுகின்றது.

கொழும்பில் நடைபெறும் 'ஆடிவேல் விழா' இன்றும் தமிழ் சிங்கள மக்களால் உணர்வுபூர்வமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. மேலும் கொழும்பில் உள்ள கதிரேசன் கோயிலில் இன்றும் பூசைகள், வழிபாடுகள் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றன.

மண்டூர் கந்தசுவாமி கோயில் பூசை முறைகளும் கதிர்காம வழிபாட்டோடு நெருங்கிய தொடர்புடையனவாக உள்ளன. இங்கும் வேற்பெருமானே மூலஸ்தான மூர்த்தியாகவும், எழுந்தருளி மூர்த்தியாகவும் உள்ளார். பூசை வேளைகளில் கூட கதிர்காமத்தைப் போன்று, மண்டூர் கந்தசுவாமி கோயிலின் மூலஸ்தானக் கதவு திரைச் சீலையினாலேயே மூடப்பட்டிருக்கும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் உகந்தை முருகன் கோயிலின் முருகன் அந்தப் பிரதேச மக்களின் காவல் தெய்வமாக விளங்கி வருகின்றான். இங்கும் வேல், பிரதிட்டை செய்யப்பட்டுடள்ளது. கதிர்காமத்திற்குச் செல்லும் வழியில் அடர்ந்த காட்டுப் பகுதியில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டமும் திருகோணமலை மாவட்டமும் சந்திக்கும் வெருகல் ஆற்றின் எல்லையில் வரலாற்றுப் புகழ் பெற்ற வெருகல் சித்திர வேலாயுதர் கோயில் அமைந்துள்ளது. இது இரு மாவட்ட மக்களையும் இணைக்கும் ஆலயமாக விளங்குகிறது.

மட்டககளப்பு மாவட்டத்தில் புகழ் பெற்று விளங்கும் இன்னுமொரு முருகன் ஆலயம் சித்தாண்டிக் கந்தசுவாமி கோயிலாகும். இதுவும் ஒரு திருப்படைக் கோயிலாகும். இக் கோயிலை ஆரம்பத்தில் வேடுவரும், பின்னர் சித்தர் எனப்படும் ஆண்டியும் வழிபாடு செய்து வந்தமையினால் சித்தாண்டி எனப் பெயர் பெற்றதாக ஒரு ஐதிகம் நிலவுகின்றது.

இது போன்று மட்டக்களப்பு பெரிய போரதீவுச் சித்திரவேலாயுத சுவாமி கோயிலும் ஒரு வேற்படைக் கோயிலாகும். இன்று வெல்லாவெளி என வழங்கும் இந்த முருகன் ஆலயம், ஐரோப்பிய காலத்திற்கு முன்பு வேலாயுதர் வெளியில் இருந்ததாகக் கூறப்படுகின்றது. கதிர்காமம் என்ற பெயரை நினைவூட்டும் வகையில் கதிரவெளி என்ற கிராமம் பொலநறுவை மாவட்டத்தில் இன்னும் உள்ளது.

கதிர்காமத்தில் மட்டுமன்றி, ஈழத்தில் புகழ் பெற்ற ஒவ்வொரு முருகன் ஆலயங்களிலும் தமிழர்களுடன் சேர்ந்து பெருமளவிலான சிங்கள மக்களும் உணர்வுபூர்வமாக வழிபாடியற்றி வருவதைக் காணலாம்

சிங்கள மக்கள் பௌத்த மதத்தை தமது மதமாக ஏற்றுப் பின்பற்றி வந்த போதிலும், வரலாற்றுக் காலம் தொடங்கி அவர்கள் முருகனை 'முருக தெய்யோ' என்றும் 'கதரகம தெய்யோ' என்றும் கூறி வழிபட்டு வந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.

விஜயன் ஒரு இந்துவாக இருந்ததுடன் கதிர்காமத்தில் முருகனுக்கு ஆலயம் அமைத்தான் என்று *"யாழ்ப்பாண வைபவமாலை"* கூறுகின்றது. அதே வேளை விஜயனை, அவனது மனைவி குவேனி கொலை செய்ய முற்பட்ட போது கதிர்காமக் கந்தனே காப்பாற்றினான் என்று, *"இராஜவலிய"* என்ற இலங்கையின் வரலாற்று நூல் கூறுகின்றது.

சிங்கள மக்களின் வீரபுருஷனாகக் கருதப்படும் துட்டகைமுனு என்ற சிங்கள மன்னன், எல்லாளன் என்ற தமிழ் மன்னனைத் தோற்கடிப்பதற்காகக் கதிர்காமக் கந்தனுக்கு நேர்த்திக் கடன் வைத்ததாகவும் பின்பு எல்லாள மன்னன், அவனால் தோற்கடிக்கப்பட்டதும் முருகனை வணங்கி, அவனுக்கு ஆலயம் கட்டுவித்தான் என்றும் *"கந்த உபாத"* என்ற சிங்கள வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வட பகுதியில் உள்ள வரலாற்றுப் புகழ் பெற்ற ஆகமம் சாராத இயற்கை நெறி வழிபாட்டுடன் பின்னிப் பிணைந்துவிட்ட தொண்டைமானாறு செல்வச் சந்நிதியின் தோற்றமும், அக்கோயிலுடன் தொடர்பான ஐதிகங்களும் புராண

கால வாலாற்றுடன் தொடர்புபட்டனவாகவே உள்ளன. இங்கும் வேல் வழிபாடே முக்கியத்துவம் பெற்றுள்ளதுடன் இங்கு நடைபெறும் பூசை முறைகள், வழிபாட்டு முறைகள், ஆலய அமைப்பு, உற்சவகாலச் சடங்குகள் என்பன கதிர்காமத்தை ஒத்தனவாகவே உள்ளன.

வட பகுதியில் ஏனைய புகழ் பெற்ற ஆலயங்களில் ஆகம நெறிக்குட்பட்ட ஆலயங்களான மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், மாருதப்புர வல்லியின் குதிரை முகம் நீங்கிய வரலாற்றுடன் பின்னிப்பிணைந்த முருகன் ஆலயமாகும். யாழ்ப்பாணத்து நல்லூர் கந்தசுவாமி கோயில் புவனேகபாகு மன்னனால் கட்டப்பட்டு ஆரிய சக்கரவர்த்திகளால் போற்றப்பட்ட புகழ் பெற்ற ஆலயமாகும். நல்லூர் கந்தனின் எழில் கோலமும், அங்கே நடைபெறும் பூசை முறைகளும் உணர்வு பூர்வமானவையாக இருக்கும். அதனால் அவரை *'அலங்காரக் கந்தன்'* என்று அழைப்பர்.

இவ்வாறு முருக வழிபாடானது வரலாற்றுக்கு முன்பிருந்த காலத்தில் இருந்தே ஈழத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரவியிருந்தமையை அறிய முடிகின்றது.

முருகன் ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக் காலங்களிலும், கந்தசஷ்டி முதலிய விரத காலங்களிலும் கந்தபுராணம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி முதலான முருகன் இலக்கியங்களைக் கோயில்களில் படித்து பயன் கூறுவதும், அவற்றை நூற்றுகணக்கான மக்கள் கேட்டு மெய்மறந்து, முருகன் நாமத்தை உச்சரித்து 'அரஹர' ஒலி எழும்புவதும் இன்றும் காணமுடிகின்றது.

> "தென்னிந்தியாவில் கூட, கந்தப்புராணபடிப்பு யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படுவது போன்று நடை பெறுவதில்லை. அங்கு கந்த புராணத்தை அறிந்தவர்கள் மிகக் குறைவு. இந்தியாவில் வித்துவான்கள், சைவசமயக் குருமார்கள் முதலியோர்களுள் கந்தபுராணம் முதலிய நூல்களை அறிந்தவர்கள் மிகச் சிலரே. ஆனால் யாழ்ப்பாணத்திலோ பெண்களிலும் கூட அவற்றை அறியாதவர் இலர்........" என்று

ஆறுமுகநாவலர் குறிப்பிட்டிருப்பது ஈழத்தில் முருக வழிபாடு பெற்றுள்ள முக்கியதுவத்தையும் அதன் சிறப்பினையும் எடுத்துக்காட்டுகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கந்தபுராணக் கலாச்சார வாழ்வை எடுத்துக் காட்டியமை குறிப்பிடத்தக்கது.

எனவே ஈழத்தில் முருக வழிபாடானது, தமிழர்களின் வாழ்வின் ஒரு அங்கமாகவே பின்னிப்பிணைந்துள்ளதை மக்களின் வாழ்க்கை முறைகளும், வழிபாடியற்றும் தன்மைகளும், பரந்து செறிந்து வியாபித்திருக்கும் முருகன் ஆலயங்களும் என்றும் எடுத்துக்காட்டிக் கொண்டே இருக்கும்.

# 2 சந்நிதிச் செல்வமும் அமைவிடமும்

ஈழத்தின் முருகன் ஆலயங்களில் கதிர்காமம், மண்டூர், செல்வச் சந்நிதி ஆகிய மூன்று முருகன் ஆலயங்களும், ஏனைய முருகன் ஆலயங்களில் இருந்தும் வித்தியாசமானவை. இம்மூன்று ஆலயங்களிலும் 'வேல்' வழிபாடு முக்கியத்துவம் பெற்றுள்ளதுடன், இங்கு பிராமணரல்லாத ஜீவனோபாயத் தொழில் புரிபவர்களே பூசகர்களாக இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் கிடைப்படத்தில் இம் மூன்றின் அமைவிடத்தையும் இணைத்தால் அது முக்கோண வடிவத்தில் அமைந்து 'வேல்' வடிவத்தை நினைவூட்டுகின்றது.

இன்று வடபகுதியில் உள்ள ஆலயங்கள் வேதாகமச் செல்வாக்கினால் ஆகம மரபுகளுக்கு உட்பட்ட போதும், பண்டைய முருக வழிபாடான 'வேல்' வழிபாட்டின் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டும் வகையில், ஆகமம் சாராத மரபுகளுக்குட்பட்ட வழிபாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்ட ஒரு தலமாகச் செல்வச் சந்நிதி ஆலயம் விளங்குகின்றது.

## *வேல் வழிபாட்டின் சிறப்பு*

முருகனின் கையில் உள்ள வேல் அதிக சத்தி வாய்ந்தது. அது சூரபத்மனை அழிப்பதற்காக, உமையவளால் முருகனுக்கு வழங்கப்பட்ட வேல், கூர்முனை பொருந்திய ஆயுதமான வேல், 'ஞானவேல்' என்று கூறப்படுகின்றது.

வேல், எப்பொழுதும் வெற்றிக்கு வழி வகுக்கும். இது பற்றிச் செவ்வந்தி புராணத்தில், சைவ எல்லப்ப நாவலர் பின்வருமாறு குறிப்பிடுவார்:

*"தோகைமேல் உலவுங் கந்தன் சுடர் கரத்திருக்கும் வெற்றி*
*வாகையே சுமக்கும் வேலை வணங்குவ தெமக்கு வேலை"*

'வேலின்' பெருமை பற்றிக் கூறும் பல்வேறு பாடல்கள் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளமை வேலின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

*"தனித்து வழி நடக்குமென திடத்து மொரு வலத்தும்*
*இருபுறத்து மருவடுத்து இரவுபகல் துணையதாகும்"*

என்று அருணகிரிநாதர் வேலின் பெருமை பற்றிக் கூறுகையில் தனிவழி நடக்கின்ற அடியார்களுக்கு வலப்புறமும், இடப்புறமும், முன்னும் பின்னுமாக, இரவும் பகலும் துணையாக 'வேல்' நின்று விளங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

'அச்சமகற்றும் அயில் வேல்' என்று குமரகுருபரரும் , கலியுகவரதனாகிய முருகப் பெருமானுடைய துணை இருக்கும் பக்தர்களுக்கு மரணபயம் இல்லை என்பதை,

*"மரணப் பரமாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை*
*கிரணக் கலாபியும் வேலுமுண்டே"* எனக்

கந்தரலங்காரமும் குறிப்பிடுகின்றது.

விண்ணோர் சிறை மீட்ட வீர வேலாக இருக்கின்ற சக்தி வேலாயுதம் பகைவரைத் துரத்தியடிக்கும் என்பதைப் பாரதியார்,

*"வெற்றிவடிவேலன் அவனுடைய வீரத்தினைப் புகழ்வோம்*
*சுற்றிநில்லாதே போபகையே துள்ளிவருகுது வேல்"*

என்றும் பாடியுள்ளார். இவ்வாறு 'வேலை' வணங்குவதன் மூலம் மரணபயம், அச்சம், தோல்வி, பகைவர் சதி என்பவற்றை நீக்கும் சக்தி ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஊற்றெடுக்கும்.

செல்வச் சந்நிதி மூலஸ்தானத்தில் இருக்கும் வேல்

*"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட*
*தீரவேல் செவ்வே டிருக்கை வேல் – வாரி*
*குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்*
*துளைத்தவேல் உண்டே துணை"*

என்று சந்நிதி வேலின் பெருமை புகழப்படுகின்றது.

## அமைவிடம்

இவ்வாலயம் ஈழவள நாட்டின் யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமாராட்சிப் பிரதேசத்தின் மேற்கு முனையாக விளங்கும் தொண்டைமானாற்றங்கரையில் அமைந்துள்ளது. இதனாலேயே சந்நிதி முருகன் 'ஆற்றங்கரையான்' என்று சிறப்பித்துப் போற்றப்படுகின்றான்.

யாழ் குடா நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதியாக வடமராட்சிப் பிரதேசம் அமைந்துள்ளது. முன்னர் வட மறவர் என்ற குறுநில மன்னர் ஆட்சி செய்த இடமாக இருந்தமையால் வடமறவர் ஆட்சி என அழைக்கப்பட்டுப் பின்னர் வடமராட்சி என மருவி நிலைபேறடைந்துள்ளது.




யாழ்குடா நாடு.

'வடமராட்சி' என்பது பல கிராமங்களைத் தன்னகத்தே கொண்ட வரலாற்றுப் பெருமை மிக்க பரந்த நிலப்பரப்பாகும். யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர் ஆட்சி செய்த காலத்தில் நடைமுறையில் இருந்த நிர்வாகப் பிரிவுகளில் ஒன்றுதான் இந்த 'வடமராட்சி'.

இது வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு, வடமராட்சி தெற்கு, மேற்கு என்ற உதவி அரசாங்க அதிபர் (பிரதேச செயலர்) பிரிவுகளைக் கொண்ட மூன்று நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நிலப் பரப்பளவிலும், சனத்தொகையிலும் குடாநாட்டின் முக்கிய பகுதிகளில் ஒன்றாக வடமராட்சிப் பகுதி விளங்குகின்றது.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற பிரசித்தி பெற்ற துறைமுகப் பட்டினங்களையும், கற்கோவளம், அம்பன், குடத்தனை, நாகர்கோயில் போன்ற தொன்மை வாய்ந்த கடல்சார் கிராமங்களையும், தும்பளை, புலோலி, அல்வாய், வதிரி, கரவெட்டி, கரணவாய், துன்னாலை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு போன்ற பாரம்பரிய பகுதிகளையும் கொண்டதாக வடமராட்சிப் பிரதேசம் அமைந்துள்ளது. (வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும், இலக்கிய வளமும், கலாநிதி எஸ். சிவலிங்கராஜா – 1984)

வடமராட்சியில் உள்ள இரு நகர சபைகளுள் ஒன்றாக இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் அரசியல், சமூக, வரலாற்றுப் பெருமைகளையும் கொண்டதாக வல்வெட்டித்துறை நகர சபை விளங்குகின்றது.

வல்வெட்டித்துறை நகர சபையின் வடக்கு எல்லையாக பாக்கு நீரிணையும், கிழக்கு எல்லையாகப் பொலிகண்டியும், தெற்கு எல்லையாக வல்வெட்டி, கெருடாவில் கிராமங்களும், மேற்கு எல்லையாகத் தொண்டைமானாறும் அமைந்துள்ளன.

## தொண்டைமான் ஆறு

வல்வெட்டித்துறை நகர சபையின் முக்கிய கிராமங்களில் ஒன்றாக விளங்கும் தொண்டைமானாற்றிலேயே வரலாற்றுப் புகழ்பெற்ற 'செல்வச் சந்நிதி ஆலயம்' அமைந்துள்ளது.

தொண்டைமானாறு கிராமத்தைப் பற்றிய குல சபாநாதனின் குறிப்பேட்டில் இருந்து எடுத்த தகவல்களை, பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் தமது 'ஆற்றங்கரையான்' என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்:

> "வட இலங்கையின் வடமராட்சிப் பகுதியில், தொண்டைமானாறு என்னும் புராதன நகரம் உண்டு. கருணாகரத் தொண்டைமான் என்னும் சிற்றரசனுடன் தொடர்பு கொண்ட நகரமானதால், இப் பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது. முதலாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக் காலத்தில் (கி. பி. 1070 – 1120) அமைச்சராகவும், படைத்தலைவனாகவும் விளங்கியவன் பல்லவர் குலத் தோன்றலாகிய கருணாகரத் தொண்டைமான் இவனது முழுப் பெயர், பல்லவராய திருவரங்க கருணாகரத் தொண்டைமான் என்பதாகும். குலோத்துங்க சோழன் கலிங்கப் போரில் வெற்றியீட்டியதை நினைவுறுத்தி நிற்பது, சயங்கொண்டாரால் பாடப்பட்ட "கலிங்கத்துப் பரணி" என்ற நூலாகும். இத்தகைய வல்லமை வாய்ந்த குலோத்துங்க சோழனின் ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்களில் ஒருவனாகக் காஞ்சியில் இருந்து ஆட்சி புரிந்தவன் கருணாகரத் தொண்டைமானின் தமையன் ஆவான். இவன் தொண்டை நாடு முழுவதையும் ஆட்சி புரிய, இவனுடைய தம்பி கருணாகரன், வண்டை நகரின் கண் இருந்து தொண்டை நாட்டின் ஒரு பகுதியை ஆட்சி செய்தான்."

கருணாகரத் தொண்டைமான் 'வண்டையர்க்கரசு' என கலிங்கத்துப் பரணியில் சிறப்பித்துப் பாடப்படுகிறான்.

இவ்வாறு பெருமையுடன் ஆட்சி புரிந்த கருணாகசரத் தொண்டைமானுக்கும் தொண்டைமானாறு நகரத்திற்கும் உள்ள தொடர்பைப் பற்றி, முதலியார் செ. இராசநாயகம் தனது "யாழ்ப்பாணச் சரித்திரம்" என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> "பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில், குலோத்துங்கன், சோழநாட்டிலே தன்னரசை நிலைநிறுத்திய பின், தன் தளகர்த்தனாகிய கருணாகரத் தொண்டைமானுடன் தண்டனுப்பி, இலங்கையையும், கலிங்கத்தையும் வெற்றிகொண்டான் என அவன் சாசனங்கள் கூறும். இலங்கைப் போர் கலிங்கப் போருக்கு முந்தியது எனக் கலிங்கத்துப் பரணியால் அறியக்கிடத்தலின் விஜயவாகு இறந்த பின் கி. பி. 1110 ஆம் ஆண்டளவில் இலங்கைப் போர் நடந்த தெனத் தீர்மானிக்கலாம். கருணாகரன் இலங்கைக்குப் படை எடுத்து வந்தபொழுது, யாழ்ப்பாணத்தில் கரணவாய், வெள்ளைப்பரவை என்னுமிடங்களில் உப்பு அளவின்றி விளைந்து அழிந்து போவதைக் கண்டு அவ்வுப்பைச் சோழ தேசத்திற்கு அனுப்புவதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்தான். அவனுடைய உப்பேற்றும் மரக்கலங்கள், காற்றின் உக்கிரத்திற்கு இலக்காகாது ஒதுங்கி நிற்கக் கூடிய ஒரு துறையாக தொண்டைமானாற்றை வெட்டுவித்து இப்போது உரும்பிராயக் குறிச்சியில் இருக்கும் கருணாகரப் பிள்ளையார் கோவிலையும் கட்டுவித்தான்"
> (இராசநாயகம், செ. யாழ்ப்பாணச் சரித்திரம்.)


இக் குறிப்புக்கள் தொண்டைமானாறு கிராமத்தின் வரலாற்றுப் புகழை எடுத்தியம்புகின்றன.

இங்கு தொண்டைமானினால் வெட்டப்பட்ட 'தொண்டைமானாறு' பல நூறு வருடங்களுக்கு முன் புராண காலத்துடன் தொடர்புபட்டிருந்த 'வல்லிநதியாறு'டன் இணைந்த பகுதியாகும். முன்பு கடலுடன் சங்கமித்த இந் நதியை அண்டிய பகுதியில் உள்ள பரந்த பாலை நிலப் பகுதி, வல்லிப் பெருவெளியாக விளங்கி பின்னர் வல்லைப் பெருவெளி என அழைக்கப்பட்டது. இந் நதியின் மேல், தென்புறமாக அமைந்த பாலம் வல்லைப் பாலம் என்றும் கூறப்பட்டது. இந்த வல்லி நதியின் தொடுவாயிலையே, கருணாகரத் தொண்டைமான் வெட்டி ஆழப்படுத்தி கடலுடன் சங்கமிக்க விட்டதால் அது தொண்டைமான் ஆறு ஆகியது. அதுவே இன்றைய தொண்டைமானாறு என அழைக்கப்படுகிறது.

இத்தகைய புராணகால வரலாற்றுப் பெருமை கொண்ட தொண்டைமானாற்றின் கரையோரமாக சுழிமுகத்துக் கண்மையிலேயே செல்வச் சந்நிதி முருகன் கோயில் அமைந்துள்ளது.

இக்கோயிலுக்குச் சின்னக் கதிர்காமம், செல்லக் கதிர்காமம், கல்லோடை என்றும் பெயர்கள் உண்டு.

சந்நிதியின் தோற்றம், அமைப்பு, வழிபாட்டு மரபுகள் என்பன தனித்துவமானவை. இங்கு வானளாவ எழுந்த கோபுரங்களோ, தூபிகளோ, கட்டிடங்களோ, விமானமோ இல்லை. ஆலயத்தின் எந்தச் சூழலில் இருந்து பார்த்தாலும் முருகனையும் அங்கே காட்டப்படும் தீபாராதனைகளையும் பார்க்கக் கூடிய வகையில் அதன் அமைப்பு மிக எளிமையாக உள்ளமையே சந்நிதியின் சிறப்பான அம்சமாகும். ஆலய முகப்பில் சாதாரண பக்தர்களாலும் தொட்டுப் பூசிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள நந்தியும், சுற்றவரவுள்ள அன்னதான மடங்களும், மருதமரக்காடும், பாக்கு நீரிணைக் கடலும் 'சந்நிதிக்கு' மேலும் பெருமை சேர்ப்பனவாக உள்ளன.



மூலஸ்த்தான மூர்த்திக்கு தீபாராதனை காட்டும் காட்சி.


# 3 செல்வச் சந்நிதியின் தோற்றம்

மெய் சிலிர்க்க வைக்கும் அற்புதங்களையும் வரலாற்றுப் பாரம்பரியங்களையும் கொண்ட தொண்டைமானாற்றில் ஆற்றங்கரையோரமாக அமைந்து அருள் பாலிக்கும் செல்வச் சந்நிதி ஆலயம் – காலம் குறிப்பிட்டுக் கூறமுடியாதபடி பல ஐதீகங்கள் நிறைந்த தொன்மை வாய்ந்த ஒரு ஆலயமாக விளங்குகின்றது.

ஒரு கோயிலின் வரலாற்றுடன் ஐக்கியமாகிவிட்ட ஐதீகங்களும், புராண வரலாறுகளும் அதன் வழிபாட்டுக் குழுமத்தினால் மரபு வழியாகப் பரம்பரை பரம்பரையாக பின்பற்றப்படும் பொழுது அதுவே அந்தக் கோயிலின் வரலாறாக எழுதப்படுவதும் தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. அந்த வகையில் செல்வச் சந்நிதியின் ஐதீகங்களுடனும் புராண, இதிகாச சம்பவங்களுடனும் தொடர்புபட்ட முறையிலேயே அதன் வரலாறும் மரபுகளும் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன.

இன்று தொண்டைமானாறு என்று அழைக்கப்படும் ஆறு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு சிறியதொரு நதியாக வல்லி நதியாறு என்று அழைக்கப்பட்டு வந்தது என முந்திய இயலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முருகப்பெருமான் திருச்செந்தூரில் இருந்து கொண்டு வீரவாகு தேவரை அழைத்து மகேந்திரபுரியில் உள்ள சூரபத்மனிடம் தூதாக அனுப்பிய வேளை, வீரவாகு தேவர் முருகனின் கட்டளையைச் சிரமேற் கொண்டு, இந்த வல்லி நதிக் கரையின் கல்லோடைப் பகுதியில் கால்வைத்துச் சென்றதாக ஒரு ஐதீகம் நிலவுகின்றது. அப்பாதச் சுவடுகள் இன்றும் கல்லோடைப் பகுதியில் காணப்படுகின்றன. சூரபத்மனிடம் சென்று விட்டுத் திரும்பிய வேளை சந்திக் காலமாகிவிடவே முருகப் பெருமானுக்குச் சந்திக் காலப் பூசை செய்ய வேண்டிய பணி அவரது மனதில் உதித்தது. அந்தக் கணமே, கல்லோடைப் பகுதியில் தரித்து நின்ற வீரவாகு தேவர் அவ்விடத்தில் வேல் ஒன்றைப் பிரதிட்டை செய்து, சந்திக் காலப் பூசை வழிபாட்டினை மேற்கொண்டார். அதனைத் தொடந்து முனிவர்களும், சித்தர்களும், யோகிகளும் இவ்விடத்தில் தவம் செய்து முக்தி அடைந்ததாகக் கருதப்படுகின்றது.



வீரவாகுதேவர் திருச்செந்தூர் செல்லும் வழியில் தற்போது ஆலயம் அமைந்துள்ள பகுதியில் ஆற்றங்கரை மர நிழலில் தங்கி வேல் ஒன்றை வைத்து சந்திக்கால பூசை செய்தார்.

இவ்வாறு வீரவாகு தேவர் மற்றும் முனிவர்கள், யோகிகள், ஞானிகள் என்போர் கல்லோடையில் கந்தனை நினைத்துப் பூசித்து வந்ததால் சந்நிதிக் கந்தன் "கல்லோடைக் கந்தன்" என்றும் அழைக்கப்படுகின்றான்.


இது போன்று செல்வச் சந்நிதி ஆலயத்துடன் தொடர்பான இன்னுமொரு ஐதீகமும் பாரம்பரியமாக நிலவுன்றது.

வியாழ பகவானின் கட்டளைப்படி ஒழுகத் தவறிய தேவலோக கந்தர்வனான "ஐராவசு" என்பவனை யானையாகப் போகுமாறு சாபம் கொடுத்தார். வியாழ பகவானின் சாபத்திற்கு ஆளான "ஐராவசு" யானை உருவில் கதிர்காமத்தைச் சூழ உள்ள அடர்ந்த காட்டில் அலைந்து திரிந்தான். யானை உருவில் அலைந்து திரிந்த ஐராவசு, பல அட்டகாசங்களைச் செய்து வரும் வேளையில் சிகண்டி முனிவரையும் தாக்க முற்பட்டான்.

அந்த யானையின் அட்டகாசத்தைக் கண்ட சிகண்டி முனிவர், அதனுடைய பூர்வீக வரலாற்றைத் தன் ஞான திருஷ்டியால் அறிந்ததும், *"வெற்றிலை நுனி"* ஒன்றினால் வேற்பெருமானை நினைத்து 'சடாட்சர மந்திரத்தை' உச்சரித்தபடி மதங்கொண்ட யானையின் நெற்றியில் அடித்தார். உடனே அந்த வெற்றிலை நுனி வேலாக மாறி யானையைத் தாக்கவே அது அலறித் துடித்தபடி வீழ்ந்து, மீண்டும் கந்தர்வனாக உருவெடுத்தது. பழையபடி ஐராவசுவாக உருமாறிய கந்தர்வன் தனக்கு முக்தி அளித்து அருள வேண்டுமென சிகண்டி முனிவரை வணங்கி நின்றான். அவனுடைய வேண்டுதலுக்கு இரங்கிய சிகண்டி முனிவரும்,

"நீ வடபால் சென்று சந்நிதி தலத்திலே கோயில் கொண்டருளும் வேற்பெருமானை வணங்கி முக்தி அடைவாயாக" என்று கூறி தொண்டைமானாறு செல்வச் சந்நிதிக்கு ஆற்றுப்படுத்தினார். கந்தர்வனும் அவ்வாறே வட பகுதி சென்று, சந்நிதிக் கல்லோடைத் தலத்தில் வந்து தியானம் செய்தான். அங்கே உள்ள வரலாற்றுப் பெருமை படைத்த தலவிருட்சமாக விளங்கும் பூவரச மரத்தின் கீழ் முக்தி அடைந்ததாகவும் கூறப்படுகின்றது.

சிகண்டி முனிவரால் வேல் வடிவிலான வெற்றிலை நுனியினால் மதங்கொண்ட யானையை அடித்து கந்தர்வனை முக்தி அடையச் செய்த வரலாற்றை நினைவு படுத்தும்முகமாகவே, இன்றும் எழுந்தருளி வேலின் முகப்பில் வெற்றிலை நுனி வைக்கப்பட்டு வருகின்றது.



வியாழபகவானிடம் உபதேசம் பெற்றுக் கொண்டிருந்த கந்தருவன் கவனத்தை வேறு திசையில்விட சினமடைந்த பகவான் அவனை யானையாக அலையுமாறு சபித்தார். அந்த யானை இலங்கையின் தென் பகுதி காடுகளில் அலைந்தது.

அமைதியான சூழலில் பல நூறு வருடங்களுக்கு மேலாக அருள்பாலித்துக் கொண்டிருந்த முருகன் ஆலயம் கி. பி. 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டது. அதன் பின்னர் ஒல்லாந்தர் காலத்தின் இறுதிப் பகுதியிலேயே 'மருதர்' கதிர்காமரினால் இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு வழிபாட்டிற்குரியதாகியது.

'கோயில் வரலாறு' பற்றிய குல சபாநாதனின் குறிப்புக்களில் இருந்து 'சந்நிதி' கோயிலின் அற்புதத்தை அறிய முடிகின்றது.

"அநாதி மல முத்தனாகிய முருகப் பெருமான் சந்நிதியில் எப்பொழுது கோயில் கொண்டெழுந்தருளினார் என்ற சரித்திர ஆராய்ச்சியில், சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய மக்கள் ஈடு பட்டு உண்மை காண்பதரிது. பண்டைக் காலத்தில் ஈழத்தில் சைவசமயம் சிறப்புற்று ஓங்கிய பொழுது, செல்வச்சந்நிதி முருகன் கோயில் பல வீதிகளுடைய சிறந்த ஆலயமாக விளங்கியது. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் (டச்சுக்காரர்) இலங்கையில் ஆட்சி புரிந்த காலத்தில் தத்தம் சமயக் கொள்கைகளைப் பரப்பியது மன்றி சைவக் கோயில்களைத் தகர்த்து அவை இருந்த இடமும் தெரியாமல் தரைமட்டமாக்கிவிடும் கைங்கரியத்திலும் ஈடுபட்டிருந்தனர். கதிர்காமத்தை இடிக்கச் சென்ற ஒல்லாந்தர் வழி தடுமாறி மயங்கிக் கடைசியில் அதனை அடைய முடியாது திரும்பி வந்து விட்டதாக ஒல்லாந்தரே எழுதிய சரித்திரத்தில் குறிப்பிட்டிருக்கின்றனர். அதுபோலவே சந்நிதியிலும் ஒரு திருவிளையாடல் நடைபெற்றது. செல்வச்சந்நிதி முருகன் கோயிலை இடிக்கச் சென்ற ஒல்லாந்தர் அதனை முற்றாக இடிக்க முடியாது திரும்பிவிட்டனர்".

ஒல்லாந்தரின் ஆட்சிக்கால முடிவில் மீண்டும் ஈழத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்கத் தொடங்கியது. அவர்களது ஆட்சிக் கால முடிவில், சமய சுதந்திரம் ஓரளவு கிடைத்ததும் தொண்டைமானாற்றில் வாழ்ந்த செட்டிமார் என்னும் பிரிவினர் அந்த இடத்திலேயே சிறு கோயில் ஒன்றை அமைத்து வழிபட்டு வந்தனர். அவர்களும் பின்னர் அதனை முறையாகப் பேணாததுடன், தமக்குத் தாமே பிணக்குப்பட்டு பூசைகள் செய்யாது கோயிலைப் பூட்டி வைத்திருந்தனர். இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சுப்பிரமணியர் தன்னை இடைவிடாது வணங்கி வரும் மருதர் கதிர்காமரிடம் தன்னைப் பூசித்து வழிபடும் உரிமையைக் கையளிக்கத் திருவுளம் கொண்டார்.


தொண்டைமானாற்றில் கடற்தொழில் செய்து சீவியம் நடத்தும் மருதர் கதிர்காமரிடம் ஆடு மேய்க்கும் சிறுவனாகத் தரிசனம் கொடுத்து.

"அடேய் கதிர்காமா! .......... நான் எத்தனை நாளாகப் பசி கிடக்கிறன். என் பூசையைச் செய்வாயா?" என்று கேட்டார் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்த கதிர்காமர்,

"சுவாமி!........... நானோ கடல் தொழில் செய்பவன். கிஞ்சித்தேனும் கல்வியறிவில்லாதவனாகிய எனக்குப் பூசை செய்யும் முறைகள், மந்திரங்கள் எதுவும் தெரியாது ............ என்னால் எப்படிப் பூசை செய்ய முடியும்?"


என்று உள்ளம் நெகிழ்ந்து போய் மன்றாடினார்.

"நீ வாய் கட்டி மந்திரமின்றிப் பூசை செய்யலாம்" என்று சொல்லியருளினார்.



அதற்கும் தயங்கிய மருதர் கதிர்காமருக்குப் பல சோதனைகளைக் கொடுத்த முருகன் அவரைக் "கண்ணை மூடுக!" எனப் பணித்து அங்கிருந்தபடியே ஒரு இமைப்பொழுதிற்குள் கதிர்காமம் அழைத்துச் சென்று அங்கே நடைபெறும் பூசை முறைகளைக் காட்டி அவரிடம் பிரதிட்டை செய்து வழிபட ஒரு வெள்ளி வேலையும் வழங்கினார்.

முருகனின் கட்டளையைக் கேட்ட கதிர்காமர் தெரியாது எனக் கூற அதற்கு முருகன் கண்களை மூடுக எனக் கூறி நொடிப்பொழுதில் கதிர்காமம் அழைத்துச் செல்கின்றார்



கதிர்காமத்தில் பூசைகள் நடைபெறும் முறையை கதிர்காமர் அவதானிக்கிறார் அதேமுறையில் வாய்கட்டி மந்திரமின்றி பூஜை செய்க என முருகன் கூறுகின்றார்.

மருதர் கதிர்காமர், கதிர்காமத்தில் கிடைத்த வேலைக் கொண்டு பூசை செய்ய முற்பட்ட போது முன்னர் தமக்குள் பிரச்சினைப்பட்டுக் கொண்டிருந்த செட்டிமார், அவரைப் பூசை செய்ய விடாது தடுத்தனர்.


இதனால் மனமுடைந்த மருதர் கதிர்காமர் முருகனை நினைந்து வணங்கிய பொழுது, முருகன் அவரது கனவில் தோன்றி,

"கதிர்காமா..... நீ இந்த வேலை, அன்னதான மடத்தில் வைத்துப் பூசை செய்யலாம். இவர்கள் இந்த இடத்தை விட்டு இரண்டு வருடத்தின் பின் இல்லாது போய்விடுவார்கள். அதன் பின் ஆறு மாதத்திற்குள் பூசைகள் இல்லாமல் கதவு பூட்டப்பட்டிருக்கும். அதற்குப்பின் இங்கே உள்ளவை எல்லாம் உனக்கே வரும்".

என்று சொல்லி அருளினார். மருதர் கதிர்காமரும், முருகனின் உத்தரவுப்படியே அன்னதான மடத்தில் வேலை வைத்துக் கிரமமாகப் பூசைகள் செய்து வந்தார். அந்தக் காலத்தில்தான் செட்டிமார் தமக்குள்ளேயே மீண்டும் பிரச்சினைப்பட்டு, ஆலயக் கதவையும் பூட்டிக் கொண்டு வெளியேறி விட்டார்கள். அன்று தொடக்கம் இரண்டு வருடத்தினுள் ஊனமான ஒரு செட்டியைத் தவிர ஏனையோர் எல்லோருமே அழிந்து விட்டனர். எஞ்சியிருந்த அந்த ஊனமான செட்டி, தமது தவற்றை உணர்ந்தோ என்னவோ அக்கோயிலின் உடைமைகள் யாவற்றையும் கோயில் வாசலில் கொண்டு வந்து மருதர் கதிர்காமரை அழைத்து ஆலயத் திறப்பையும் கொடுத்து விட்டு அகன்று சென்றார்.

அன்று அவரிடம் திறப்பை வாங்கிய மருதர் கதிர்காமர் முழு ஆலயத்தையும் பராமரித்து கிரமம் தவறாது பூசைகளைச் செய்து வந்தார்.

கதிர்காமத்தில் பூசை முறைகளைப் பார்த்த கதிர்காமர் முருகப்பெருமான் காட்டிய இடத்தில் ஆலயம் அமைத்து முருகனின் வேண்டுகோளின் படியே அறுபத்தைந்து ஆலம் இலைகளில் அமுது படைத்துச் சைவ ஆசாரங்களை மேற்கொண்டு வாய் கட்டிப் பூசை செய்து வந்தார். பூசை முடிந்ததும் பக்தர்களின் முன் திருநீற்றுத் தட்டினை நீட்டி திருநீற்றை எடுக்கும்படி மருதர் கதிர்காமர் கூறுவார்.



இப்படி பூசை நடைபெற்று வரும்போது இடையிடையே முருகன் காட்சி தந்து கோவிலுக்கு முன்புறத் திண்ணைகளில் அமர்ந்து கதிர்காமருடன் முன்னைய சம்பவங்களையும் கோவில் பூசை முறைகளையும் பற்றி

அப்பொழுது திருநீறு கொடுக்கும் முறை தெரியாது துயருற்ற கதிர்காமருக்கு முருகப் பெருமான் மீண்டும் காட்சி கொடுத்து,

*"கதிர்காமா...... நீ திருநீற்றை எடு. நான் கொடுக்கின்றேன்"* என்று கூறி மறைந்தார்.

அன்று தொடக்கம் இன்று வரையில் செல்வச் சந்நிதியில் முருகனே "பூசகர்" உருவில் வந்து திருநீற்றை வழங்குவதாக பக்தர்கள் கருதுகின்றனர். பூசை முடிந்ததும், கோயிலின் பிரதம பூசகரால் திருநீறு வழங்கப்பட்டு வரும் போது, பூசகரின் காலைத் தொட்டு வணங்கித் திருநீற்றை பயபக்தியுடன் குனிந்து பெற்றுக் கொள்வார்கள். அவ்வாறு வணங்கித் திருநீற்றைப் பெறுபவரின் தலைமீது திருநீறு போடப்பட்டிருப்பதைக் காணலாம். இவ்வாறு தலையில் இடப்படும் திருநீறு முருகப் பெருமானால் இடப்படுவதாகவே பக்தர்கள் எண்ணிப் பரவசமடைகின்றார்கள்.

இவ்வாறு பூசைகள் நடைபெற்று வரும் காலத்திலேயே, மீண்டும் முருகன், அவரது கனவில் தோன்றி " எனக்குத் திருவிழா நடத்த வேண்டும். பத்தாம் பதினைந்தாம் நாட் திருவிழாக்களில், நானே ஆட்களுடன் ஆளாக உலாவந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு திரிவேன்" என்று கூறியதுடன்,

"நிவேதனப் பொருள் என்ன வந்தாலும், சுவாமிக்கென்று வை. அவற்றை நாலாகப் பிரித்து மூன்று பங்கையும் அவித்துக் குவித்துப் போட்டுக் கதவைத் திறந்து கற்பூரத்தைக் கொழுத்திவை. அதுவே எனக்குச் சந்தோஷம். கொண்டு வந்தவனுக்கும் சந்தோசம். அவனுக்கு மாத்திரமன்றிநீயும் கொண்டு போய் சாப்பிடு. வந்தவர்களுக்கும் கொடு. வாயைக் கட்டிப் பூசை செய்".

என்று திருவிழா முறைகளையும் கூறி வழி நடப்பித்தார்.

சந்நிதியானுடன் நேருக்கு நேராக நின்று ஒட்டி உறவாடும் மருதர் கதிர்காமருக்கு முருகன் சிறுவனாகவும் வயோதிபராகவும், இன்னும் பல தோற்றங்களிலும் அடிக்கடி அழகழகாகக் காட்சி கொடுத்து, ஆலயத்தின் முன் புறம் உள்ள திண்ணைகளில் எதிரும் புதிருமாக அமர்ந்து, கோயிற் பூசை

முறைகளைப் பற்றியும் கோயில் அமைந்திருக்கும் இடத்தின் சிறப்பைப் பற்றியும் பேசிக் கொண்டே இருப்பர். கதிர்காமரும் முருகனின் வழிக்காட்டலின்படி பூசைகளையும் திருவிழாக்களையும் செய்து வந்தார்.

முருகப் பெருமானும் கதிர்காமரும் அமர்ந்து உரையாடியதாகக் கூறப்படும் இரு திண்ணைகளும் ஆலய நந்திக்குப் பின்னால் இன்றும் பேணப்படுகின்றன. அவரைத் தொடர்ந்து அவருடைய பரம்பரையினரே செல்வச் சந்நிதி முருகனுக்குரிய பூசைகளையும் திருவிழாக்களையும் சைவ ஆசாரத்துடன் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எளிமையும் அழகும் நிறைந்த சந்நிதியின் மூலஸ்தானம், மகாமண்டபம், முகப்பு மண்டபம், பூங்காவன மண்டபம், மணிக் கூட்டுக் கோபுரம் ஆகியன 1986 ஆம் ஆண்டு மோட்டார் தாக்குதலினாலும், செல் தாக்குதலினாலும், விமானக் குண்டு வீச்சுக்களினாலும் அழிக்கப்பட்டு பூசைகள், வழிபாடுகள் யாவும் நிறுத்தப்பட்டிருந்தன.

மீண்டும் 1988 ஆம் ஆண்டின்பின் சந்நிதியான் அடியார்களினாலும், ஆலயத்தின் பூசகர்களினாலும் எத்தனையோ முயற்சிகளின் மத்தியில் ஆலயம் புணரமைப்பு செய்யப்பட்டு பழைய தோற்றத்தைப் பெற்று, அடியார்களின் மனக் குறை தீர்க்கப்பட்டது.

ஆனாலும், இலங்கையில் மிகப் பெரிய சித்திரத் தேர் என்ற பெருமையைப் பெற்ற சந்நிதியானின் எரிந்த சித்திரத் தேரின் சாம்பல் மேடும், உருக்குலைந்த தேர் முட்டியும், காண்டாமணி இல்லாத நெடிதுயர்ந்த மணிக் கோபுரமும் இன்றும் சந்நிதியின் துயர் படிந்த சுவடுகளை நினைவூட்டிக் கொண்டே இருக்கின்றன.



வேலவன் வீதியுலாவின் போது கைலாலய வாகனத்தில் வரும் காட்சி

# 4 சந்நிதியின் பூசை முறைகள்

ஏனைய இந்து ஆலயங்களில் இல்லாத பூசைமுறைகளும், கிரியைகளும் சந்நிதி ஆலயத்தில் மேற்கொள்ளப்படுவதால், பூசகராக ஒருவர் தன்னைத் தகுதியுடையவராக்குவதற்குச் சில நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

திருமணம் முடித்த வயது வந்தவர்கள் கெருடாவில் சைவக் குருக்களிடம் சென்று, தீட்சை பெற்ற பின்னர், சந்நிதியின் முதிர்ந்த அனுபவம் பெற்ற பூசகர் ஒருவரிடம் இருந்து பூசை முறைகளைக் கற்றுக் கொண்ட பின்னரே, அவர் வேலவனுக்குப் பூசைகள் செய்வதற்கு அருகதையுடையவராகப்படுகின்றார். அனுபவம் பெற்ற மூத்த பூசகர் ஒருவரின் மேற்பார்வையில் அவரது முதலாவது பூசை இடம் பெறும்.

தினமும் நித்திய பூசைக்கு முன்னர் இவ்வாறு தகைமை பெற்ற பூசகர்

01. கண்டய மாலை
02. பட்டு வேட்டியும் பட்டு வஸ்திரமும்
03. வாய் கட்டி வழிபாடியற்றும் வெள்ளைத் துணி– இது மூக்குத் துண்டு எனப்படும்.

ஆகிய மூன்றையும் வீட்டில் இருந்து பனை ஒலைப் பெட்டியில் எடுத்து வந்து ஆலயத்தினுள் உள்ள கிணற்றில் குளித்த பின் இவற்றை அணிந்து ஆலயத்தின் மகா மண்டபத்தினுள் சென்று பூசை வழிபாடுகளை மேற்கொள்வார்.

ஒவ்வொரு பூசையின் போதும், கோயிலின் மடைப்பள்ளியில் புதிதாகச் சமைத்த அமுதைப் பானையுடனேயே கோயிலுக்கு கொண்டு சென்று 65 ஆலம் இலைகளில் அந்த அமுதைப்படைக்கும் வழக்கம் இன்றும் நிலவுகின்றது.

## பூசை வேளைகள்

பூசைகள் நாள்தோறும் மூன்று வேளைகள் நடைபெறும். சில வேளைகளில் மட்டும் பக்தர்களின் தேவை கருதி நான்கு அல்லது ஐந்து வேளைகளும் பூசைகள் இடம் பெறும்.

சனிக்கிழமைகளில் உதயப் பூசை இடம் பெறுவதில்லை அன்றைய தினம் முருகப் பெருமானுக்கு நண்பகல் 12 மணிக்குத் திருமுழுக்குப் பூசை இடம் பெறும். முதல் நாளே கோயில் பாத்திரங்கள் அனைத்தும் கழுவி, புதிய எள்ளைக் கழுவிக் காயவைத்து, இடித்து அதில் இருந்து வரும் எண்ணெயை எடுத்து வேற்பெருமானுக்கும், ஏனைய மூர்த்திகளுக்கும் சார்த்தி, அபிடேகம் செய்யப்படும். அதனைத் தொடர்ந்து வழமையான பூசைகள் நடைபெறும்.

மனித வாழ்விலும் சனியும், புதனும் நீராடுவது உடல் ஆரோக்கியத்திற்கும், மன அமைதிக்கும் சிறந்தது என மருத்துவ நூல்கள் குறிப்பிடுகின்றன. நீராடுகையில் எண்ணெய் (எள் + நெய்) தேய்த்து நீராடும் போது ஸ்தூல தேகமும், சூட்சும தேகமும் குளிர்ச்சி பெற்று உடலுக்கு ஆரோக்கியம் தருவதோடு சில மூல நோய்களும் நீங்குவதாகக் கூறுகின்றது.

ஆலய வழிபாட்டு முறைகளிலும் கூட "எண்ணெய்க் காப்பு சாத்துதல்" முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஆலய கும்பாபிசேகத்திற்கு முதல் நாள் 'எண்ணெய்க் காப்பு' சாத்துதல் நிகழ்த்தப்படுகின்றது. அந்த ஒரு நிகழ்வில் மட்டும், பக்தர்கள் மூலஸ்தானம் வரை சென்று சுவாமிகளுக்கு எண்ணெய்க் காப்பு சாத்த அனுமதிக்கப்படுவர். பக்தர்கள் சுவாமிக்கு எண்ணெய் சாத்தும், பொழுது அவர்களிடம் உள்ள ஆணவமலப் பீடிப்பினாலும், திரிகரணங்களினாலும் ஏற்படும் குற்றங்கள் நீங்குவதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு சுத்தமான எள்ளில் இருந்து பிரித்தெடுத்த எண்ணெயினால் விக்கிரகங்களுக்குச் சாத்துதலை எண்ணெய்க் காப்பு, திருமுழுக்கு, அப்பியங்கஸ்நானம், திருக்காப்பு என்னும் சொற்றொடர்களால் அழைப்பர்.

ஏனைய ஆலயங்களைப் போலன்றி செல்வச் சந்நிதியில் மேற்கொள்ளப்படும் "திருமுழுக்கானது" ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும், காலம் தவறாது மேற்கொள்ளப்பட்டு வருவது ஒரு சிறப்பான அம்சமாகும்.

சந்நிதியில் திருமுழுக்குப் பூசை முடிந்ததும் அன்று வேலவனுக்குப் பிட்டுப் பிரசாதம் நிவேதனம் செய்யப்பட்டு, சகல பக்தர்களுக்கும் வழங்கப்படும்.

தினமும் தீபாராதனையுடன் பூசைகள் ஆரம்பிக்கப்படும் போது, மூலஸ் தானத்திற்கு வெளியே காண்டாமணி, பறை, நாதஸ்வரம், தவில், சங்கு, சேமக்கலம், சரமணி என்பன ஒலிக்க, மூலஸ்தானத்திற்குள்ளே அமைதியான சூழலில் மந்திரம் இன்றி ஐயர் வாய் கட்டி மௌனமாகப் பூசைகளைச் செய்து கொண்டிருப்பார்.

# பூசைகள் நடை பெறும் ஒழுங்கு

சந்நிதியில் தினமும் பின்வரும் ஒழுங்கில் பூசைகள் இடம் பெறும்.

## 01. நந்தி வழிபாடு

பூசையின் போது பயன்படுத்தும் மணியில் உள்ள நந்தி தேவருக்கு நீராபிஷேகம், பாலாபிஷேகம் செய்து, தூபங் காட்டி, பூக்களால் அர்ச்சித்து வணங்கி மணியடித்த பின், பூசைகள் ஆரம்பமாகும்.

## 02. பாத பூசை

மூலஸ்தானத்தில் மயில் மீதிருக்கும் வேலுக்கும், எழுந்தருளி வேலுக்கும் அபிடேகம் செய்தபின், வேலின் அடிப் பகுதியில் உள்ள கற்பீடத்தில் சிவபெருமான், உமாதேவியார், தெய்வயானை அம்மன், ஆகியோரை மனதில் நினைந்து வழிபட்டு பாத பூசை செய்யப்படும். பின்னர் 'வேலுக்கு' விபூதி, சந்தனம் என்பன சாத்தி சாம்பிராணி தூபம் காட்டி, நெய்த்தீபம் காட்டப்படும். அதனைத் தொடர்ந்து பூசகர் வள்ளி அம்மன் வாயில் சென்று, வள்ளி அம்மனுக்கு சாம்பிராணித் தூபம் காட்டி அபிசேகம் செய்து விபூதி, சந்தனம், குங்குமம், பூக்கள் என்பவற்றால் சாத்தி மீண்டும் சாம்பிராணித் தீபம் காட்டப்படும். அதன் பின் நைவேத்தியம் படைக்கப்படும்.

இவ்வளவு பூசை முறைகளும் மூலஸ்தான வாசல் கதவு திறக்கப்படாமலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அதன் பின்னரேயே பிள்ளையாருக்குப் பூசைகள் ஆரம்பமாகும்.

பிள்ளையாருக்குரிய பூசைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரும், பின்னரும் மேள, தாள, மணிகள் நிறுத்தப்படும்.

## 03. பிள்ளையார் பூசை

கோயிலின் உள் பிரகாரத்தில், தென் மேற்கு மூலையில் இருக்கும் பிள்ளையார் மாணிக்கப் பிள்ளையார் என்று அழைக்கப்படுகின்றார். அதற்கு முன் உள்ள தீர்த்தக் குளம் "மாணிக்க கங்கை எனப்படும்" இக் குளத்து நீரில் குளிப்பது புனிதமானது எனக் கூறப்படுகின்றது. பிள்ளையாருக்கு அபிடேகம் செய்து , தூபம் காட்டிப் பின்னர் கதவு திறக்கப்படும். அப்பொழுது அடுக்குத் தீபம், பஞ்சாரத்தி என்பன காட்டப்படும்.

***04.*** பிள்ளையாருக்குரிய பூசைகள் முடிந்ததும் மீண்டும் மூலஸ்தானத்தில் உள்ள வைரவருக்கு அபிஷேகம் செய்து தூபம் காட்டப்படும். அதன் பின்னரேயே மூலஸ்தானக் கதவு திறந்து மூலவருக்குரிய பூசைகள் ஆரம்பமாகும்.

மூலஸ்தானத்தில் பூசைகள் மேற்கொள்ளப்படும் போது சமர்ப்பணமாகும் தீபாராதனைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

## *05. தீபாராதனைகள்*

இந்து மத வழிபாடுகளிலும், சடங்குகளிலும் தீபாராதனை மிக உயர்ந்த இடத்தை வகிக்கின்றது. ஆலய நித்திய, நைமித்திய வழிபாட்டில் பல்வேறு வகையான தீபாராதனைகள் இடம் பெறுகின்றன.

தீபங்கள் பல வகைப்படும்: அவை, அடுக்குத் தீபம், நட்சத்திர தீபம், பஞ்சமுக தீபம், வில்வதீபம், நாகதீபம், புருஷா மிருக தீபம், ஒற்றைத் தீபம், கும்ப தீபம், ஈசானாதி தீபம், கற்பூர தீபம், பஞ்சாராத்தி தீபம், எனப் பலவகையாக இருந்த போதிலும் ஆலயங்களில் எல்லா வகை தீபங்களும் சமர்ப்பணம் செய்யப்படுவதில்லை.

தீபங்களை, மூன்று முறை காட்டி இறைவனுக்குச் சமர்ப்பணம் செய்வதே வழமையாகும். இதில் இறைவனுக்கு முதலாவது முறையில் சமர்ப்பணம் செய்யப்படும் தீபம் உலகத்தின் நன்மையை வேண்டியும், இரண்டாவது தடவை சமர்ப்பணம் செய்யப்படும் தீபம் கிராமத்தின் நன்மையை வேண்டியும், மூன்றாவது முறையாகச் சமர்ப்பணம் செய்யப்படும் தீபம் உலகத்தில் வாழும் சகல ஜீவராசிகளினதும் நன்மையை வேண்டியும் சமர்ப்பணம் செய்யப்படுகின்றது.


இறைவனுக்குத் தீபாராதனை மேற்கொள்ளும் போது அத் தீப ஒளியில் தெய்வீக அழகைக் காண்பது பேரின்பத்தை அளிக்கும். அது போன்று பூசைகளின் போது தீபாராதனையைக் காண்பது பலபேறுகளை அளிக்க வல்லது என இந்து மதம் விளக்குகிறது.

செல்வச் சந்நிதியில் பூசை முறைகளின் போது, பின்வரும் ஒழுங்கில் தீபாராதனைகள் இடம் பெறும்.

1. நெய்த்தீபம் : இது கதவு திறக்கப்படுவதற்கு முன்னர் சமர்ப்பணம் செய்யப்படும்
2. அடுக்குத்தீபம் :
3. புருஷா மிருக தீபம் : புருஷதீபம்
4. கற்பூரதீபம் :
5. பஞ்சாராத்தி :

இங்கு காட்டப்படும் கற்பூரதீபம், சந்நிதிக்கே தனித்துவமான ஒரு தீபாராதனை முறையாகும். ஒரு வெள்ளித் தட்டில் திருநீற்றைக் குவித்து, அதன் மேல் விளைவு கற்பூரத்தை வைத்துத் தீபவழிபாடு இயற்றப்படும். தீபாராதனையின் போது முருகனுக்குச் சமர்ப்பணம் செய்த பின்பு, பக்தர்களின் நன்மை வேண்டி, அவர்களை நோக்கித் தீபம் காட்டப்படுவது சந்நிதிக்கே உரித்தான இன்னொரு சிறப்பு அம்சமாகும்.

தீபங்களுள் சிறந்தது கற்பூர தீபமாகும். இது இந்து மதத்தின் அரிய கோட்பாட்டை சூட்சுமமாக விளக்குகின்றது. கற்பூரம் எரியும் போது கரியோ, சாம்பலோ எஞ்சுவது கிடையாது. எல்லாமே ஆவியாகிவிடும் இதனையே அறிவியலில் பதங்கமாதல் என்ற "பதத்தினால்" அழைப்பர்.



பழைமை வாய்ந்த தல விருட்சமான பூவரசின் ஒரு தோற்றம். பின்புறம் நாகதம்பிரான் ஆலயம் உள்ளது.

கற்பூரம் எரிந்து அதன் மீதி எதுவும் இல்லாது வளியுடன் கலந்துவிடுவது போல், ஆன்மாவும் இறைவனுடைய சோதியில் கலந்து, கரைந்து இறைவனுடன் இரண்டறக் கலந்து இணைய வேண்டும் என்பதையே கற்பூரதீபம் உணர்த்துகின்றது.

மூலவருக்கு அடுக்குத் தீபம் காட்டப்படுவதற்கு முன்னரேயே சந்நிதிக்கே உரித்தான நைவேத்தியம் படைக்கப்பட்டிருக்கும். மகா மண்டபத்தில் 65 ஆலம் இலைகளில் படைக்கப்பட்டிருக்கும் பச்சரிசிப் பொங்கலும், பயற்றம் கறியும் சேர்ந்த அமுதை மருந்து என்று அழைக்கும் மரபு சந்நிதியில் நிலவி வருகின்றது.

மூலவருக்கு அடுத்து ஆறுமுகக் கடவுள், எழுந்தருளி விநாயகர், முத்துக்குமார சுவாமி ஆகிய மூர்த்திகளுக்கும் அதனைத் தொடர்ந்து

வள்ளி அம்மனுக்கும், நாகதம்பிரானுக்கும் பூசைகள் இடம் பெறும் நாக தம்பிரானுக்குரிய பூசைகள் நடைபெறும் பொழுது, தலவிருட்சமான பூவரச மரத்திற்கும் பாலாபிசேகம், நீராபிசேகம் என்பனவும் நிகழ்த்தி தீபாராதனையும் சமர்ப்பணமாக்கப்படும்.

வள்ளி அம்மன் பூசைகள் முடிந்ததும் மூலஸ்தானக் கதவு பூட்டப்பட்ட நிலையில் சண்டேசுரருக்குரிய பூசை இடம் பெறும். சண்டேசுரர் பூசை முடிந்ததும் மணியோசை, சங்கு, சேமக்கலம், பறையொலிகள் யாவும் சில விநாடிகள் வரை நிறுத்தப்பட்டிருக்கும் அப்பொழுது பூசகர், சாஷ்டாங்கமாக விழுந்து அட்டாங்க நமஸ்காரம் செய்தபின் மீண்டும் மணிகள் ஒலிக்கும் பொழுது மூலஸ்தானக் கதவு திறக்கப்படும்.

உச்சிக்காலப் பூசையின் போது, கோயில் வாசலில் வலது புறம் இருக்கும் வைரவருக்கும் இடது புறம் இருக்கும் சரஸ்வதிக்கும் பூசைகள் நடைபெறும். வெள்ளிக் கிழமைகளில் காலைப் பூசையின் போதும் வைரவருக்குரிய பூசைகள் நடைபெறும்.

கோயிலின் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்காகக் காவடி, பாற்செம்பு எடுப்பவர்கள் சரஸ்வதி கோயிலில் இருந்தே ஆரம்பிக்கின்றனர்.

இவ்வாறு நித்திய பூசைளில் உதயப் பூசை காலை 6 மணிக்கும், உச்சிக் காலப் பூசை நண்பகல் 12 மணிக்கும், சாயரட்டைப் பூசை மாலை 5 மணிக்கும் நடைபெறும் ஆனாலும் செல்வச் சந்நிதிக்கே உரிய தனித்துவமான சிறப்பு, பக்தர்களின் விருப்பத்திற்கும், நேரத்திற்கும் ஏற்ப பூசைகள் இடம் பெறுவதாகும், சந்நிதியானுடன் சாதாரண மக்களும் கொண்டுள்ள நெருக்கமான உறவுமுறையின் பிணைப்பினையே அந்த வழமை காட்டுகின்றது.

ஒவ்வொரு பூசையின் முடிவிலும் விபூதி, தீர்த்தம் வில்வம் என்பனவும், அமுதும் வழங்கப்படும்.



தீர்த்தமாடி, வள்ளி அம்மனுடன் வேலவன் சேர்ந்து இருக்கும் காட்சி.

# 5 சந்நிதியின் வருடாந்த மகோற்சவம்

## உற்சவம்

உற்சவம் என்பது உத்தம யாகம் எனவும், ஐந்தொழில்களின் சிறப்பைக் குறிப்பது எனவும், இகபர இன்பங்களைக் கொடுப்பது எனவும் பொருள்படும்.

விதிப்படி உற்சவம் செய்பவர்களுக்கும், செய்விப்பவர்களுக்கும், பாவம் நீங்கி ஞானம் உண்டாகும், எல்லாவித மங்கலங்களும் உண்டாகும் என ஆகமங்கள் கூறுகின்றன.

உற்சவமானது தினசரியாக, வாராந்தமாக, மாதாந்தமாக, வருடாந்தமாகப் பல்வேறு வகை உற்சவங்கள் கொண்டாடப்படுகின்றன. இவற்றுள் ஆலயங்களில் வருடா வருடம் கொண்டாடப்படும் மகோற்சவமானது இறைவனின் ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகியவற்றைக் குறிக்கும்.

மகோற்சவ காலங்களில் சிறப்பாக மேற் கொள்ளப்படும் கொடியேற்றம் எனப்படும் துவஜாரோகணம், மற்றும் திருக்கல்யாண உற்சவம் ஆகியவை படைத்தலைக் குறிக்கும்.

வாகனோற்சவம், ஓமம், பலியிடல் என்பன காத்தலையும், வேட்டைத்திருவிழா எனப்படும் மிருகயாத்திரை, இரதோற்சவம் எனப்படும் தேர்த்திருவிழா அழித்தலையும், தீர்த்தோற்வசம், மௌன உற்சவம் ஆகியவை மறைத்தலையும் குறிக்க திருஊடல் உற்சவம் அருளலைக் குறிக்கும்.

இத்தகைய உற்சவங்கள் யாவும் சகல ஆலயங்களிலும் ஓமம் வளர்த்து , மந்திரம் ஓதி, ஆகமக் கிரியைகள் என்பவற்றினூடாக நிகழ்த்தப்படும் சமஸ்கிருத மயப்படுத்தப்பட்ட சடங்குகள் ஆகக் காணப்படும். ஆனால் செல்வச் சந்நிதி கோயிலில் நடைபெறும் மகோற்சவம் ஆகம நெறிக்குட்பட்ட ஆலயங்களில் இருந்தும் வேறுபட்டதுடன், தனித்துவமானவையாகவும் உள்ளன.

சந்நிதியில் கொடித்தம்பம் இல்லை. இங்கு மகோற்சவத்திற்கான கொடியேற்றக் கிரியைகள் இடம் பெறுவதில்லை உற்சவ காலத்தை உணர்த்தும் வகையில் வள்ளிக் கொடி தானாகவே முளைக்கும் அதனைத் தொடர்ந்து பிரதமை கூடும் வேளையில் சந்நிதிக்கே உரித்தான கொடி ஏற்றச் சடங்குகள் இடம் பெறும்.

சந்நிதி ஆலயத்தின் மகோற்சவம், ஆவணி பூர்வபட்சத்தில் இடம் பெற்று வருகின்றது. ஆவணி மாதத்துப் பூரணைக்கு முந்திய அமாவாசை நீங்கிப் பிரதமை கூடும் வேளையில் கொடியேற்றம் நடைபெற்று ஆவணி மாதப் பூரணையில் தீர்த்தம் நடைபெறும். சந்நிதியில் 15 அல்லது 16 நாட்கள் கொண்டதாக மகோற்சவம் நடைபெறும்.

## கொடியேற்றம்

மகோற்சவத்தின் முதல் நாள் உற்சவமான கொடியேற்றம், ஏனைய ஆலயங்களில் இருந்து வித்தியாசமான ஒரு சடங்காக சந்நிதியில் இடம் பெறுகின்றது.

கொடி ஏற்ற நாள் அன்று அதிகாலையில் விசேட அபிடேகங்கள் பூசைகளைத் தொடர்ந்து கொடியேற்ற உற்சவத்திற்கான சடங்குகள் ஆரம்பமாகும்.

முதலில் எழுந்தருளிக்கு அருகில் உள்ள வைரவருக்கு காப்பு கட்டப்படும். அதன் பின்னர் மூலஸ்தானப் பூசை முடிந்ததும் பிள்ளையாருக்குப் பூசை நடைபெறும்.

ஆலய வாசலில் உள்ள நந்திக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள கேடகத்தின் கலசத்தில் தெற்பை வைத்து, ஏழு மாவிலைகளைச் சுற்றிப் பட்டுத்துண்டு கட்டி அதற்குரிய பூசை நடைபெறும். நந்தியின் முன் உள்ள கேடகம், கொடி ஏற்ற உற்சவம் ஆரம்பிப்பதற்கு மூன்று நாட்கள் முன்வரும் ஒரு புதன் கிழமையில் கொண்டு வந்து வைக்கப்படும். கலச பூசை முடிந்ததும், அது கேடகத்தின் மேல் தூக்கி வைக்கப்பட்டு மீண்டும் முருகனுக்குப் பூசைகள் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து எழுந்தருளிப் பூசை முடிந்ததும் சுவாமி வீதி உலா இடம் பெறும். அப்பொழுது ஆலய வாசலில் சேவல் கொடி ஏற்றப்படும்.

கொடி ஏற்றத்தன்று எழுந்தருளி வேற்பெருமான் அதே கேடகத்தில் வீதி உலா வருவார். உற்சவத்தின் முதல் நான்கு நாட்களும் காலை உற்சவம் நடைபெறுவதில்லை. ஐந்தாம் திருவிழாவில் இருந்தே காலை உற்சவத்தில் வேற்பெருமான் விதி உலா வருவார்.

உற்சவ நேரங்களில் சுவாமி உள்வீதி சுற்றி வள்ளி அம்மன் வாசலில் நிற்கும்பொழுது வெளிவாசலில் நிறைகுடம் வைத்து தீவட்டி பிடிப்பர். இங்கு தீவட்டி பிடிப்பவர் செட்டி பரம்பரையைச் சேர்ந்தவராக இருப்பர். கொடி ஏற்றத்தின் பொழுது தீர்த்தக் குளத்தில் இருந்து நீர் எடுத்து, முதலாவது நிறைகுடம் வைக்கப்படும். அதன் பின்வரும் நாட்களில் கோயில் கிணற்றில் இருந்தே நீர்

எடுக்கப்படும். நிறை குடத்திற்குரிய 7 மாவிலைகளையும், தேங்காய், நெல் ஆகியவற்றையும் பூக்காரர்களின் தலைவர் ஐயருடன் கூடக் கொண்டு சென்று நிறை குடத்தை வைப்பர்.

### பூச்சோடனைகள்

சந்நிதியில் எழுந்தருளிக்குரிய பூச்சோடனைகள் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றன. இவை பூக்காரர் எனப்படும் தொண்டர்களினால் ஆசாரமான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. இங்கு செயற்கையான சோடனைகள் எதுவும் இடம்பெறுவதில்லை, முருகப் பெருமான் வண்ண வண்ணமான பல்வேறு பூசைக்குரிய மலர்களால் பல வடிவங்களில் அலங்கரிக்கப்பட்டு அழைத்துச் செல்வது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

படல் சாத்துபடி, செடிச் சாத்துப்படி, திரணைச் சாத்துப்படி எனக் கூறப்படும் சந்திரவட்டச் சாத்துப்படி, மயில் தோகைச் சாத்துப்படி, நாகபடச் சாத்துப்படி, என்று பல்வேறு வகையான சோடனைகள் அன்றலர்ந்த பூக்களைக் கொண்டு செய்யப்படும் இவ்வகையான பூச்சோடனைகள் சந்நிதிக்கேயுரிய தனித்துவமான மரபாகும்.

### உள்வீதி உலா

உற்சவ காலத்தில் மூலஸ்தானத்தில் வைத்து அழகாக அலங்கரிக்கரிக்கப்பட்ட வேற்பெருமான், உள்வீதி வழியாக அழைத்து வரப்பட்டு வள்ளி அம்மன் வாசலை அடைந்ததும் அங்கே வாகனத்துடன் இருத்தி வைக்கப்படுவார். அங்கே வேற்பெருமானை, மஞ்சள் துணியினால் மூடப்பட்ட நிலையில் ஐயர் எடுத்துச் சென்று வள்ளி அம்மனுடன் இருக்க வைப்பார். அங்கு வள்ளி சமேதரனாகக் காட்சி அளிக்கும் முருகனுக்கும், அதன் எதிரே இருக்கும் நாகதம்பிரானுக்கும் விசேட பூசைகளும், தீபாராதனைகளும் இடம்பெறும்.

வள்ளி அம்மன் வாசலில் பூசைகள் முடிந்ததும் மீண்டும் வேற்பெருமான், மஞ்சள் துணியினால் மூடப்பட்ட நிலையில் எடுத்து வரப்பட்டு, எழுந்தருளி வெள்ளிமயில் மீது வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து தீபாராதனை முடிந்து வெளிவீதியுலாவுக்காகக் கொண்டு செல்லப்படுவார். அப்பொழுது வள்ளி அம்மன் வாசலில் இருந்து மணிக் கோபுர வாசல்வரை பூக்களால் தூவி முருகன் அழைத்துச் செல்லப்படுவார். அந்த நேரம் ஆலய காண்டாமணி ஒலிக்க மணிக்கோபுர வாசலை அடைவார்.

எழுந்தருளி வேற்பெருமான் வெளிவீதியுலாவுக்கு வரும் பொழுது முகப்பு வாசலினுடாகச் செல்வதில்லை அதற்கு இடது புறமாக உள்ள மணிக் கோபுரத்துடன் சேர்ந்த வாயிலினூடாக வெளிச் செல்லும் மரபே பேணப்படுகிறது. ஏனைய ஆலயங்களில் வெளிவீதியுலாவுக்காக வரும் எழுந்தருளி, மகா மண்டபத்துடன் இணைந்துள்ள முகப்பு வாயிலின் ஊடாகவே வெளிவருவது வழக்கம். சந்நிதியில் மருதர் கதிர்காமரும், முருகனும் அமர்ந்து பேசியதாகக் கூறப்படும் இரு திண்ணைகளும் எதிரெதிராக பிரதான வாயிலிலேயே உள்ளது. இன்றும் அந்த இரு திண்ணைகளிலும் இருவரும் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கலாம் என்பதால், அவற்றுக்குக் குறுக்கே சுவாமியை எடுத்துச் செல்வதோ அல்லது பக்தர்கள் செல்வதோ கூடாது என்ற மரபு இன்றும் பேணப்படுகின்றது.



**உருக்குலைந்த நிலையில் மருதர் கதிர்காமரும், முருகனும் உரையாடிய இரு திண்ணைகளையும் படத்தில் காணலாம்.**

அதனாலேயே இன்றும், அந்த இரு திண்ணைகளுக்குக் குறுக்காக எவரும் நிற்கக் கூடாது என்றும் கூறப் படுகின்றது.

## *வெளிவீதியுலா*

வெளிவீதியுலா வரும் போது அட்டதிக்கிலும், கற்பூர தீபம் காட்டப்படும். வெளிவீதியுலா முடிந்து மீண்டும் மணிக்கோபுர வாயிலினூடாகவே உள் வீதியை அடையும். மணிக் கோபுர வாசலை அடைந்ததும், அங்கே வைக்கப்பட்ட பூரணகும்பத்தில் தீபாராதனை இடம்பெறும். கும்பத்தில் எடுத்த நீரைக் கொண்டு சுவாமிக்கு பாதஜலம் வார்க்கப்படும். அப்போது சுவாமியைச் சுற்றி, மூன்று முறையும், சுற்றிவரும்போது சுவாமிக்கு வார்க்கும் பாவனையில் ஐயருக்கும் ஊற்றப்படும்.

இரவுத் திருவிழாவின் போது வெளிவடக்கு வீதியில் இருந்து, சுவாமி வாசலுக்கு வரும் வரை எச்சரிக்கையும் பராக்கும் பாடப்படும்.

சுவாமி தனது இருப்பிடத்தை அடைந்ததும் விளக்கெடுக்கும் சிறுமிகளின் தீப ஆராதனையுடனான ஆரத்தி இடம் பெறும். அதனைத் தொடர்ந்து சண்டேசுரர் பூசை நடைபெற்று உற்சவ சடங்குகள் முடிவடைந்த பின்னரேயே விபூதி, தீர்த்தம், வில்வம், பிரசாதங்கள் என்பன பக்தர்களுக்கு வழங்கப்படும்.

## உற்சவ ஒழுங்குகள்

உற்சவ நாட்களில் தினமும் வெவ்வேறு வகையான சோடனைகளுடன் பல்வேறு வகை வாகனங்களில் 'வேலவன்' வீதிவலம் வருதல் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

1ஆம் திருவிழா – இரவு சுவாமி கேடகத்தில் வீதிவலம் வருதல்
2ஆம் திருவிழா – இரவு அன்னம்
3ஆம் திருவிழா – இரவு சோடி வெள்ளைக் குதிரை
4ஆம் திருவிழா – இரவு யானை
5ஆம் திருவிழா – காலை மயில், இரவு பறக்கும் மயில்
6ஆம் திருவிழா – காலை அன்னம், இரவு ஆட்டுக் கடா
7ஆம் திருவிழா – காலை சோடிக் குதிரை, இரவு சிங்கம்
8ஆம் திருவிழா – காலை அன்னம், நாகசாத்துப்படி
– இரவு இடபம்
9ஆம் திருவிழா – காலை வெள்ளை யானை, இரவு காராம் பசு
10ஆம் திருவிழா – காலை பூங்காவனம் தாமரைப் பீடம்; இரவு பெரிய வெள்ளைக்குதிரை
11ஆம் திருவிழா – காலை கைலாய வாகனம், இரவு பெரிய மயில்
12ஆம் திருவிழா – காலை ஆட்டுக் கடா, இரவு இந்திர விமானம்
13ஆம் திருவிழா – காலை வெள்ளைக்குதிரை நாக சாத்துப் படி; இரவு காராம் பசு
14ஆம் திருவிழா – காலை காராம் பசு; இரவு சப்பரம்.
15ஆம் திருவிழா – காலை தேர்த்திருவிழா – அன்று காலை விசேட அபிஷேகமும், பூசைகளும் முடிந்த பின் வேற் பெருமானுடன், பிள்ளையார், ஆறுமுகசாமி ஆகிய மூர்த்திகள் வீதிவலம் வருவர். தேர்த்திருவிழாவில் சுவாமி வெளிவீதியுலா வரும் பொழுது, தேரைத் தொடர்ந்து நூற்றுக் கணக்கான ஆண்களும், பெண்களும் அங்கப்பிரதட்சினையும், அடிஅழித்தல் நேர்த்திக் கடன்களையும் நிறைவேற்றுவர். முள்காவடிகள், தூக்குக் காவடிகள், பறவைக் காவடிகள், கற்பூரச் சட்டி எரித்தல் போன்றவற்றின் மத்தியில் பக்தர்களின் 'அரஹரா' ஒலி வானைப் பிளந்து கொண்டிருக்கும். தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிப்பதால் எழுந்தருளியின் அகோரத் தன்மையைக் குறைத்துச் சாந்த மூர்த்தியாக



ஆற்றங்கரையோரமாக தேருலாவரும் போது வீதி எங்கும் நிறைந்து ஒலி எழுப்பும் பக்தர்கள்.



அடியார்கள் அங்கப்பிரதட்சினையை மேற்கொள்ளுதல்.


அடியவர்களுக்குக் காட்சி கொடுப்பதற்காக வெளிவீதியுலா முடிந்ததும் 'பச்சை சார்த்தல்' இடம் பெறும்.

1986இல் சித்திரத்தேர் எரிக்கப்பட்ட பின்னர், தற்பொழுது பழைய கட்டுத் தேரிலேயே வேலவன் தேருலா வருவதைக் காணலாம்.

இரவு பெரிய, படல் சாத்துப்படியினால் அலங்கரிக்கப் பட்ட சிவப்புக் குதிரையில் வேலவன் வீதியுலா வரும் காட்சி அற்புதமாக இருக்கும்.

16ஆம் திருவிழா – தீர்த்தோற்சவம் – அன்று அதிகாலையிலேயே சூரியோதயத்திற்கு முன்னர், முருகன் எவ்வித பூச்சோடனையுமின்றி ஒரு முல்லை மாலையுடன் மட்டும் மயில் வாகனத்தில் வீதியுலா வருவார். அதனைத் தொடர்ந்து மீண்டும் பூசைகள் நடைபெற்றபின் மூடுபல்லக்கில் இரு மருங்கிலும் தளப்பத்து ஓலைகளைப் பூக்காரர் பிடித்துச் செல்ல வேலவன் வெளி வீதி வருவார்.

மேற்கு வீதியை அடைந்ததும் வள்ளி அம்மன் முன் உள்ள வாயிலின் ஊடாக உள்வீதியை அடைந்து பிள்ளையார் வாயிலின் முன் உள்ள குளத்தில் தீர்த்தவாரிதி கொள்வர். ''மாணிக்க கங்கை'' எனப்படும் இக்குளத்தின் மேல் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் பல்லக்கை வைத்து வேலவனுக்கு பல்வேறு பழங்கள், பால், தேன் மற்றும் அபிசேகத்திரவியங்கள் கொண்டு அபிடேகம் செய்யப்படும். இச் சடங்கு சுமார் ஒரு மணித்தியாலம் வரை மேற்கொள்ளப்படும். அதனைத் தொடர்ந்து பல்லக்குடனேயே குளத்தில், இறக்கி நீராட்டப்படும். இவ்வாறு தீர்த்தமாடுதல், ''செல்வ புஸ்கரணி'' எனப்படும். தீர்த்தக் குளத்தைச் சூழவும், உள்வீதி, வெளிவீதிகளிலும் குழுமி நிற்கும் பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் வானைப்பிளக்கும் 'அரகர' ஒலியுடன் வள்ளியம்மன் வாயிலுக்குப் பல்லக்கில்



அழைத்துச் செல்லப்படுவார். அங்கே வள்ளி அம்மனுடன் இருக்க வைத்து பூசைகள், தீபாராதனைகள் என்பன இடம் பெற்றதைத் தொடர்ந்து அங்கே நிற்கும் பூக்காரர்களுக்கும், விளக்கெடுக்கும் சிறுமிகளுக்கும் ஐயர் பட்டுத்தீர்த்தம் தெளித்து ஆசீர்வதிப்பார். பட்டுத் தீர்த்தம் என்பது குங்குமம், மஞ்சள், அபிடேகத் திரவியம் கலந்த விசேட தீர்த்தமாகும். அதனைத் தொடர்ந்து திருநீறு வழங்கிய பின், முதலாவது காளாஞ்சி பூக்காரர்களின் தலைவருக்கும், இரண்டாவது காளாஞ்சி திருவிழா உபயகாரருக்கும் வழங்கப்படும்.

தீர்த்தத்தன்று அதிகாலையில் பூச்சோடனையின்றி மயில் மீது வேலவன் வீதியுலா வருதல்

வள்ளி அம்மன் சந்நிதியில் வள்ளி நாயகியுடன் அன்று மாலை வரை தங்கியிருந்து அருள்பாலிப்பார். வள்ளி அம்மன் சமேதராக வேலவன் இருக்கும்போது, செடிச் சாத்துப்படியுடன் பூக்குடை நிழலில் இருப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.


மௌனத் திருவிழா – சந்நிதிக்கே தனித்துவமான மௌனத் திருவிழாவுடன் கூடிய "ஊடல் உற்சவம்" தீர்த்தோற்சவத்தன்று பிற்பகல் 6 மணிக்கு நடைபெறும். அன்றைய தினம் தீர்த்தமாடிய நேரத்தில் இருந்து, முழுநேரமும் வள்ளியம்மனுடன் தங்கி நின்றமையினால், மூலஸ்தானத்தில் இருக்கும் தெய்வானை அம்மனின் வெறுப்புக்கு முருகன் ஆளாகவே மூலஸ்தானக் கதவு பூட்டப்பட்டுவிடும் அப்பொழுது வள்ளி அம்மன் வாசலில் இருந்து தெய்வானை அம்மன் வாசலுக்கு மூன்று முறைகள் வருவதும் போவதுமாக ஊடல் உற்சவம் நடைபெறும்.

முதலாம் முறை பல்லக்கில் மேள, தாள, மணிகள் ஒலிக்க தெய்வானை அம்மன் வாசலை நோக்கிப் போகும் பொழுது, மூலஸ்தானக் கதவு பூட்டப்பட்டிருக்கும்.

இரண்டாம் முறை மீண்டும் பல்லக்கில் தளப்பத்து ஓலைகள் சல சலக்கப் போதல் அப்பொழுதும் கதவு பூட்டப்பட்டிருக்கும்

மூன்றாம் முறையாகச் செல்லும் பொழுது, மேள, தாள, மணி ஒலிகள் எதுவுமின்றி மௌனமாகப் போதல் அப்பொழுது, தெய்வானை அம்மன் கோயில் கொண்ட மூலஸ்தான வாயில் கதவு திறக்கப்பட முருகன் மீண்டும் தன் பழைய இருக்கையை அடைவார். அதனைத் தொடர்ந்து பூசைகள் இடம் பெற்றுப் பின்னரே காலையில் இருந்து விரதம் அனுட்டித்த பூக்காரர், விளக் கெடுக்கும் சிறுமிகள் ஆகியோருக்கு ஆலயத்தில் உணவு வழங்கப்படும். அத்துடன் மௌன உற்சவமும், ஊடல் உற்சவமும் நிறைவடையும்.

பூத்திருவிழா – தீர்த்தோற்சவத்திற்கு மறு நாள் பூக்காரர் விளக் கெடுக்கும் சிறுமிகளுக்கென்றே விசேடமான பூசைகள் இடம் பெறும்.



தீர்த்த உற்சவத்தின் போது வேலவன் பல்லக்கில் மாணிக்க கங்கையில்

கடந்த 16 நாட்களும் ஆலயத் தொண்டில் ஈடுபட்டிருந்தமையால் அவர்கள் முருகளின் பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வதில்லை. அதற்காகச் சிறப்பாக அவர்களுக் கென்றே நடைபெறும் விசேட உற்சவம்தான் "பூத் திருவிழா" அல்லது "பூப் பூசை" எனப்படும் அன்று இரவு நடை பெறும் பூத் திருவிழா விசேட பூசையுடன் உற்சவ சடங்குகள் யாவும் நிறைவடைந்து விடும்.

# ௬ சந்நிதியின் விசேட வழிபாடுகளும் சடங்குகளும்

தினமும் நடைபெறும் பூசைகளுடன் வெள்ளிக்கிழமைகளில் விசேட வழிபாடும் பூசைகளும் நடைபெறும். இதே போன்று சில விசேட வழிபாட்டுக் காலங்களிலும் இந்துக்களுக்குச் சிறப்பாக அமைந்த நாட்களிலும் அபிடேகங்களும் விசேட அலங்கார தீபங்களும் இடம் பெறும்.

| | |
|---|---|
| தை | தைப்பூச தினத்தன்று விசேட அபிடேகமும் பூசைகளும் இடம்பெற்று வேலவன் வீதிவலம் வருதல். |
| மாசி | மாசி மாதம் வரும் மகா சிவராத்திரி தினத்தில் நான்கு சாமமும் விசேட அபிடேகமும் பூசைகளும் நடைபெறும். இரவு மயில் வாகனத்தில் வேற்பெருமான் வீதிவலம் வருவார். |
| பங்குனி | பங்குனியில் வரும் உத்தரம் திதியில் விசேட அபிடேகமும் வேற்பெருமான் உற்சவமும் இடம் பெறும். அத்துடன் வெளிவைரவர் ஆலயத்தின் வழிபாடு ஆரம்பித்த தினத்தை யொட்டிய விசேட பூசைகள் இடம்பெறும். பங்குனி பத்தொன்பதாம் திகதி மூலவர், பரிவாரத் தெய்வங்களுக்குச் சங்காபிசேகம் இடம்பெறும். |
| சித்திரை | சித்திரைப் பூசைக்கு விசேட ஆராதனைகளும் சித்திரைக் கஞ்சி வார்ப்பும் இடம்பெறும். சித்திரைப் புதுவருடப் பிறப்பன்று காலையில் விசேட பூசை இடம் பெறுவதுடன் அன்று பல தடவை பூசைகள் ளஇடம் பெறும். |
| வைகாசி | வடமொழிக் கதைகளின்படி கார்த்திகேயனுக்குச் சிறப்பான நட்சத்திரம் விசாகம் ஆகும். அதனால் முருகனுக்கு விசாகன் என்றும் ஒரு பெயருண்டு. வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திரம் சிறப்பான ஒரு நாளாகும். வைகாசி விசாகத்தன்று விசேட அபிடேகமும் உற்சவமும் இடம்பெறும். |

**ஆனி** — நடு இரவில் பாக்கு நீரிணைக் கடலுக்குச் சங்கு, சேமக்கல சகிதம் பூசகர் சென்று கடல் தீர்த்தம் எடுத்து வந்து, விளக்கெரிய விட்டு 7ஆம் நாள் குளிர்த்திப் பொங்கல் இடம் பெறும். ஆனிப் பொங்கலின்போது மட்டும் அடியார்கள் ஆலய வீதியில் பொங்கிப் படைக்கும் வழக்கம் உண்டு.

**ஆடி** — ஆடி அமாவாசை அன்று பிதிர்க்கடன்களைச் செய்பவர்கள் தொண்டைமானாற்றில் தீர்த்தமாடி முருகனை வழிபடுவர். அன்றைய தினம் விசேட பூசைகள் இடம்பெறும்.

**ஆவணி** — ஆவணி மாதத்து பூரணைக்கு முந்திய அமாவாசை நீங்கிப் பிரதமை கூடும் வேளையில் கொடியேற்றத்துடன், ஆவணிப் பௌர்ணமிக்கு தீர்த்தம் வரக் கூடிய வகையில் 15 அல்லது 16 நாள் மகோற்சவம் இடம்பெறும்.

**புரட்டாதி** — விஜயதசமி அன்று கந்தபுராண படிப்பு ஆரம்பமாகி கந்தசட்டி இறுதி நாள் அன்று முருகன் திருக்கல்யாண வைபவத்துடன் புராண படனம் முடிவடையும்.

**ஐப்பசி** — ஐப்பசி வெள்ளிக்கிழமைகளில் விசேட அபிடேகமும் பூசைகளும் இடம்பெறும்.

**கார்த்திகை** — திருக்கார்த்திகை தீப நாளில் இரவு உற்சவம் இடம்பெறும். அந்நேரத்தில் ஆலயத்தில் உள்ள அகல்விளக்குகள், குத்துவிளக்குகள் உட்பட அனைத்துத் தீபங்களும் ஏற்றப்படும். கார்த்திகையில் வரும் விநாயக சஷ்டிக்கு விசேட பூசைகளும் வழிபாடுகளும் இடம்பெறும். கார்த்திகை மாதத்துக் கடைசி ஞாயிறு அன்று பெரிய ஆண்டியப்பன் பூசை இடம் பெறும். பெரிய ஆண்டியப்பன் வம்சத்தைச் சேர்ந்தவர்கள், இப் பூசையின் போது இறைவனுக்குக் கறியமுது படையல் செய்து அடியவர்களுக்கு வழங்குவர்.


**மார்கழி** — மார்கழியில் வரும் திருவெம்பாவைக் காலங்களில் உதயத்தில் 4.30 மணிக்கு விசேட பூசைகளும் திருவெம்பாவை ஓதலும் இடம்பெறும். திருவாதிரை அன்று அதிகாலையில் விசேட அபிடேக ஆராதனைகளும், திருவாதவூரடிகள் அருளிய திருப்பள்ளி எழுச்சியும் இடம்பெற்று முருகன் வீதியுலா இடம்பெறும்.

## திருமுழுக்குப் பூசை

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலையில் திருமுழுக்குப் பூசையும் மாலையில் பிட்டுப் பிரசாதமும் நைவேத்தியமாகப் படைக்கப்பட்டு பூசைகள் இடம்பெறும்.

## கந்தசஷ்டி விரதம்

தீபாவளியை அடுத்து வரும் அமாவாசை நீங்கிப் பிரதமை கூடும் தினத்தில் கந்தசஷ்டி விரதம் ஆரம்பமாகும். சஷ்டியில் ஆறு நாட்களும் சந்நிதியில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் தங்கியிருந்து தீர்த்தம் மட்டும் அருந்தி விரதம் அனுட்டிப்பர். வேறு எந்த ஆலயங்களிலும் இல்லாத அளவுக்கு இங்கு பெருந்தொகையான பக்தர்கள் தங்கி இருந்து விரதம் இருப்பர். ஆறாவது நாள் சூரசம்ஹாரம் மிகச் சிறப்பாக இடம்பெறும். சூரனின் குதிரைப் படைகள், காலாட் படைகள் என்பனவும், இந்நிகழ்வில் கலந்து கொள்வது சிறப்பாக இருக்கும். மறுநாள் அதிகாலை பாறணைப் பூசை நடைபெறும். அன்று மாலை தெய்வானை அம்மன் திருக்கல்யாணமும், அடுத்துவரும் சுபதினத்தில் வள்ளியம்மன் திருக்கல்யாணமும் இடம்பெறும். ஏனைய ஆலயங்களில் இல்லாத ஒரு சிறப்பு சந்நிதிக்கு உண்டு. கந்தசஷ்டியின் ஆறு நாட்களும் ஆலயத்திலேயே தங்கியிருந்து ஆலய தீர்த்தத்தை மட்டும் உண்டு விரதம் இருக்கும் அந்த உணர்வு பூர்வமான நிகழ்ச்சி சந்நிதியிலேயே காணப்படுகிறது.



உடைந்த மணிக் கோபுரமும் ஆலய முகப்பும்.

## சங்காபிசேகம்

சந்நிதி முருகனின் விசேட பூசை வழிபாடுகளில் சங்காபிசேகம் விசேடமானதாகக் கருதப்படுகிறது. முதன் முதலில் 1938 ஆம் ஆண்டில்தான் இவ்வாலயத்தில் சங்காபிசேகம் ஆரம்பிக்கப்பட்டது. காலையில் சங்குப் பூசையும், 11 மணியளவில் சங்காபிசேகமும், அதனைத் தொடர்ந்து வேற்பெருமான் வீதியுலாவும் இடம்பெறும். ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதத்தில் இச் சங்காபிசேகம் நடைபெறும். இத்தினத்தில் 1008 சங்குகள் வைத்து அபிடேகம் பக்திபூர்வமாக மேற்கொள்ளப்படும்.


தற்பொழுது அடியவர்களின் நேர்த்திக்கு ஏற்ப 108 சங்குகளை வைத்து அபிசேகங்களும் மேற்கொள்ளப்டுகின்றன.

## சண்முக அர்ச்சனை

முருகன் ஆலயங்களுக்கேயுரிய தனித்துவமான பூசை வழிபாடுகளில் ஒன்றான சண்முக அர்ச்சனை வழிபாடு செல்வச் சந்நிதியில் பக்திபூர்வமாக இடம்பெற்று வருகிறது. முருகப் பெருமானுக்கு 6 வகைப் பழங்களால் அபிடேகம் செய்து, ஆறு வகைப் பழங்களையும், ஆறுவகை அமுதுகளையும் நிவேதித்து ஆறுவகை வில்வங்கள் பூக்களைக் கொண்டு ஆறு பூசகர்களால் அர்ச்சிக்கப்பட்டு, ஆறு பஞ்சாரத்தி ஆராதனை செய்யப்படும், பக்திமயமான ஒரு வழிபாடே சண்முக அர்ச்சனை.

## புராண படனங்கள் ஓதுதல்

இந்துக்களால் போற்றப்படும் பிள்ளையார் புராணம், கந்த புராணம், திருவாதவூரடிகள் புராணம், கண்ணகி கதை என்பன இவ்வாலயத்தில் பூசை வழிபாடுகள், உற்சவ காலங்களின் பின்னர் வருடம் தோறும் நடைபெறுகின்றன. பிள்ளையார் புராணம், விநாயக சஷ்டி தினத்திலும் கந்தபுராணம், நவராத்திரி கும்பப் பூசையுடனும், திருவாதவூரடிகள் புராணம், திருவெம்பாவை பூசையுடனும், கண்ணகி கதை தீர்த்தோற்சவத்துடன் படிக்கப்படுகின்றது.



மூலஸ்தான தோற்றம்

# 7 எச்சரிக்கையும் பராக்கும்

செல்வச் சந்நிதி ஆலயத்தின் உற்சவ காலங்கள் மிகப் புனிதமானவையாகவும், பக்தி பூர்வமாகவும் இருக்கும். திருவிழாக் காலங்களில் அதிகாலையில் இருந்து இரவு வரை தொடர்ச்சியாக வீதி எங்கும் பஜனை செய்வோரின் கூட்டமும், அங்கப் பிரதட்சினை செய்வோருமாக நிறைந்திருக்கும்.

ஏனைய சைவ ஆலயங்களில் ஈசான மூலை எனப்படும் வடமேற்கு மூலையில் எழுந்தருளி விக்கிரகம் கொண்டுவரப்படும் போது, பஞ்ச புராணம் படித்துத் தீபாராதனை காட்டப்படும். ஆனால் செல்வச் சந்நிதியில் இந்த மரபுக்கமைவாகத் தேவாரம் பாடப்படுவதில்லை. அதற்குப் பதிலாக உணர்ச்சி பூர்வமான, நல்ல இசையுடன் பாடப்படும். "எச்சரிக்கையும் பராக்கும்" இடம்பெறுவது சந்நிதியின் இன்னொரு சிறப்பு அம்சமாகும்.

ஐந்தாம் நாள் உற்சவத்தில் இருந்து தினமும் இரவு முருகன் வீதியுலா வரும்பொழுது ஆலயத்தின் வடக்கு வீதியின் பாதித் தூரத்தில் இருந்து "எச்சரிக்கையும் பராக்கும்" பாடப்படுவது மரபாக இருந்து வருகின்றது.

சுமார் 150 வருடங்களுக்கு முன்னர் தொண்டைமானாற்றைச் சேர்ந்த "சின்னப்பரியாரி" என்று அழைக்கப்படும் புலவர் ஆண்டியப்பர் என்ற முருகன் அடியாரினால் பாடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆண்டியப்பரின்கனவில் தோன்றிய முருகன் இப்பாடலைப் பாடுமாறு பணித்ததற்கு அமைய ஆண்டியப்பன் இப்பாடலைப் பாடியுள்ளார்.

இப்பாடல் ஐந்தாம் திருவிழாவின் பொழுது, சந்நிதி ஆலயத்தில் அரங்கேற்றப்பட்டமையினால் இன்றும் அந்த மரபுக்கமைய 5 ஆம் திருவிழாவில் இருந்தே பாடப்பட்டு வருகின்றது.

முருகனை ஒரு செல்லக் குழந்தையாகவும், ஒரு அரசனாகவும் போற்றிப் பாடப்படும், "எச்சரிக்கையும் பராக்கும்" என்ற வகையிலான இந்தப் பாடல்கள் முருகனுடன் வீதியுலா வருபவர்களின் நெஞ்சங்களையே ஒரு கணம் உருகவைத்து விடும். வடக்கு வீதியில், இருந்து 'எச்சரிக்கை' பாடலும், ஆலய வாசலுக்கு வந்ததும் இறுதியாக 'பராக்கும்' பாடப்படுவது ஒரு அரசகுமாரனைக் கம்பீரமாக அழைத்து வருவது போன்று மிக அற்புதமாக இருக்கும்.

அந்தப் பாடலை மீண்டும், மீண்டும் மனதுற்குள் நினைத்துப் பார்க்கும் பொழுது அதன், சந்தமும், ஓசை நயமும் பக்திப் பிரவாகமாக ஊற்றெடுக்கும்.

## எச்சரிக்கைப் பாடல்கள்

கருணா கரப்பொருளே கணபதியே எச்சரிக்கை
கதிராபுரி நகர்மேவிய கந்தா எச்சரிக்கை
அருள் கந்தா எச்சரிக்கை
கந்தா செல்வநகர் மேவிய கருணா எச்சரிக்கை
வந்த துயர்தீர்க்குமெங்கள் வணிகா எச்சரிக்கை
எங்கள் வணிகா எச்சரிக்கை
வணிகா செட்டிகுமரா கார்திகேயா எச்சரிக்கை
வருவார் வருபிணிநீக்கிய முருகா எச்சரிக்கை
அருள் முருகா எச்சரிக்கை
முருகா அரி மருகா ஆறு முகனே எச்சரிக்கை
கருவா னது தீர்க்குமெங்கள் கந்தா எச்சரிக்கை
எங்கள் கந்தா எச்சரிக்கை
கந்தா கடம் பணிகாதிருத் தணிகா சுப்ரமண்யா
எந்தா கியபேரூர்வரு கந்தா எச்சரிக்கை
அருள் கந்தா எச்சரிக்கை
கதிரை மலைக்கரசே என்றும் கருணைக் கிருபைக்கடலே
அதிரூப சிங்காரா ஆறுமுகனே எச்சரிக்கை
ஆறுமுகனே எச்சரிக்கை

150 வருடங்களுக்கு முன்னர் சந்நிதி ஆலயச் சூழல் அடர்ந்த காட்டுப் பகுதியாகவும், குடிமனைகள், வர்த்தக நிறுவனங்கள், மின்விளக்குகள் எதுவும் இன்றி இருந்ததாலும் அந்த வீதி வழியாக முருகன் இரவு உற்சவத்தில் அழைத்துவரப்படும் பொழுது இந்த எச்சரிக்கைப் பாடல் பாடப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன.

## பராக்கு

ஐந்துகரத் தந்திமுகன் தம்பி பாராக்கு
கந்தர்துணை வந்த ஒற்றைக் கொம்பா பாராக்கு
கதிரைமலை தனிலுவந்த கந்தா பாராக்கு
கனகமணிக் குஞ்சரிதன் கணவா பாராக்கு
போதவடி வாயமர்ந்த புலவா பாராக்கு
புள்ளி மயில் ஏறிவரும் புனிதா பாராக்கு

# 8 சந்நிதியின் மரபுகளும் பாரம்பரியங்களும்

சந்நிதிக்கென்றே சில தனித்துவமான மரபுகளும், பாரம்பரியங்களும் இன்னும் பேணப்பட்டு வருகின்றமை, 'சந்நிதியை' ஏனைய ஆலயங்களின் பாரம்பரிய நடைமுறைகளில் இருந்து வேறுபடுத்திக் காட்டும் சிறப்புக்களாகும்.

## இயற்கை நெறி வழிபாட்டுப் பாரம்பரியம்

சந்நிதியில் சிவாகம முறையில் அன்றி, திராவிட பாரம்பரியத்தில் பிராமணக் குருக்கள் அல்லாத, பரத குலத்தவரால் பூசைகள் செய்யபபடுகின்றன. இங்கு ஆகமம் சாராத வழிபாட்டு மரபிலான பூசைகள், கிரியைகள், உற்சவகாலச் சடங்குகள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

சந்நிதியில் இயற்கை நெறி வழிபாட்டுப் பாரம்பரியம் பேணப்படுகிறது. இங்கு மந்திரங்கள் உச்சரிக்கப்படுவதில்லை. பூசை ஆரம்பித்து முடிவடையும் வரை பறைமேளம் கொட்டப்பட்டுக் கொண்டே இருக்கும்.

சந்நிதியில் முருகனுக்குப் பூசை செய்யும் பூசகர்கள், ஐயர்கள் என அழைக்கப்படுகின்றனர். பூசகர்கள் பூசைகளை மேற்கொள்ளும் முன், கோயில் கிணற்றில் தோய்ந்து இடையில் பட்டுவேட்டி உடுத்தி, தலையில் கண்டய மாலை அணிந்து, வாய்கட்டி, மந்திரமின்றிப் பயபக்தியுடன் பூசைகளைச் செய்வர்.

இவ்வாலயத்தின் மூலஸ்தான மூர்த்தியாகவும், எழுந்தருளி மூர்த்தியாகவும் வேற்பெருமானே வழிபடப்படுவது இதன் சிறப்பமிசமாகும்.

எழுந்தருளி மூர்த்தியான அந்த வெள்ளி வேலின் ஒளிவீச்சினூடாக, அதன் மேல் பளிச்சென்று தெரியும் வெற்றிலைக் கண்களினூடாக அண்ட சராசரங்களும் ஆடும். பூமலையின் மத்தியில் கம்பீரமான கோலத்தில் முருகன் வீதியுலா வரும் போது, அடியவர் கூட்டம் மெய்மறந்து ஆடுவதும் பக்திப் பரவசத்தில் முருகனுடன் அன்னியோன்னியமான உறவு முறை கொண்டாடிப் பேசி மகிழ்வதும், துயரங்களை மறந்து இன்ப நுகர்வை அடைவதும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். செல்வச் சந்நிதியின் இந்தப் பழமை வாய்ந்த கூறுகளைக் கொண்ட இயற்கை நெறி வழிபாடுகள் மூலம், இந்துமத வழிபாட்டின் பண்டைய மரபுகள் பேணப்பட்டு வருவதையும் காணலாம்.

சாதாரண மக்களுக்கும், சந்நிதி முருகனுக்கும் இடையிலான "உறவாடல்" பற்றிப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் "சந்நிதிச் செல்வம் பேணப்பட" என்ற தனது கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை, 'சந்நிதியின்' மதசனநாயக நிலையைப் புலப்படுத்தி நிற்கின்றது:

> "இக் கோயிலின் மிகப்பெரிய சிறப்பு, இங்குவரும் பக்தர்கள் முருகனுடன் நடத்திக்கொள்ளும் "சொல்லாடலாகும்". அவனுடன் பேசுவது போன்ற ஒரு பாவனை. அவனும் தங்களுக்குச் சொல்கின்றான் என்ற நம்பிக்கை, ஆத்மார்த்தமான சொல்லாடலுக்கு இங்குள்ள பூசை மரபுகள் இடைநிற்பதில்லை. கோயிலடியில் நின்றாலே அந்த இணைவு ஏற்படுகின்றது. இந்த மரபு சந்நிதியில் பேணப்படுவது முக்கியம். அதனை வளர்ப்பதற்கு எவ்வெவற்றைச் செய்யலாம் என்று பார்ப்பதிலும் பார்க்க, அந்த மரபை ஊறு செய்வதற்கு எவ்வாறு இடம் கொடாது விடலாம் என்று பார்ப்பது முக்கியம். அதுவே தலையானதாகும்.
>
> சந்நிதியின் பிரதான மத அனுபவ அமிசம் அதன், 'மதசனநாயக' நிலையாகும். இங்கு ஒதுக்கப்பாடுகள் இல்லை. உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடின்றி சகலரும், சந்நிதி முருகனைத் தங்கள் நிலைநிற்கும் தெய்வமாகவே கருதி வழிபடுகின்றனர்."

## *சங்க காலப் பண்பாட்டுச் சின்னம்*

செல்வச் சந்நிதி முருகனின் ஆலயக் கிரியைகளும், பூசை முறைகளும், பக்தர்களின் வழிபாட்டு மரபுகளும், திராவிடர் பாரம்பரியத்தையும் சங்க காலப் பண்பாட்டையும் எடுத்துக் காட்டும் வழிபாட்டு முறைகளாகத் திகழ்கின்றன.

சங்ககால மக்களால் குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாக முருகன் போற்றப்பட்டான். சங்க இலக்கியங்களில் வெற்றித் தெய்வமாகவும், போர்க் கடவுளாகவும் முருகன் வருணிக்கப்பட்டுள்ளான். அதனால் தானோ என்னவோ இன்று தமிழர்களின் காவல் தெய்வமாக முருகன் பேசப்பட்டு வருகின்றான்.

சங்க காலத்தில் முருகவழிபாடு வெறியாட்டுடன் நடைபெற்றது. இவ்வழிபாட்டில் இறைவனுக்கும் மக்களுக்கும் தொடர்பு ஏற்படுத்தி வைக்கும் ஊடகமாகப் பிராமணர்களுக்கு இடம் இருக்கவில்லை. அந்த மரபே இன்றும் சந்நிதியில் பேணப்பட்டு வருவது முருக வழிபாட்டின் தனிச்சிறப்பைக் காட்டுகின்றது.

சந்நிதி முருகன் ஆலயத்தில் அமுது படைக்கும் சடங்கு கூட, சங்க இலக்கியங்களில் ஒன்றான "பெரும் பாணாற்றுப் படையில்" இடம் பெறும்.

*"நெய்மடையில் தேக்கிலைக்கு வைகி"* என்ற பாடல் அடியில் வரும், தேக்கிலையில் உணவு படைக்கும் வழக்கம் இன்றும் இருந்து வருகின்றது. அதைச் சந்நிதியில் ஆரம்ப கர்த்தாவாகிய மருதர் கதிர்காமர் ஆலம் இலையில், அன்று முருகனுக்கு அமுது படைத்ததைத் தொடர்ந்து இன்றும் சந்நிதியில் அறுபத்து ஐந்து ஆலம் இலைகளில் அமுது படைக்கும் மரபு வழக்கில் உள்ளது. அதனை அங்கு வரும் அடியவர்களும் மருந்தாக வாங்கி அருந்துவதும், குணம் அடைவதும் பரவசமானது.

"சந்நிதி மருந்து" என்று இன்றும் பேசப்பட்டு வரும் அந்த ஆலம் இலையில் உள்ள ஒரு பிடி பச்சரிசி அமுதினையும் பயற்றங்கறியையும் ஒரு முறை உண்டவர்கள், அதன் சுவையையும் மகத்துவத்தையும் ஒருபோதும் மறவார்.

முருக வழிபாட்டில் 'வேல்' பெற்ற முக்கியத்துவம் பற்றிச் சங்க இலக்கியங்களில் மேலும் பல பாடல்கள் குறிப்பிடுகின்றன.

திருமுருகாற்றுப் படையில் வரும்,
*"வேல் கெழு தடங்கைச் சால் பெருஞ் செல்வ" **(265)***
*"செல்வேற் சே எய்" **(61)*** என்பன போன்ற குறிப்புகளும், பரிபாடலில் வரும், *"செருகு வேற் றானைச் செல்வ " **(54)*** என்ற குறிப்பும் முருக வழிபாட்டில் வேல் பெறும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.

இத்தகைய மரபுகளைப் பின்பற்றி சந்நிதியில் இடம் பெற்று வரும் வேல் வழிபாடும், கிரியை முறைகளும், நைவேத்தியம் படைத்தலும் தமிழர் பண்பாட்டின் சின்னமாக விளங்கி வருவதால் 'செல்வச் சந்நிதியான் தனித்துவமானவனாக இன்றும் தமிழர்களால் போற்றி வணங்கப்படுகின்றான்.

## அநீதிக்கு ருத்ரமூர்த்தியானவன்

சந்நிதி வேலவன் அடியவர் குறை தீர்ப்பவன் மட்டுமல்ல அநீதி செய்பவர்களுக்கு உருத்திரமூர்த்தியாகவும் விளங்குவான். 1986ம் ஆண்டு புதிய பிரமாண்டமான சித்திரத் தேர் இராணுவச் சிப்பாய்களினால் எரிக்கப்பட்டபொழுது அது அந்த இரவில் பெரும் தீச்சுவாலையுடன் கொழுந்து விட்டெரிந்து சாம்பலானது. அதனைத் தொடர்ந்து இலங்கை அரசியல் வரலாற்றில் நடந்த சம்பவங்கள் முருகனின் அற்புதங்களை உணர்த்தியது. ஆம்.....! அந்தத் தேரை எரித்தவர்களில் அறுவர் அடுத்த திருவிழாவுக்குள் போர்முனையில் கொல்லப்பட்டதும், அதில் தப்பிய ஒருவர் மனமுருகித் தான் செய்த தவற்றிற்காகக் கதிர்காமம் சென்று காவடி எடுத்துப் பிராயச்சித்தம் தேடிக் கொண்டதாகவும் பத்திரிகைகளில் வெளிவந்த பொழுதுதான் சந்நிதியானின் அற்புதத்தை உணரமுடிந்தது.

அதேபோன்று ஆலயச் சூழலில் அநீதிகள் புரிபவர்களும், தகாத செயல்களில் ஈடுபடுபவர்களும் கூட முருகனின் தண்டனைக்குள்ளாக்கப் படுகின்றனர். அவர்கள் எவராக இருந்தாலும் பூசகர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயினும் சரி, உடனுக்குடன் அவர்களுக்குரிய தண்டனைகளை முருகன் வழங்கி வந்திருப்பதை வரலாறுகள் உணர்த்தி நிற்கின்றன.

## வள்ளிக் கொடியின் தோற்றம்

முருகனுக்கு மனைவியர் இருவர். தெய்வயானை, வள்ளி என்ற இரு சக்திகளும் இச்சா சக்தி, கிரியா சக்திகளின் அடையாளமாக விளங்குகின்றனர்.

அவர்களில் காதல் மணம் புரிந்து மணமுடிக்கப்பப்பட்ட வள்ளியின் தோற்றம் பற்றி நற்றிணையில் வரும் பின்வரும் பாடல் அடிகள் எடுத்துக் காட்டுகின்றன:

*"என்னுடன் வருதியோ நன்னடைக் கொடிச்சி*
*முருகு புணர்ந்து இயன்ற வள்ளிபோல நின்*
*உருவுகண் எறிப்ப நோக்கல் ஆற்றலனே....."*

இங்கு முருகனை மணந்து உடன்சென்ற வள்ளிப் பிராட்டியார் போல என்று தலைமகனுக்கு முருகனையும், தலைமகளுக்கு வள்ளியையும் உவமித்துக் காட்டப்பட்டுள்ளது. வள்ளிக் கொடியில் இருந்தே, வள்ளி தோற்றம் பெற்றதாக ஒரு ஐதீகம் நிலவுகின்றது.

இத்தகைய 'வள்ளிக்கொடி' இன்றும் செல்வச் சந்நிதியில் முக்கியத்தவம் பெறுவது, முருக வழிபாட்டின் தொன்மையை எடுத்துக் காட்டுகின்றது. யாழ்ப்பாணத்திலோ மற்றைய இடங்களிலோ உள்ள முருகன் கோயில்களில் உள்ள வழிபாட்டு முறைகளிலோ அல்லது பாரம்பரியங்களிலோ 'வள்ளிக் கொடி' பற்றிய வரலாறுகள் இடம் பெற்றிருக்கவில்லை. ஆனால் செல்வச் சந்நிதியில் மட்டும் வள்ளிக்கொடியின் முக்கியத்துவம், வழிபாட்டு முறையுடன் வைத்துப் பேசப்படுகின்றது.

சந்நிதியானின் ஆவணித் திருவிழா வருதைக் கட்டியம் கூறுவது போல் தானாகவே முளைத்து வரும் வள்ளிக்கொடியின் தோற்றம் பார்ப்பவர் மனங்களைப் பரவசமடையச் செய்யும்.

வள்ளியைப் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் பல பாடல்களில் இடம் பெற்றுள்ளன. முருகன் மணந்த தெய்வப் பெண் வள்ளியைப் பற்றிய குறிப்பு பரிபாடலில் (14) பின்வரும் அடிகள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது:

*"நறையி னறும் புகை நனியமர்ந் தோயே*
*அறுமுகத் தாறிரு தோளால் வென்றி*
*நறுமலர் வள்ளிப்பூ நயத் தோயே"*

இதன் மூலம் முருக வழிபாட்டில் 'வள்ளிக்கொடி' தொடர்புடையது என்பது உணர்த்தப்படுகிறது.

இப்புனித தலத்தில் முதன் முதலில் ஒரு வள்ளிக் கொடி, இப்போது இருக்கும் மடைப்பள்ளிக் கிணற்றுக்கருகில் தானாகவே முளைத்து உற்சவ காலத்தை அறிவித்தது. இக்காட்சி இராணுவத்தினரால் எரித்துச் சாம்பராக்கப்பட்ட சந்நிதியானின் சித்திரத்தேரில் சிறப்பித்துக் காட்டப்பட்டிருந்தது.

மருத நிலத்துக் கொடியாகிய வள்ளி, நெய்தல் நிலத்துச் செல்வச் சந்நிதியில் இயற்கையாகவே முளைப்பது மருதமும், நெய்தலும் இணையும் சந்நிதியான் ஆலயச்சூழலின் தனித்துவத்தையும் பெருமையையும் எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.

## *தலவிருட்சத்தின் சிறப்பு*

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்ட செல்வச் சந்நிதி முருகனின் தல விருட்சமாக விளங்குவது பல நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்ட பூவரசு மரமாகும். இது கோயிலின் மேற்குப் புறமாக வள்ளி அம்மன் வாசலுக்கு எதிராக உள்ள நாகதம்பிரான் மண்டபத்துடன் உள்ளது.

இது ஞானி ஒருவரின் சமாதியில் இருந்து முளைத்து ஓங்கி எழுந்ததாகக் கூறப்படுகின்றது. மிகப் பழமை வாய்ந்த இவ்விருட்சம் சில காலங்களில் தன் இலைகளை உதிர்த்துப் பட்டமரம் போல் காட்சி அளிக்கும். பின் திடீரென இதன் இலைகள் நன்கு செழித்து வளர்ந்து பச்சைப் பசேலென்று காட்சி அளிக்கும்.

இப்பூவரசு மரம், அற்புத சக்தி வாய்ந்த ஒரு விருட்சம் என்பதை இங்கு இவ்விருட்சம் தொடர்பாக இடம்பெற்ற சில அற்புதங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இதன் மஞ்சள் பூத்து தானாகவே உதிர்ந்த இலையைப் பக்தியோடு எடுத்து வீட்டில் புனிதமான ஒரு இடத்தில் வைத்தால், அந்த இலையைக் குனிந்து எடுக்கும் பொழுது எதனை நினைத்தார்களோ, அது நிறைவேறும் என்ற நம்பிக்கை இன்றும் சந்நிதிப் பக்தர்களிடம் இருந்து வருகின்றது.

அந்தப் புனிதமான பூவரச மரத்தின் மஞ்சள் பூத்துப் பழுத்த இலையை மருந்தாகவும் பயன்படுத்தும் வழக்கம் நீண்ட காலமாக இருந்து வருகின்றது.

சந்நிதியின் தலவிருட்சமான இப்பூவரசு பற்றி சி. குலசபாநாதன் தனது கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை, இவ்விருட்சத்தின் மகிமையைக் கட்டியங் கூறுவது போல் உள்ளது.

> "கோயிலின் உள்வீதியில் மேற்குத் திசையில் பழைய பூவரசு மரம் ஒன்றைக் காணலாம். இது மிகவும் பழைய மரம் என்பதற்கு ஐயமே இல்லை. இது ஒரு பெரிய தவசிரேட்டர் சமாதியான இடத்தின் மீது வளர்ந்து நிழல்தரும் மரமாகக் காட்சியளிக்கின்றது. சில சமயங்களில் இதன் இலைகள் யாவும் உதிர்ந்து மரமே பட்டு விட்டது போல் இருக்கும். ஆனால் எதிர்பாராத விதமாக அழகிய குடை விரித்திருப்பது போல் சடைத்து வளர்ந்து பச்சிலைகளைத் தள்ளிச் சமாதிக்கு நிழல் தரும் விருட்சமாகக் காட்சியளிக்கும். இது ஒரு அற்புதம் நிறைந்த விருட்சம் என ஆனந்தாச்சிரமத்தின் ஸ்நாபகர் ஸ்ரீ மயில்வாகனம் சுவாமி அவர்கள் கூறினார்கள்".

இவ்விருட்சத்தின் அற்புதங்கள் தொடர்பான கருத்துக்களையே பின்னாளில் ஆலயச் சூழலில் வாழ்ந்து பல அற்புதங்களைச் செய்து 1996ஆம் ஆண்டில் சமாதியடைந்த முருகேசு சுவாமியவர்களும் குறிப்பிடுவார்.

இன்றும் இப் பூவரசுமரம் அடியவர்களுக்கு இஷ்ட சித்திகளைப் பெற்றுக் கொடுக்கும் விருட்சமாகக் காட்சியளிக்கின்றது.

## *தேனும் தினைமாவும்*

குறிஞ்சித் தெய்வமான முருகனுக்குத் தேனும் தினைமாவும் படைக்கப்பட்டு வருவது பண்டைத் தமிழர் மரபு. இச் சங்ககால வழிபாட்டு மரபைப் பின்பற்றி, இன்றும் சந்நிதியின் வள்ளி அம்மன் வாசலில் தேனும் தினைமாவும் சேர்த்துக் குழைத்துத் தட்டையாக்கி அதில் நெய்த்திரி விட்டு எரித்து 'மாவிளக்கு' போடுதல் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தேனும் தினைமாவும் நெய்யும் விட்டுக் குழைத்து அவற்றைச் சிறிய சுட்டி வடிவில் செய்து அதில் நெய்த்திரிகளை வைத்து எரிக்கும் பொழுது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

தினைப்புனத்தில் வள்ளியிடம், முருகன் தேனும், தினைமாவும் வாங்கி உண்டதாகக் கூறப்படும் வரலாறே, சந்நிதியானின் வழிபாட்டு முறையிலும் இன்றும் பேணப்பட்டு வருகின்றது.

'மாவிளக்கு' என்று அழைக்கப்படுகின்ற அந்த நிவேதனத்தில் சிறிதளவை மருந்தாக வாங்கி உண்பவர்களு க்கு நோய் நீங்கும்; துன்பம் போகும்; மனதிலே புத்துணர்ச்சி பிறக்கும். அதனால் இன்றும்கூட மாவிளக்கு எரித்துப் படையலிட்ட பின், அங்கே நிற்பவர்களுக்குப் பகிர்ந்து வழங்கி தாமும் அருந்துவர்.

'மாவிளக்கு' படையலிட்டதும், அதில் சிறிய துண்டையாவது வாங்கி விட வேண்டும் என்ற ஆவலில் முண்டி அடித்துக் கொண்டு நிற்கின்ற பக்தர்களைக் காணலாம். அங்கே வயது வேறுபாடின்றி, அந்தஸ்து வேறுபாடின்றி, பால் வேறுபாடின்றித் தமது இரு கைகளையும் நீட்டியபடி நிற்பவர்களுடன் முருகனும் ஒருவனாக முண்டியடித்து நின்று வாங்குவதாக நம்புகின்றனர்.

## உழுத்தம் பிட்டுப் படையல்

கதிர்காமத்தில் திருவிழா நடைபெறும் பொழுது சந்நிதி முருகனே அங்கு எழுந்தருளுகின்றார் என்ற மரபு இன்றும் பேணப்பட்டு வருகின்றது. அதனை அடியொற்றி கதிர்காமத்தில் கொடியேற்றம் நடைபெறுவதற்கு முதல் நாள் மாலை மங்கிய நேரத்தில், ஆலய வாசலில் இருந்து சுமார் 100 யார் தூரத்தில் உள்ள அரச மரத்தடி வரை இருபுறமும் அகல்விளக்கு ஏற்றி, பூரண கும்பங்கள் வைத்து பிரதம பூசகரினால் 'வேல் ' அனுப்பும் விழா நடைபெறும். அன்றைய தினம் முருகனின் வழி அனுப்பு பூசையின் பொழுது, உழுத்தம் பிட்டு நைவேத்தியமாகப் படைக்கக்கப்படும். இது 'பயணப்பிட்டு' என்று அழைக்கப்படுகின்றது.

மருதர் கதிர்காமரிடம் முருகன் தோன்றி தான் கதிர்காமக் கொடியேற்றத்திற்குச் செல்லப்போவதாகக் கூறி, வழித்துணைக்கு உணவாக ஏதாவது தருமாறு கேட்கவே, அவர் உழுத்தம்பிட்டுக் கொடுத்து அனுப்பியதாக ஒரு ஐதீகம்.

விசேட அபிடேகங்கள், பூசைகள் முடிவடைந்ததும் மேள தாளங்கள், வாத்தியங்கள், மணியோசைகள் ஒலிக்க, "சுவாமி கதிர்காமம் பயணம்" என்று வழி அனுப்புவதற்காகக் கூடி நிற்கும் பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் 'அரகர' ஒலி வானைப் பிளக்க அரச மரத்தடியில் வைத்து முருகனை வழி அனுப்பி வைப்பார்கள். அதனைத் தொடர்ந்து அங்கே பூசையிலும் வழி அனுப்பு விழாவிலும் கலந்துகொண்ட பக்தர்கள் எல்லோருக்கும் உழுத்தம் பிட்டு பிரசாதம் வழங்கப்படும்.

## பயற்றம் துவையலும் இளநீரும்

கதிர்காமத்துத் தீர்த்தத் திருவிழா அன்று முருகன், சந்நிதி திரும்பி வரும் சடங்குகளும் பூசைகளும் செய்யப்படுகின்றன.

மருதர் கதிர்காமர், நித்திரையில் இருக்கும் பொழுது, கதிர்காமத் தீர்த்த நாள் அன்று இரவு முருகன், அவரை எழுப்பி,

"அப்பா ! ....... கதிர்காமா!...... நான் பாத யாத்திரையாக நெடுந்தூரம் கடந்து வந்தமையால் பசியும் தாகமும் அதிகமாக உள்ளது. ஏதாவது உண்பதற்குக் கொடு." என்று கேட்டதும், பதறித் துடித்த கதிர்காமரின் அங்கமெல்லாம் நடுங்கியது.

"சுவாமி!..... இந்த நள்ளிரவில் தங்களுக்கு அமுது படைக்க எங்கே போவேன்...?" என்று கூறி மனம் நொந்தார்.

"உன்னிடம் இருக்கும் சிறிதளவு பயற்றைத் துவைத்து, தாகத்திற்கு இளநீரும் தா."

என்று முருகன், அவரிடம் கேட்டு வாங்கி திருவமுது செய்தார். அந்த மரபைப் பின்பற்றியே இன்றும் சுவாமி கதிர்காமத்தில் இருந்து திரும்பிவரும் நாள் அன்று நடைபெறும் பூசையின் போதும் பயற்றம் துவையல் உருண்டையும் இளநீரும் நைவேத்தியமாகப் படைக்கப்பட்டு வருகின்றன.

## பால் றொட்டி

கந்த சஷ்டியின் இறுதிநாளன்று, சந்நிதி முருகனுக்கு நிவேதனமாகப் பால் றொட்டி படைக்கப்படும் நடைமுறை இருந்து வருகின்றது. சூரபத்மனுடன் போரை முடித்து திரும்பிய முருகன் திருச்செந்தூரில் நின்ற பொழுது பால் றொட்டியே உணவாக வழங்கியதாகக் கூறப்படுவதால் அந்த மரபை ஒட்டியே கந்த சஷ்டியில் பால் றொட்டி நிவேதிக்கப்படுகின்றது.

## பயற்றங்கறியும் பச்சையரிசி அமுதும்

முருகனின் பிரதானமான நிவேதனமாக 65 ஆலம் இலைகளில் பச்சரிசி அமுதும், அதன்மேல் பயற்றங்கறியும் வைத்துப் படைக்கப்பட்டு வருகின்றது. இதுவே அடியவர்களால் 'மருந்து' என்று அழைக்கப்படுகின்றது.

இப் பிரசாதம் சந்நிதிக்கே உரித்தான தனித்துவமான சுவை நிறைந்த "அமுது" என்பதை அனுபவித்தவர் உணர்ந்து கொள்வர். இது பற்றி இந் நூலின் வேறு இடத்தில் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

## அன்னதானம்

"சந்நிதியில் எந்த நேரமும் உணவு கிடைக்கும்" என்று கூறும் அளவுக்கு சந்நிதியின் ஆலயச் சூழலில் அமைந்துள்ள மடங்களும் சத்திரங்களும் அன்னதானப் பணியை மேற்கொண்டு வருகின்றமை சந்நிதிக்கேயுரிய இன்னுமொரு சிறப்பமிசமாகும். வந்தார்க்கு எந்த நேரமும் உணவு வழங்குவதாலேயே, 'சந்நிதிக் கந்தன்' 'அன்னக் கந்தன்' என்று சிறப்பித்துப் பூசிக்கப்படுகின்றான்.

இறைவன் அடியார்களையே இறைவனாகப் பாவனை செய்து அவர்களுக்கு அன்னம் அளித்து உபசரணை செய்து வழிபாடியற்றுவது மாகேசுர பூசை எனப்படும்.

இத்தகைய அன்னதானப் பணியை மேற்கொள்வதில் இன்று சந்நிதியாள் ஆச்சிரமம், அடியார் மடம் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. அன்னதான மடங்களில் அடியவர்களின் மத்தியில் அடியவராக இருந்து முருகப் பெருமானும் அன்னம் உண்பதாகவும் கூறப்படுகின்றது.

1985ஆம் ஆண்டிற்கு முன்னர் இப்பணியை மேற்கொண்டு வந்த சுமார் நாற்பதுக்கு மேற்பட்ட மடங்கள் யுத்த நடவடிக்கைகளினால் அழிக்கப்பட்டு விட்டமை துரதிர்ஷ்டவசமானதே.

இவ்வாலயத்தில் அன்னதானம் உண்பவர்களின் துன்ப, துயரங்கள் நீங்குவதாகக் கருதுகின்றனர்.

## பூத்தொண்டு செய்தலும் விளக்கெடுத்தலும்

சந்நிதி முருகன் ஆலயத்தில் நிகழ்கின்ற தொண்டுகளும் நேர்த்திக் கடன்களும் மற்றைய எந்த ஆலயங்களிலும் காண முடியாத அளவுக்கு உணர்வு பூர்வமானவையாக இருக்கும்.

''பூத்தொண்டு செய்தல்'', ''விளக்கெடுத்தல்'' என்ற பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டு வரும் தொண்டுகள் அன்று தொடக்கம் இன்றுவரை நிகழ்ந்து வரும் இரு வகையான புனித தொண்டுகளாகும்.

மருதர் கதிர்காமரின் பரம்பரையில் வந்த, தொண்டைமானாற்றையும் அதனைச் சூழ்ந்துள்ள கிராமங்களையும் சேர்ந்த ஆண்கள் பூத்தொண்டு செய்யும் கடமைகளையும், பருவமடையாத சிறுமிகள் விளக்கெடுக்கும் தொண்டினையும் உற்சவ நாட்களில் மேற்கொள்வர்.

கொடியேற்ற நாளில் இருந்து தீர்த்தோற்சவத்திற்கு மறுநாள் நடைபெறும் பூத்திருவிழா வரையும் உள்ள பதினாறு நாட்களும் இத்தொண்டுகளை மேற்கொள்வர். இவர்கள் கொடியேற்ற நாளின் முதல்நாள் பஞ்சகவ்வியம் அடங்கிய விசேட தீர்த்தத்தை ஆலய பிரதம குருவிடம் பாதம் பணிந்து வாங்கி அருந்தி, தூய்மையுடன் தமது தொண்டினை ஆரம்பிப்பர்.

அவர்கள் மிகுந்த கட்டுப்பாட்டுடனும் ஆசாரத்துடனும் கோயிலில் தங்கியிருந்தப்படியே பூ எடுத்து மாலை தொடுத்து வேலவனை அலங்கரிக்கும் பணிகளைச் செய்து வருவார்கள். அவற்றைவிட ஆலயத்தின் பல்வேறு பணிகளையும் அவர்களே செய்து வருவார்கள். அத்தகைய அரிய பணி எல்லோருக்கும் வாய்ப்பதில்லை.

பூக்காரர்களுக்கென வயதிலும், பூத்தொண்டு புரிந்தமையில் சேவை மூப்பும் உடைய ஒருவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு, 'மணியகாரர்' என்று அழைக்கப்படுவார். அவருடைய சொல்லுக்கும் கட்டளைக்கும் கீழ்ப்படியும் பண்பை பூக்காரர்களிடம் காணலாம்.

பூக்காரர்களுக்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு :

1. ஆசௌசம் இல்லாதவர்களாக இருத்தல் வேண்டும்.
2. விசேட தீர்த்தம் அருந்தியபின் தமது வீடுகளுக்குச் செல்லக்கூடாது.
3. புகைத்தல், மதுபானம் அருந்துதல், புலால் உண்ணுதல் போன்ற பாவச் செயல்களில் ஈடுபடுதல் கூடாது.
4. தினமும் நீராடி, தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து பூத்தொண்டினை மேற்கொள்ள வேண்டும்.
5. பூ அறையில் இருந்து பூவேலைகளை மேற்கொள்ளும் போது ஒருவரோடு ஒருவர் வாய்திறந்து கதைக்கவோ, கும்மாளமிட்டுச் சிரிப்பதோ கூடாது.
6. ஆலயத்தில் வழங்கப்படும் ஆகாரத்தைத் தவிர வேறு எங்கும் உணவு அருந்துதல் கூடாது.

இவை போன்ற கட்டுப்பாடுகளைப் பூத்திருவிழா முடியும் வரையும் கடைப்பிடிக்க வேண்டியது பூக்காரர் ஒவ்வொருவரின் கடமையாகும். "பூக்காரர் செல்வச் சந்நிதியில் இருப்பது போல் ஈழத்தின் வேறெந்தக் கோயிலிலும் இல்லை" என்று பேராசிரியர் சு. வித்தியானந்தன் குறிப்பிடுவார். பூக்காரர்கள் தீர்த்தம் முடிந்து மறுநாள் அதிகாலையில் இருந்து, பிற்பகல் வரை ஆலயத்தை முன்பிருந்த சூழலுக்குக் கொண்டுவரும் வகையில் சகல வேலைகளையும் செய்வதுடன், இடைத்திருவிழாக் காலங்களிலும் வந்து தமது தொண்டினை மேற்கொள்வர்.

திருவிழாக் காலங்களில் முருகன் வீதியுலா முடிந்ததும் பருவமடையாத பன்னிரு சிறுமிகள் சிறிய வெண்கலத் தட்டங்களில் நெய் விளக்கேற்றி முருகன் வாசலில் ஆரத்தி எடுத்து, தீபாராதனை செய்யும் சடங்கு மிகவும் அற்புதமாகவும் உணர்ச்சி பூர்வமாகவும் இருக்கும்.

பன்னிரண்டுக்கு மேற்பட்ட சிறுமிகள், விளக்கெடுக்கும் தொண்டினை மேற்கொள்வாராயின் அவர்களுக்கான நேர அட்டவணை ஒன்றைப் பூக்காரர்களின் 'மணியம்' தயாரித்துக் கொடுப்பார். அதற்கமைய ஒரு திருவிழாவின் பொழுது பன்னிரு சிறுமிகளே ஆரத்தி எடுக்க அனுமதிக்கப்படுவர்.

முருகன் வாசல் மகா மண்டபத்தில் பன்னிருவரும் வரிசையாக நிற்க ஆலயப் பிரதம குரு விளக்குத் தட்டங்களையும் நெய்த்திரியையும் கொடுப்பார். எல்லோரும் பூசகரிடம் இருந்து அதனை வாங்கி தீபத்தை ஏற்றியதும் மூலஸ்தான திரைச்சீலை சிறிதாகத் திறக்கப்படும். அப்பொழுது எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஆரத்தி எடுத்துப் பின்னர் வரிசையாகச் சென்று பிள்ளையார் வாசலில் வைத்து வணங்கி விட்டுத் திரும்பி வருவர். மீண்டும் மண்டப வாசலை அடைந்து பிரதம குருவை வணங்கி விட்டு வள்ளியம்மன் வாயிலை அடையும், அந்தப் பன்னிரு சிறுமிகளின் பக்தி உணர்வு பார்ப்பவர் நெஞ்சங்களையே பரவசமடையச் செய்யும்.



விளக்கெடுக்கும் சிறுமிகள்

அந்த மரபானது முருகனைச் சீராட்டி வளர்த்த கார்த்திகைப் பெண்களை நினைவு கூரும் வகையில் சந்நிதியில் பேணப்பட்டிருக்க வேண்டும். இதற்கான வரலாற்றுச் சான்றாதாரங்களைப் பெற முடியவில்லை.

விளக்கெடுக்கும் சிறுமிகள் உற்சவ நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் ஆலயத்தைத் துப்பரவு செய்தல், தீபங்களை விளக்குதல், மடைப்பள்ளி பாத்திரங்களைக் கழுவுதல் போன்ற பல்வேறு தொண்டுகளையும் செய்வர்.



பூங்காவனத்தில் சந்நிதி வேலவனின் எழில் கோலம்.

தீர்த்தோற்சவம் முடிந்து மறுநாள் பூத்திருவிழா நடைபெறும். அன்று பகல் ஆலயத்தின் சகல பணிகளையும் செய்து முடித்தபின் இரவு விசேடமான பூசை நடைபெறும். அதனைத் தொடர்ந்து பூக்காரர், விளக்கெடுத்த சிறுமிகள், கோயில் தொண்டு செய்தவர்கள் எல்லோரும் வரிசையாக நின்று பிரதம பூசகரின் காலைத் தொட்டு வணங்கி, தெட்சணையைத் திருநீற்றுத் தட்டில் வைப்பார்கள். பூசகர் அவர்களுடைய உச்சியில் திருநீறு போட்டு, நெற்றியில் பூசி ஆசீர்வாதம் செய்வார். பின்னர் ஒவ்வொருவருக்கும் மாவிளக்கும், புதிய பனை ஓலைப்பெட்டியில் பிரசாதங்களும் வைத்து நன்றி கூறி வழியனுப்பி வைப்பார். இறுதியாக வயிரவர் காப்பு அவிழ்க்கப்படுவதால் ஆலயச் சூழலில் அன்று எவரையும் தங்கவிடுவதில்லை. அன்றைய இரவில் சகல சடங்குகளும் முடிவடைந்ததும், கோயில் காண்டாமணி ஒலிக்க, ஆலயத்தில் இருந்து விடைபெற்றுச் செல்லும் பூக்காரர்களும், விளக்கெடுக்கும் சிறுமிகளும், ஆலயச் சூழலில் தங்கி வாழும் இரப்போரும், ஏனைய தொண்டர்களும் சேர்ந்து ஒருமித்து எழுப்பும் 'அரஹர' ஒலி வானைப் பிளந்து, அந்தக் கிராமத்தையே ஒருகணம் மெய்சிலிர்க்க வைக்கும்.

ஆலயத்தில் இருந்து விடைபெற்றுத் தத்தமது வீடுகளுக்குச் செல்லும் பூக்காரர்களையும் விளக்கெடுத்துத் தொண்டு செய்த சிறுமிகளையும் அவரவர் வீடுகளில் மங்கள விளக்கேற்றி, பூரண கும்பங்கள் வைத்து ஆரத்தி எடுத்து வரவேற்று மகிழ்வர்.



செல்வச் சந்நிதியின் ஆரம்பகால தோற்றம்.

# ௬ சந்நிதியின் நேர்த்திகள்

சந்நிதிக்கென்றே இருக்கும் இன்னுமொரு முக்கிய பண்பு, அவன் மீது பக்தர்களால் செலுத்தப்படும் நேர்த்திக் கடன்கள் ஆகும்.

சந்நிதியில் நடைபெறும் நேர்த்திக்கடன்கள் அவன் அடியவர்களின் உணர்வு கடந்த பக்திநிலையைக் காட்டுவனவாக உள்ளன.

முருகனுக்கு 'இன்னது' செய்வேன் என்று நேர்த்தி வைத்தால் அதை அந்த ஆண்டிற்குள் செலுத்திவிட வேண்டும். ஏதாவது காரணங்களினால், அவை பின்தள்ளிச் செல்லுமாயின் அதனைக் கனவினூடாகவோ, சில அறிகுறிகள் ஊடாகவோ, பிறரூடாகவோ ஏதோ ஒரு வகையில் அறிவித்து விடும் சந்நிதியான், அடியவர்களின் வேண்டுதல்களை என்றும் நிறைவேற்றி வைக்காது விட்டதில்லை.

நேர்த்திகள் பல்வேறு தேவைகளை மனதில் கொண்டு, நிறைவேற்றப் படுகின்றன. சந்நிதியின் வழிபாடியற்றுவோரிடம் இருந்து பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் அவற்றுள் சிலவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. தீராத நோய் வந்து சுகம் அடைந்தவர்களின் நேர்த்திகள்.
2. பேசாத பிள்ளை பேசத் தொடங்கிய நிலையில் பெற்றோரின் நேர்த்திகள்.
3. திருமணமான தம்பதியினரின் நேர்த்திகள்.
4. நீண்ட நாட்கள் பிள்ளைப்பேறு இல்லாது குழந்தையைப் பெற்றவர்களால் செய்யப்படும் நேர்த்திகள்.
5. வறுமையில் வாடியவர்கள் செல்வத்தில் மிதக்கும்போது செய்யும் நேர்த்திகள்.
6. வன்செயல் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு, மீண்டு வரும்போது செய்யப்படும் நேர்த்திக்கடன்கள்.
7. ஊனமுற்றவர்கள், ஊனம் நீங்கியதும் செய்யப்படும் நேர்த்திகள்.

இவ்வாறு ஒவ்வொருவரும் தமது குறைகளை முருகனிடம் கூறி வருந்தி இரக்கும் போது, ஓடிவந்து குறை தீர்க்கும் சந்நிதியான் உறையும் இடமே தொண்டைமானாறு என்று அடியவர்கள் பேசிக் கொள்வார்கள்.

இவற்றின் அடிப்படையில் பல மயிர்க்கூச்செறியும் நேர்த்திகளைக் கூட நிறைவேற்றி வைப்பர்.

1. அலகில் வேல் பாய்ச்சி, முதுகிலும் கைகளிலும் பல முட்களைக் குத்திச் செடில் காவடிகள் எடுத்தல்: இவை சுழன்று, சுழன்று ஆடும் ஆட்டக் காவடிகளாக இருக்கும்.

2. பல்வேறு காவடிகள் எடுத்தல்.
   உ+ம்: மயில் காவடி , பால் காவடி, கரும்புக் காவடி, முள்ளு மிதியடிக் காவடி.
3. பாற்செம்பு, கரகம் என்பன எடுத்தல்.

4. ஆலய வாசலில் விறகுகளை எரித்து அதன் செந்தணலில் தீக்குளித்தல் இடம்பெறும். இங்கு சிறுவர், பெண்கள் கூட "முருகா முருகா" என்று உச்சரித்தபடி தீக்குளிப்பது உணர்வு பூர்வமாக இருக்கும்.

5. துலாக் காவடி, தூக்குக் காவடி, பறவைக் காவடி போன்ற மயிர்க் கூச்செறியும் நேர்த்திகளைச் செய்தல்.

6. அன்னதானம் வழங்குதல்.

7. மாவிளக்கு எரித்துப் படைத்தல் – இது வள்ளி அம்மன் வாசலில் வைத்து எரித்துப் படைத்து, பக்தர்களுக்கும் வழங்கப்படுதல்.

8. பாற்செம்பு, கற்பூரச் சட்டி என்பன எடுத்தல். இவை பொதுவாகப் பெண்களாலேயே நிறைவேற்றப்படுகின்றன.

9. மடிப்பிச்சை எடுத்து நேர்த்தியை முடித்தல். வீடு வீடாகச் சென்று மடியில் பிடி அரிசியைப் பெற்று அதனை ஆலயத்தில் கொண்டுவந்து கொடுத்து அமுது பெறுதல்.

10. அன்னக் கந்தனின் சந்நிதி வாயிலில் குழந்தைகளுக்குப் பால் பருக்குதல், அன்னம் தீர்த்துதல் ஆகிய நேர்த்திகளையும் வைப்பர். இங்கு குறித்த நாளன்று குழந்தையைக் கோயிலுக்குக் கொண்டுவந்து மயிர் வழித்து, மாணிக்கக் குளத்து நீரால் குழிப்பாட்டி, சந்நிதியில், ஐயரிடம் இருந்து 'மருந்து' என்ற அமுதைப் பெற்றுக் குழந்தைக்குத் தீர்த்துவார்கள்.

11. வளர்ந்தவர்களும்கூட சில நேர்த்திகளுக்காக தலையில் மொட்டை வழித்து, ஆற்றங்கரையில் நீராடிய பின்னர் மாணிக்கக் குளத்து நீரால் தோய்ந்து அங்கப்பிரதட்சிணை செய்தல்.

12. குழந்தைகளின் கையினால் அள்ளு காசும் தென்னம் பிள்ளையும் கொடுப்பதாக நேர்த்தி வைப்பர். சில்லறைக் காசுகளை ஒரு தட்டில் போட்டு அதில் இருந்து குழந்தைகளின் கையில் மூன்று முறை சில்லறையை அள்ளி ஐயரிடம் கொடுப்பித்தல். தென்னம்பிள்ளையும் அவர்களின் கையினாலேயே கொடுக்க வைத்தல்.

13. தமது வாழ்நாளில் செய்யும் சில நன்மையான காரியங்களைச் சந்நிதியிலேயே ஆரம்பிக்கின்றனர்.
திருமணம் முடித்தல் சடங்கு, மிக எளிமையாகவும் சிறப்பாகவும் சந்நிதியில் நடாத்தப்படுகின்றது. இச் சடங்கு வள்ளி அம்மன் வாயிலிலேயே நடைபெறும். புதிய வாகனங்களை வாங்குபவர்கள் அதன் முதல் ஓட்டத்தைச் சந்நிதியின் வீதியிலேயே நடத்துகின்றனர்.

14. குழந்தையை விற்று வாங்குவது போன்ற நேர்த்திக் கடன்களும் சந்நிதியில் நிறைவேற்றப்படுகின்றன.

15. சங்காபிஷேகம், உருத்திராபிசேகம் என்பன வைப்பதாக நேருதல்.

இவ்வாறு சந்நிதியின் அடியார்கள் ஒவ்வொருவரும் முருகன் மீது தாம் கொண்ட அன்பு நிலைக்கேற்ப தமது சக்திக்குட்பட்ட நிலையில் நேர்த்திகளை வைப்பதும் அவற்றை உரிய காலப் பகுதியில் நிறைவேற்றியும் வைக்கும் மரபு நீண்ட காலமாகவே சந்நிதியில் இருந்து வருகின்றது.



சந்நிதியானுக்கு, தூக்குக் காவடி மூலம் ஒரு பக்தர் நேர்த்திக் கடனை நிறைவேற்றுகின்றார்.

# 10 சந்நிதியின் சித்தர்களும், யோகிகளும்

நீடித்த தியானத்தின் மூலமும், இறைவழிபாட்டின் மூலமும், மக்கள் பணிமூலமும்; ஞானத்தையும் அருள்வாக்கினையும் பெற்றுச் சித்துக்கள் புரிபவர்கள் சித்தர்கள் எனப் போற்றப்படுகின்றனர். சித்தர்கள் கடவுளைக் கண்டு தெளிந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். சித்தர்கள் பதினெண் சித்தர்கள் என்று கூறப்பட்டாலும், பல நூற்றுக்கணக்கான சித்தர்கள் இருந்தனர் என்பதே உண்மையானதாகும். அந்த வகையில் அற்புதங்களையும், சித்துக்களையும் செய்த பல நூற்றுக்கணக்கான சித்தர்களையும், ஞானிகளையும் தமிழகமும், ஈழத் தமிழகமும் காலங் காலமாகப் பெற்று வருகின்றன.

பக்தர்களுக்கும், சித்தர்களுக்கும் உள்ள வேறுபாடு பற்றிய பாடல் ஒன்று பின்வருமாறு குறிப்பிடுகின்றது,

*"கடவுளைக் காண முயல்கின்றவர்கள் பக்தர்கள்*
*கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்".*

எனவே பிறவிப் பெருங்கடலில் சித்தி அடைந்தவர்கள் பொதுவாகச் சித்தர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

சித்தர்கள் சாதி, பிரதேசம், பிறப்பு, சமயம், இனம், பால், அந்தஸ்து போன்றவற்றிற்கு அப்பாற்பட்ட ஒரு நிலையில் வாழ்ந்த போதிலும் மெய்ப் பொருளைக் கண்டறிவதே இவர்களின் குறிக்கோளாக விளங்கியது. கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் 'சமயம்' பற்றிக் குறிப்பிடுகையில்,

*"வெளி மாதிரி ஒன்றும் செய்யாதே*
*உனக்குள் நீ பெலத்துக் கொள்*
*சமயமென்பது ஒரு மாதிரியுமற்ற தனித்த நிலை"*

என்று புதுமையான ஒரு கருத்தினூடாக வெளிப்படுத்தியுள்ளார்.

இங்கு "மாதிரி" எனச் சுவாமிகள் குறிப்பிட்டது விபூதி, உருத்திராக்கம் ஆகிய வேடம் அனைத்தையுமேயாகும். இத்தகைய வெளி வேடங்களைப்பற்றி சுவாமிகள் அடிக்கடி கண்டிப்பார்.

இறைவன், பிரபஞ்சம், படைப்பு, பிரம்மம் பற்றிய விடயங்களில் இவர்கள் தெளித்த சிந்தனையைக் கொண்டிருந்தனர். இவர்கள், சித்துக்கள் பலவற்றைச் செய்து காட்டும் சக்தியைப் பெற்றிருந்த போதும், நடைமுறை வாழ்வில் இதனைத் தவிர்த்தே வந்திருக்கின்றனர். சித்தர்கள் அட்டமா சித்திகளில் கைதேர்ந்தவர்கள். இவர்கள் யோக மார்க்கத்தில் வல்லவர்களாக இருந்து, அந்நெறிவழி நின்று பல சித்திகளைச் செய்துள்ளனர்.

சித்தர்கள் கைக்கொண்ட யோகமார்க்கம், வாசியோகம் எனப்படும். 'வாசி' என்பது சுவாசத்தைக் குறிக்கும். சுவாசத்தை அடக்கி ஆண்டவர்களே யோகிகளாவர்.

இது பற்றி 'வான்மிகர்' என்ற சித்தரின் பாடல் ஒன்று பின்வருமாறு கூறுகின்றது.

*வாசிதனை அறியாத சண்டி மார்கள்*
*வார்த்தையினால் மருட்டி வைப்பர்*
*நாசிநுனிதன் நடுவில் சிவத்தைக் கண்டோர்*
*நான்முகனும் திருமாலும் சிவனும் தானே.*

என்று சுவாசத்தை அடக்கி ஆளும் 'பிராண யாமம்' என்பதன் ஆற்றல் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பல சித்தர்கள், தமது ஞான வேள்வியினை ஒரு குருவினூடாகக் கற்றுத் தமது ஞானவாழ்வை ஆரம்பித்தனர். அதேவேளை ஈழத்தின் பல்வேறு தலங்களிலும் வாழ்ந்த சுவாமிகள் சிலர் ஏற்கனவே இல்லற வாழ்வில் பல வருடங்கள் வாழ்ந்து, அனுபவித்து இந்நெறியினுள் தம்மை ஐக்கியப் படுத்தியவர்களாக உள்ளனர்.

செல்வச் சந்நிதியின் முருகேசு சுவாமிகள் யாழ்ப்பாணம் குழந்தைவேற் சுவாமிகள், செல்லாச்சி அம்மையார் ஆகியோரை இதற்கு உதாரணங்களாகக் கட்டலாம்.

யாழ்ப்பாணத்தில் சித்தர்கள் பலருக்கும் மூலமாக விளங்கியவர் கடையிற் சுவாமிகளாவர். இவர் பெங்களூரில் இருந்து மண்டைதீவுக்கு வந்து, பின்னர் வண்ணார்பண்ணையில் வாழ்ந்தவராக அறிய வருகின்றது. கடையிற் சுவாமிகளைத்

தொடர்ந்து, தேரடி செல்லப்பா சுவாமிகள், கொழும்புத்துறை யோகர் சுவாமிகள், சின்னத்தம்பி சுவாமிகள், கனகரத்தின சுவாமிகள், மகாதேவ சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள் என்போரையும், மயில்வாகன சுவாமிகள், ஜேர்மன் சுவாமிகள் (சுவாமி கௌரிபாலா) ஆனைக்குட்டிச் சுவாமிகள், மௌன சுவாமிகள், சுப்பிரமணிய சுவாமிகள், முருகேசு சுவாமிகள் என்று வளர்ந்து வரும் ஞான பரம்பரையை இன்றும் காணலாம்.

இவ்வாறு ஞானவேள்வியில் தம்மை ஆகுதியாக்கி மெய்ஞானத்தை அருளிய சித்தர்களில் ஒரு பகுதியினரது வாழ்வும், ஞான ஒடுக்கமும், சித்துக்களும் செல்வச் சந்நிதியிலும் தொன்று தொட்டு இருந்து வருகின்றமையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதாகும். சந்நிதிச் சுழலில் அதிக சக்தி வாய்ந்த பல சித்தர்களும், ஞானிகளும் நெடுங்காலமாக வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஆனால் அவர்களில் பலரது வாழ்வியல் பற்றிய ஆவணப்படுத்தல் முழுமையாக மேற் கொள்ளப்படாததும் துரதிர்ஷ்ட வசமானதே.

சந்நிதிக்கென்றே ஒரு சித்தர் பரம்பரை இருந்த போதிலும், சந்நிதியுடன் தொடர்பான வேறு சித்தர்களின் அடிச்சுவட்டில் நடைபெற்ற சம்பவங்கள் கூட செல்வச் சந்நிதியின் பெருமைகளை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.


ஒரு முறை, கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் சந்நிதியானைத் தரிசிக்க வந்தபோது, வாகனத்தில் இருந்தபடியே கீழே பார்த்ததும், அதில் இருந்து இறங்குவதற்குத் தயங்கினார்.

*"கீழே இறங்குவதற்கு எனது பாதங்கள்*
*கூசுகின்றன. எப்படி இந்த மண்ணில் கால்வைப்பேன்?"*

என்று தன்னுடன் வந்தவர்களைப் பார்த்துக் கூறினார். அங்கே நின்றவர்களுக்கோ ஒரே குழப்பம். என்ன செய்வது என்று தெரியாத நிலையில், ஆச்சரியத்தால் சுவாமிகளை நிமிர்ந்து பார்த்தனர்.

"என்ன பார்க்கின்றீர்கள்? இங்கே எங்கு பார்த்தாலும் சிவலிங்கம் தெரிகிறதே? எப்படி இந்தப் புனித மண்ணில் பாதங்களை வைப்பது?"

என்று கூறிக் கொண்டே, சந்நிதியானைத் தொழுது அந்த மண்ணைத் தொட்டு வணங்கினார்.



யோகர் சுவாமிகள்

இத்தகைய புனிதமும், மகிமையும் நிறைந்த சந்நிதியானின் அருட்கடாட்சத்தைப் பெற்ற பல ஞானிகளையும், சித்தர்களையும், அருளாளர்களையும் சந்நிதிச் சூழல் காலத்திற்குக் காலம் உள்வாங்கிக் கொண்டு வருகின்றது. எனவே சந்நிதியில் வாழ்ந்த சந்நிதியுடன் தொடர்பான சித்தர்களினதும், ஞானிகளினதும் வரலாறுகளும் அற்புதங்களும் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியவையாகும்.

செல்வச் சந்நிதியின் தோற்றத்துடன், ஆலயச் சூழலில் பரந்துபட்ட அளவில் மடங்களும், சத்திரங்களும் தோற்றம் பெற்றமை அந்தக் காலச் சூழலின் கட்டாய தேவையாக இருந்தது. அங்குள்ள மடங்களையும், ஆச்சிரமங்களையும் தளமாக வைத்தே அன்று தொடக்கம் இன்றுவரை பல சித்தர்களும், ஞானிகளும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் இருந்து ஆன்மீக அமைதி வாழ்வைத் தேடி வந்த பல ஐரோப்பியர்களுக்கு சந்நிதி வாய்ப்பான ஒரு சூழலாக அமைந்ததில் வியப்பொன்றுமில்லை. அந்த வகையில் அவர்களைப் பற்றிய முழுமையான ஆய்வுகள் எதிர் காலத்திலாவது மேற்கொள்ளப்பட வேண்டும்.

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் வாழ்ந்த சித்தர்களில் நால்வர் பற்றிய செய்தியொன்று 1965ஆம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 26ம் திகதி வெளியான 'வீரகேசரி' பத்திரிகையில் வெளியாகியது. அதில்,

''உலகத்தின் பல பகுதிகளில் இருந்தும் இங்கு வந்து கூடியிருக்கும் சுவாமிகளால் சைவ சமயத்தவர்களுக்கும் பெருமையும் புகழும் உண்டாகின்றது. இவர்களில் நால்வர் செல்வச் சந்நிதிக்கந்தன் மேல் கொண்ட காதலினால் மயங்குண்டு அவ்விடமே வாசம் செய்கின்றனர்.

என வெளி நாட்டில் இருந்து, இங்கு வந்து சந்நிதி முருகன் மேல் பற்றுக் கொண்ட சுவாமிகளாக வாழ்ந்தவர்களைப் பற்றிச் "செல்வச் சந்நிதி நால்வர்" என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## *சுவாமி கௌரிபாலா*

இவர் ஜெர்மன் தேசத்தில் இருந்து இங்கு வந்து ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்தவர். சைவ சமய அடிப்படைச் சித்தாந்தங்களை நன்கு தெரிந்து கொண்ட சுவாமி கௌரிபாலா சைவ சமயப் பிரசாரமும் செய்து வந்தவர். இவரே தனது ஆன்மீக வாழ்வின் ஊடாகப் பெற்ற அனுபவத்தைக் கொண்டு "சும்மா இருக்கச் சூத்திரம்" என்ற தொகுப்பு நூலையும் வெளியிட்டுள்ளார்.

இவரது நூலில் 'சித்தி' பற்றிப் பின்வரும் சிறப்புப் பாயிரத்தினூடாக வெளிப்படுத்தியுள்ளார்.

*"சித்தியெனில் கண்கட்டு வித்தையல்ல*
*சில்லறையாம் கருமத்துச் செய்கையல்ல*
*மித்தையெனும் சூனியமாய் மாலமல்ல*
*மின்னணுவாம் விஞ்ஞான வியப்புமல்ல*
*சித்தியெனில் ஈசனுடன் ஒன்றாம் சித்தி.*
*சிவனாவா னவனேதான் சித்தன்..........."*

இவர் 'சும்மா இரு' என்று தனது கையில் பச்சைகுத்திக் கொண்டு திரிந்தவர்.

## *ஆனைக்குட்டிச் சுவாமி*

இலங்கையின் முன்னாள் பிரித்தானிய ஆளுநராக இருந்தவரும், சுதந்திர இலங்கைக்கான யாப்பைத் தயாரித்தவருமான சோல்பரிப் பிரபுவின் மகனே ஆனைக்குட்டிச் சுவாமிகளாவர். இவர் கௌரிபாலா சுவாமியின் தொடர்பினாலும், ஞான உபதேசத்தினாலும் சைவ சமயத்தியில் பற்றுக் கொண்டு துறவறம் பூண்டு சந்நிதியில் வாழ்ந்து வந்தவர். இவரது சமாதி கொழும்பு முகத்துவாரத்தில் உள்ளது. இவரது சீடரான மொட்டைச்சி அம்மையார் திருக்கேதீஸ்வரத்தில் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்து, இறைபதம் அடைந்தார்.

## *நரிக்குட்டிச் சுவாமிகள்*

இவர் அவுஸ்திரேலியாவில் இருந்து இங்கு வந்து சந்நிதியின் ஆச்சிரமத்தில் தங்கி வாழ்ந்தவர்.

## பன்றிக் குட்டிச் சுவாமிகள்

தென்னிந்தியாவில் இருந்து, சந்நிதி அற்புதங்கள் பற்றி அவனூடாகவே அறிந்து ஈழத்திற்கு வந்து சேர்ந்த பன்றிக் குட்டிச் சுவாமிகள் தொண்டைமானாறு ஆச்சிரமத்தில் தங்கி வாழ்ந்தார்.

இந் நால்வரும் தங்களுளெனத் தனித்தனியாக சிறு குடிசைகள் (பர்ணசாலைகள்) அமைத்துக் கொண்டு அவற்றை மிகவும் தூய்மையாகவும், அழகாகவும் வைத்துக் கொண்டு வாழ்ந்தவர்கள். இக் குடிசைகள் கோயிலுக்குத் தென்புறமாக முன்னர் சிறப்பாக இருந்த ஆனந்தாச்சிரம மடத்திற்கருகில் அமைந்திருந்தன. இவர்கள் நால்வரும் தங்களுக்குள் சைவ சமயத்தைப் பற்றிக் கலந்துரையாடியும் சைவ சமயப் பற்றை சந்நிதிச் சூழலில் இருந்து கொண்டே வளர்த்தும் வந்தனர்.

## மயில்வாகனம் சுவாமிகள்

செல்வச் சந்நிதி என்றதும், அடுத்து நினைவில் வருவது ஆனந்தா ஆச்சிரமமாகும். ஆனந்தாச்சிரமத்தைப் பற்றிச் சிந்தையில் நினைக்கும் பொழுது, எம் மனக் கண்ணில் தோன்றுபவர் மயில்வாகனம் சுவாமிகளாவர்.

1913ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 26ஆம் நாள் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் உதித்தவர். இவர் யாழ் நகரில் வர்த்தகம் செய்து பெரும் பணம் சம்பாதித்து வந்தாலும் இவருள்ளத்தில் ஊற்றெடுத்த ஆன்மீக உணர்வின் காரணமாக 1936ஆம் ஆண்டில் துறவறம் பூண்டு, இந்தியாவில் திருவண்ணாமலையில் தங்கிச் சிலகாலம் இரமண மகரிஷியின் சீடனாக வாழ்ந்தார். மயில்வாகனம் சுவாமிக்குத் தீட்சை செய்தவர் இரமண மகரிஷி,

*"நீ எங்கிருந்து வந்தாயோ அங்கேயே*
*போய்த் தொண்டு செய்...."*

என்று கூறியதும் அவரது வாக்கைச் சிரமேற்கொண்டு 1939ஆம் ஆண்டு சந்நிதிக்கு வந்து சேர்ந்தார். செல்வச் சந்நிதிக்குத் திரும்பிய சுவாமிகள் முருகனை நினைத்துத் தேவார, திருவாசகங்களைப் பாடி முருகன் அடியானாக வாழ்ந்து வந்தார். அப்பொழுது பிரதம பூசகர்களில் ஒருவராக இருந்த ஆறுமுகசாமி ஐயரின் (பண்டாரம் ஐயர்) உதவியுடன், அவரது வளவில் தென்னஞ்சோலை சூழ்ந்த சூழலில் மன அமைதி தரும் இடத்தில் சிறுகுடிசை அமைத்து வாழ்ந்து வந்தார். பசித்து வரும் அடியவர்களுக்கு உணவளித்து, அடியார்க்கு அடியவனாக வாழச் சித்தம் கொண்ட மயில்வாகனம் சுவாமிகள் 1940 ஆம் ஆண்டு, ஆடி மாதம் 20ஆம் திகதி ஒரு மடத்தை

உருவாக்கித் தனது பணியை விரிவுபடுத்தினார். பின்னர் அந்த மடத்திற்கு ஆனந்தாச்சிரமம் என்று பெயரும் சூட்டி, அடியார்களுக்கு உணவளித்துத் தங்குமிட வசதிகளையும் செய்து கொடுத்து வந்தார்.



மயில்வாகனம் சுவாமிகள்.

அன்னதானப் பணியின் பொழுது, அடியவர்களை இருத்தி வாழை இலையில் சாதம் இட்டு கூட்டுப் பிரார்த்தனை முடிந்த பின் 'அரகர மகாதேவா' என்ற ஒலியுடன் மாகேசுர பூசைகள் நிறைவேறும் வகையில் நல்ல கட்டுப்பாட்டுடன் மடத்தை நிர்வகித்து வந்தார். சுவாமிகள் முருகன் 'பாமாலை' என்ற முருகன் பாராயணநூலை இயற்றினார். அது இன்றும் அடியவர்களால் பாடப்பட்டு வருகின்றது.

இத்தகைய ஒரு சிறந்த பணியைச் செய்து, அடியவர்களின் உள்ளத்தில் அருள் ஒளியைப் பரப்பி வந்த மயில்வாகனம் சுவாமியவர்கள் 1985இல் சமாதி அடைந்தார்.

இன்று அவரது சீடராக வாழ்ந்த மோகன்தாஸ் அவர்கள், சுவாமிகளின் பணியைச் செவ்வனே நிறைவேற்றி ஆலயத்தில் வரும் அடியவர்களின் பசிப்பிணி போக்குவதுடன் தமிழும், சைவமும் தழைக்கப் பல நிகழ்வுகளை நடத்தி, நூல்களையும் வெளியிட்டு வருவது மயில்வாகனம் சுவாமிகளின் இறுதிக் கால அபிலாசைகளை நிறைவேற்றுவதாக உள்ளது.

## *மௌனகுரு கடவுள் சுவாமி*

சந்நிதி முருகன் மீது ஆழமான பற்றுக் கொண்டு சந்நிதிச் சூழலில் மௌனமாக இருந்து அடியவர்களின் குறைதீர்த்து, ஞானத்தைப் பரப்பி வந்தவரே. மௌனகுரு சுவாமிகள் ஆவார்.



*கடவுள் சுவாமிகள்*

இவர் செல்லப்பா சுவாமிகளின் முதற்சீடராக வாய்த்த மறவன்புலோ சின்னத்தம்பி சுவாமியின் 96 சீடர்களுள் பிரதான சீடராவர். இவரது இயற்பெயர் முருகுப்பிள்ளை. தன்னை நாடிவரும் அடியவர்களில் சிலரை அழைத்து அடிப்பதுபோல் கையை ஓங்கிப் பின்னர் அன்பினால் இறுக அணைத்து ஆசீர்வாதம் செய்யும் சுவாமிகள் தன்னை எப்பொழுதும் ஒரு சாதாரண மனிதனாகவே காட்டிக் கொண்டார்.

துன்பங்களால் பாதிக்கப்பட்டவர்கள் அவரை நாடிவந்து, ஆறுதல் பெற்று மகிழ்ச்சியோடு திரும்புவார்கள். இவர் சந்நிதி ஆலயச் சூழலில் சித்தராகவும், ஞானியாகவும், குருநாதராகவும், ஆன்மீக அருள்விளக்காகவும் திகழ்ந்தவர்.

சுவாமிகளின் ஜயந்தி தினம் சித்திரை மாதம் 15ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## முருகேசு சுவாமிகள்

சந்நிதியில் பல சித்துக்களைச் செய்து முருகன் அடியாராகவே வாழ்ந்து வந்த முருகேசு சுவாமிகள் ஒருநாள்,

"ஞாயிற்றுக்கிழமை அன்று என்னைச் சந்நிதியான் தன்னுடன் அழைத்துக் கொள்ளுவான்" என்று கூறியதற்கிணங்க 1997ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 11ம் நாள் சமாதி அடைந்துவிட்ட முருகேசு சுவாமிகளை நேரில் கண்டு பழகி அவரது ஆசியைப் பெற்ற ஆயிரக் கணக்கான பக்தர்கள் இன்றும் ஆலயச் சூழலில் வாழ்ந்து வருகின்றனர்.

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த முருகேசு சுவாமிகள், சந்நிதியானால் ஆட்கொள்ளப்படுவதற்கு முன்னர் மதவாச்சியில் பெரியதொரு வர்த்தக ஸ்தாபனத்தை நடத்தி செல்வந்தராக வாழ்ந்து வந்தார்.

1960ஆம் ஆண்டு வயிற்றில் அவருக்கு நோய் ஏற்படவே யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் காட்டிய பொழுது, புற்றுநோய் என்று கூறி மகரகமவுக்குப் போகுமாறு கூறினார்கள். அவரும் மகரகம சென்று வைத்தியர்களிடத்தில் காட்டிய பொழுது, புற்றுநோய் என்பதை உறுதிப்படுத்தி, சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் என்றும், "றேடியம்" கதிர்வீச்சு பாய்ச்ச வேண்டும் என்றும் கூறி திகதி கொடுத்து அனுப்பி விட்டார்கள். வீட்டிற்கு வந்து கவலையில் ஆழ்ந்த முருகேசு, சந்நிதியான் மீது பாரத்தைப் போட்டுவிட்டு 'சும்மா' இருந்து விட்டார்.

சில நாட்களில் அவருடைய வயிறு வீங்கி, ஒன்றும் உண்ணவோ, குடிக்கவோ முடியாத நிலையில் அவஸ்தைப்பட்டார். அவரது அவஸ்தையைப் பார்த்து வேதனை அடைந்த அவருடைய நண்பர் கந்தையா என்பவர் ஒருநாள் வந்து,

"செல்வச் சந்நிதிக்கு வாருங்கள்; அங்கு சந்நிதியானுடன் சொல்லி ஆறுதல் பெறுவோம்" என்று கூறியதும் ஏதோ ஒரு உத்வேகம் வந்தவராக அவருடன் நடந்து சென்று சந்நிதிக்குப் போனார்.

அங்கே முருகனைக் கும்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது, ஒரு பெண் வேகமாக அவரை நோக்கி வந்து,


"என்ன? சுகமில்லாமல் வந்திருக்கிறாயா? இப்பொழுதுதானா முருகனைத் தேடிவர முடிந்தது? நீ போய் புளியம் இலையை அவித்து, அந்த நீருடன் ஆற்றங்கரையானின் திருநீறும் கலந்து ஒரு நாளுக்கு ஒரு தடவையாக மூன்று நாட்கள் குடித்து விட்டு வா..... அவனுக்கு ஒரு நேர்த்திக் கடன் வை" என்று சொல்லிவிட்டுக் கூட்டத்தோடு கூட்டமாகச் சென்று மறைந்து விட்டாள்.

முருகேசுவுக்கு அதிர்ச்சியாகவும், வியப்பாகவும் ஒருவித இன்ப நுகர்வாகவும் இருந்தது.

அதனைத் தொடர்ந்து அவரது நண்பர் முருகேசுவைத் தனது வீட்டிற்குக் கூட்டிச் சென்று புளியம் இலை நீரும், திருநீறும் கலந்து குடிக்கக் கொடுத்தார். அதனைத் தொடர்ந்து பச்சை நிறத்தில் கட்டி கட்டியாக வயிற்றால் கழிந்ததுடன் வயிற்றில் உள்ள கட்டியும் குறைந்து சுகமாகி விட்டது.

அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து முருகேசு சுவாமிகள் தன் சொத்து, சுகம், குடும்ப வாழ்வு எல்லாவற்றையும் துறந்துவிட்டு சந்நிதியானே தஞ்சம் என்று அந்த மண்ணிலேயே தன் வாழ்நாளை அர்ப்பணித்து வந்தார்.

முருகேசு சுவாமிகள் ஒரு போதும் காவி உடைக்குள் தன்னை மறைத்துக் கொண்டதில்லை. ஒரு சாதாரண மனிதனாகவே காட்சியளித்த முருகேசு சுவாமிகள் பல்வேறு இடங்களுக்கும் சென்று மக்களுடன் மக்களாகப் பழகி அவர்களது துன்பங்களை நீக்கி ஆசி வழங்கி அவர்களை ஆத்மீகத் துறைக்கு ஆற்றுப்படுத்தி வந்தார்.


முருகேசு சுவாமிகள்

தனது இறுதிக் காலத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இருந்து ஞான ஒளி பரப்பி வந்த முருகேசு சுவாமிகள், 1987ஆம் ஆண்டு அழிக்கப்பட்டு பூசைகள் தடைப்பட்டிருந்த ஆலயத்தைப் புனரமைத்து மீண்டும் பூசைகள் ஆரம்பிக்க ஆற்றிய பங்களிப்பு அளவிடற்கரியது.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் அன்னதானப் பணி சிறக்கவும், அதன் புதிய கட்டிடப் பணிக்குத் தன்னால் இயன்ற பங்களிப்பு அனைத்தையும் வழங்கி இறுதியில் தானே அதனைத் திறந்து வைத்து ஆசியும் வழங்கினார்.

அந்த ஞானகுருவை அடிக்கடி சந்தித்து அவரது மத அனுபவங்களையும், சித்துக்களையும் கேட்டு, அறிந்து அவரிடம் ஆசி பெற்றவர்களில் அடியேனும் ஒருவன் என்பதை நினைக்கும் பொழுது பெருமையாக இருக்கின்றது.

1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறும் நிலைவந்த பொழுது, சில தினங்களுக்கு முன், சந்நிதியானை வணங்கிவிட்டு, சந்நிதியான் ஆச்சிரமத்திற்குச் சென்றேன்.

அங்கே சுவாமியவர்கள், வெள்ளை வேட்டியுடன், கழுத்தில் உருத்திராக்க மாலையுடன் நீள வாங்கிலில் இருந்தார். என்னைக் கண்டதும் சிரித்துக் கொண்டே சைகையால் வரவேற்றார்.

"சுவாமி ........ இன்னும் சில தினங்களில் நான் வேறு இடத்திற்கு மாற்றலாகிச் செல்லப் போகிறேன்......"

எனது உள்ளத்தில் எழுந்த துயரத்தையும் அடக்கியபடி அவருக்கருகில் சென்று அவரை வணங்கியபடி நின்றேன். எனது நோக்கத்தைப் புரிந்து கொண்ட சுவாமிகள் சிரித்துக் கொண்டே,

"மாஸ்ரர்!... நீங்கள் அவனுடைய பிள்ளை!.... உங்களுக்கு எந்தக் குறையும் வராது... நன்றாக வாழ்வீர்கள் உங்களுடைய மனதுக்கு ஏற்றபடி நல்ல வாழ்வும் கிடைக்கும். தைரியமாகப் போய் வாருங்கள்....."

என்று கூறி, எனது நெற்றியில் திருநீற்றைப் பூசி ஆசீர்வதித்துத் தந்த நினைவு என் நெஞ்சைவிட்டு அகலவில்லை. அந்த நிலையில், இன்றும் அவரது சித்துக்களையும், அற்புதங்களையும் நற்பண்புகளையும் நினைத்து வாழ்வதிலும் ஒரு சாந்தி ஏற்படுகிறது.

சுவாமிகளின் நினைவாக சந்நிதியான் ஆச்சிரமத்தில் அறுபத்து மூவர் குருபூசை மண்டபம் அவரது அடியார்களால் அமைக்கப்பட்டு வருடாவருடம் குருபூசை நடத்தப்பட்டு வருகிறது.

## *நடராசா சுவாமிகள்*

தனது இறுதிக் காலத்தில் அடியார் மடத்தில் வாழ்ந்து முருகனின் புகழ்பரப்பி அவன் ஞானத்தை மற்றவர்களுக்கும் வழங்கிப் பல புதுமைகளைச் செய்து வந்தவர் நடராசா சுவாமிகள் ஆவார்.

இவர் மந்துவில் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். 1950 ஆம் ஆண்டு 'முருகர் நடராசர்' என்ற பெயரையுடைய நடராசா சுவாமிகள் வேறு சில அடியார்களுடன் கால் நடையாகவே கதிர்காமம் சென்று முருகனின் அற்புதக் காட்சிகளைக் கண்டுவிட்டு, அவனது நினைவாகவே தாடியுடன் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்.

அவரது கோலத்தைக் கண்ட அவரது மனைவி கோபம் கொண்டவளாய், "போய்த் தாடியை வெட்டிப் போட்டு வீட்டுக்கு வா..... இல்லாவிட்டால் வரவேண்டாம்....." என்று ஆவேசமாகப் பேசி அனுப்பி விட்டாள். அதனால் மனமுடைந்த நடராசா, கவலையுடன் அங்கிருந்து வெளியேறி நடந்து சென்று ஒரு கோயிலில் போய்ப் படுத்திருந்து சந்நிதியானையே தியானித்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது ஒருவர், பூக் கூடையுடன் வந்து,
"நடராசா..... என்ன யோசிக்கிறாய்.... எல்லாம் நல்லபடியே நடக்கும். சந்நிதிக்குப் போவோம் வாருங்கள்......."
என்று மூன்று முறை கூறிக் கொண்டே அவரைக் கூட்டிக் கொண்டு சந்நிதியை நோக்கி நடந்தார்.

சந்நிதிக்குக் கிட்ட நெருங்கியதும், அவரைக் கூட்டிக் கொண்டு வந்தவர்,
நீங்கள் இந்த வழியால் போங்கள். நான் பூ எடுத்துக் கொண்டு அங்கே வருகிறேன்"
என்று கூறிவிட்டுச் சில அடிகள் தூரம் திரும்பி நடந்து சென்று பின் மறைந்து விட்டார்.

அங்கிருந்து சந்நிதி சென்ற நடராசா, செல்லையா மடத்தில் தங்கியிருந்து, அன்னதானச் சோற்றையும், கோயில் பிரசாதங்களையும் உண்டு சந்நிதியான் அடியானாகவே தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தார்.

அங்கிருந்தபடியே முருகனுடன் கனவிலும், நேரிலும் கதைக்கும்பேறு பெற்ற நடராசா சுவாமிகள் அவனிடமே ஞானோபதேசம் பெற்று அடியவர்களுக்கும் ஞான ஒளி பரப்பி வாழ்ந்து அடியார் மடத்தில் இருக்கும் பொழுதே இறைபதம் அடைந்தார்.

## *புங்குடுதீவுச் சுவாமிகள்*

முருகேசு சுவாமிகள் 1997இல் சமாதியடைந்த பின்பு சந்நிதியானின் திருவருளின் தூண்டுதலால் புங்குடுதீவுச் சுவாமிகள் இங்கே, அழைக்கப்பட்டிருந்தார்.

புங்குடுதீவுச் சிவன் கோயில் வேட்டைத் திருவிழா 1997இல் நடைபெற்றபொழுது, வீதியுலாவின்போது, சுவாமி சரிவதைக் கண்டதும், புங்குடுதீவுச் சுவாமிகள் ஓடிச் சென்று அதனைத் தாங்க முற்பட்டார். அப்பொழுது ஏற்பட்ட தாக்கம், அவரை நோயாளியாக்கி விட்டது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நீண்ட நாட்களாகியும் கூட, அவரது நோய் மாறாத நிலையில், சந்நிதியானையே கதி எனக் கிடந்து, இறுதியில் அவனது அழைப்பின் பேரில் சந்நிதிக்கு வந்து சேர்ந்தார்.

புங்குடுதீவுச் சுாவாமிகள் செல்வச் சந்நிதிக்கு வருவதற்கு முன்னர், சந்நிதியான் ஆச்சிரமத்தில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுகளைத் தன் ஞானக் கண்ணால் உணர்ந்துள்ளார். அன்று தன் ஞானக் கண்ணால் கண்ட அதே அரங்கம், சந்நிதியான் சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் நிகழ்வுகள், குருபூசைகள் போன்றவற்றைச் சந்நிதியான் அவருக்குக் காட்டியுள்ளான்.

சந்நிதியான் அருளாசி பெற்ற புங்குடுதீவுச் சுவாமிகள், இன்று சந்நிதியான் ஆச்சிரமத்தில் தங்கியிருந்து பக்தர்களுக்கு ஞானத்தைப் பரப்பிக் கொண்டிருக்கின்றார்.

## திருவாசக சுவாமிகள்

திருவாசக சுவாமிகள் என அழைக்கப்படும் சபாரத்தினம் சுவாமிகளும், சந்நிதிச் சூழலில் வாழ்ந்து முருகன் அருள்பெற்று, அடியவர்களுக்கு நன்னெறி காட்டியவராவர். இவரைப் பற்றிய முழுமையான வரலாறு கிடைக்கவில்லை.

## சடை வரத சுவாமிகள்

செல்வச் சந்நிதியில் ஏற்பட்ட பல்வேறு அனர்த்தங்களின் மத்தியிலும் இன்றும் அன்னதானப் பணியைச் சிறப்புடன் மேற்கொண்டு வருவது அடியார் மடமாகும். இது அடியார்களுக்கு அன்னதானம் செய்யும் நோக்குடன் சடைவரத சுவாமிகளால் சந்நிதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடையிற் சுவாமிகளின் பரம்பரையில் உதித்து, அவருடைய ஞான குருவால் வழங்கப்பட்ட குருப் பெயரே சடைவரதர் என்பதாகும்.

அவருடைய அழகான சடைமுடியும், பண்புகளும் எல்லோரையும் கவரும் வகையில் அமைந்திருந்தன. அவர் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் அவையறிந்தவையாக இருப்பதுடன் மற்றவர்கள் மனதைத் தொடும் அளவுக்கு இருக்கும். "எல்லாம் இறைவன் செயலே" என்ற கோட்பாட்டை முன்வைத்து எல்லாக் காரியங்களையும் கடைப்பிடித்து, அருளால் அனைத்தையும் பார்க்கும் அனுபவத்தை ஒவ்வொருவரும் அடைய வேண்டுமென்று, வழிகாட்டி வாழ்ந்து, பல சித்துக்களையும், அற்புதங்களையும் காட்டி சந்நிதியில் அழியா இடத்தைப் பெற்றுள்ள ஒரு ஞானியாவார். இவரைப் போன்று அடியார் மடத்துடன் தம்மை ஐக்கியப்படுத்தி வாழ்ந்த சுவாமிகளில் நாகமுத்துச் சுவாமிகள், வடிவேல் சுவாமிகள் ஆகிய ஞானிகளும் குறிப்பிடத்தக்கவராவார்கள்.

சந்நிதிச் சூழலில் வாழ்ந்த, சித்தர்கள், ஞானிகள் எல்லோரையும் பற்றிய தகவல்கள் சரியான முறையில் ஆவணப்படுத்தப்படாமையும், மக்களோடு மக்களாக சாதாரண மனிதர்களாக வாழ்ந்தவர்கள், தமது உள்ளத்தில் ஞானஒளியைப் பெற்றதும் சுவாமிகள் என அழைக்கப்படுவதை உடனடியாக ஏற்றுக் கொள்ள முடியாத நிலையிலும் தான் எம்முன் வாழ்ந்து அமரத்துவம் அடைந்த சித்தர்களையும் ஞானிகளையும் அவ்வக் காலங்களுடனேயே மறந்து விடுகின்ற ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

ஆயினும் செல்வச் சந்நிதியில் எண்ணற்ற சித்தர் பரம்பரை ஒன்று இருத்தமைக்கான சான்றுகள் உள்ளன. அவர்களது வாழ்வும், பணியும் அங்கே நிறைந்திருந்த மடங்களோடு பின்னிப் பிணைந்து இருந்தன.

சந்நிதியில் வாழ்ந்த சித்தர்கள் தம் விருப்பத்தின்படி ஏகாந்தமாகத் திரிவதற்கு ஏற்ற ஒரு சூழலாகச் செல்வச் சந்நிதி அமைந்துள்ளமையும், சந்நிதியில் நடைபெற்றுவரும் பூசை முறைகளும், முருகனுடனான அடிநிலை மக்களின் அன்னியோன்னிய உறவாடலும் தான் இங்கு பெருமளவில் சித்தர்களும், ஞானிகளும் உருவாவதற்கான சூழலை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

ஏனெனில் தமிழ் நாட்டில் வாழ்ந்த சில சித்தர்கள் அங்கே நடைமுறையில் இருந்து வந்த சில விரும்பத்தகாத வழிபாட்டு முறைகளையும் ஆலயங்களில் கடைப்பிடிக்கப்படும் மரபுகளையும் கண்டித்துப் பல பாடல்களைப் பாடியுள்ளனர்.

வேதாகம முறையில் அமைந்த சடங்குகள், கிரியைகள், பூசை முறைகள் என்பனவற்றில் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கவில்லை என்பதைச் 'சிவவாக்கியர்' என்ற சித்தரின் பாடல் ஒன்றின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

*"வெந்தநீறு மெய்க்கணிந்து வேடமும் தரிக்கிறீர்*
*சிந்தையுள் நினைந்துமே தினஞ்செபிக்கு மந்திரம்*
*முந்துமந் திரத்திலோ மூலமந் திரத்திலோ*
*எந்த மந் திரத்திலோ ஈசன் வந்தியங்குமே?"*

அந்த வகையிலேயே சந்நிதியில் நடைபெறும் பண்டைத் தமிழர் வழிபாட்டு மரபும், இயற்கைநெறிப் பூசை முறைகளும், ஈழத்தில் சாதாரண நிலையில் வாழ்ந்து பல அரிய அற்புதங்களைச் செய்த சித்தர் மரபும் சேர்ந்தே, சந்நிதிச் சூழலில் பெருமளவில் சித்தர்களும், ஞானிகளும் சைவ சமயத்தின் பால் கவரப்பட்ட ஐரோப்பியர்களும் ஆச்சிரமம் அமைத்து தங்கி வாழும் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தது எனலாம்.



மயில் சோடனையுடன் எழிமையாகக் காட்சி தரும்

# 11 சந்நிதியின், மடங்களும் ஆச்சிரமங்களும்

செல்வச் சந்நிதிச் சூழலில் அமைந்துள்ள மடங்களும், ஆச்சிரமங்களும் அவ்வாலயத்தின் தனித்துவத்தையும், பெருமையையும் பேணி வருகின்றன.

திரு. குல சபாநாதன் செல்வச் சந்நிதியில் உள்ள மடங்களைப் பற்றிய பல தகவல்களைத் தனது குறிப்பேட்டில் வெயிட்டுள்ளார். அவர் அங்கு காணப்படும் மடங்களில் சிலவற்றைச் 'சத்திரங்கள்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

'மடங்கள்' என்பது முனிவர்களும் நைஷ்டிக பிரமச்சாரிகளும், சந்நியாசிகளும் வாழும் இடம் என்று "தமிழ்க் கலைக்களஞ்சியம்" குறிப்பிடுகின்றது. (1982– சென்னை)

'சத்திரம்' என்ற சொல்லுக்கான பொருள் பழைய தமிழ் காப்பியமான சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது சிலப்பதிகாரத்தில் வரும்,
"புறநிலைக் கோட்டத்துப் புண்ணியதானம்" என்ற பாடல் அடியில் வரும் "புணிணியதானம்" என்ற சொற்றொடர் அன்னதானத்தையே கருதுவதால் அதன் உரை ஆசிரியரால் "சத்திரம் முதலான அன்னசாலை" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் பதினைந்து வருடங்களுக்கு முன் சந்நிதிச் சூழலில் சுமார் 48 மடங்கள் வரை காணப்பட்டிருந்தன. இன்று அவற்றுள் பெரும்பாலானவை அழிக்கப்பட்டும், இயங்காமலும் போய்விட்டன. தற்பொழுது ஏழு மடங்கள் மட்டுமே சிறப்பாக அன்னதானப்பணியை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

செல்வச்சந்நிதியில் இவ்வளவு பெருந்தொகையான மடங்களும், சத்திரங்களும் காணப்பட்டது போல் ஈழத்தில் உள்ள வேறு எந்த ஆலயங்களிலும் இவ்வளவு பெருந்தொகையான மடங்கள் காணப்பட்டிருக்கவில்லை.

இம் மடங்கள் பற்றிப் பேராசியர் கா. சிவத்தம்பி

> "தீராத நோய் தீர்க்கும் மருத்துவனாக சந்நிதியானைக் கொள்ளும் நம்பிக்கையும், அன்னதான நேர்த்திக் கடன் முறைமையும் இங்கு மடங்களின் தோற்றத்திற்கும், தொடர்ச்சிக்கும் காரணமாக அமைந்திருக்கின்றன எனலாம். பல்வேறு ஊர்களைச் சேர்ந்தவர்கள், பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்கள் மடங்களைக் கட்டி அவற்றின்

நிர்வாகத்திற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்துள்ளனர். பூசகர் குடும்பங்களைத் தவிர இங்கு நிலையான ஒரு சனத்தொகை காணப்படுவதற்கும் மடங்களே காரணமாகும். தத்தம் குடும்பங்களில் இருந்து பிரிந்தவர்களும் பிரிக்கப்பட்டவர்களும் மடங்களைத் தமது வதிவிடங்களாகக் கொண்டிருந்தமை ஒரு முக்கியமான உண்மையாகும். மடங்களற்ற சந்நிதியைக் கற்பனை பண்ணக் கூட முடியாத அளவுக்கு மடங்கள் சந்நிதியின் ஒரமிசமாக உள்ளன".

என மிகப் பொருத்தமாகச் சந்நிதியின் மடங்களின் நிலையை எடுத்துக் காட்டியுள்ளார்..

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில், மடங்களின் தோற்றமானது ஆரம்பத்தில் நேர்த்திக் கடனுக்காக மேற்கொள்ளப்படும் அன்னதானப் பணியுடன் முதலில் தொடர்பு பட்டிருந்ததாகவும். பின்னர் அவை தமது சமய, சமூகப் பணிகளை விஸ்தரித்து வந்ததுடன் 'மடாலயம்' என்ற நிலையை அடைவதற்கான தகுதிகளைப் பெற்று வளர்ச்சி பெற்றமையும் கவனிக்கத்தக்கது.

மடங்களின் தோற்றமும் அவை பெற்றுள்ள செல்வாக்கும் காரணமாகவே சந்நிதிச் சூழலில் பெருமளவு சித்தர்களும், சுவாமிகளும் காணப்பட்டதை அறிய முடிகின்றது. அதே வேளை ஐரோப்பிய நாடுகளில் இருந்து இந்து சமயக் கோட்பாடு காரணமாக ஈர்க்கப்பட்ட வெள்ளக்காரர்கள் தங்கி வாழும் நிலையையும், அமைதியும், சாந்தியும் வழங்கும் ஒரு சூழலையும் இம் மடங்களே ஏற்படுத்திக் கொடுத்தன எனலாம்.

சந்நிதிச் சூழலில் தனியாக மடங்கள் இருந்தபோதும் பெரும்பாலான பூசகர்களின் வீடுகள் கூட மடங்களாகச் செயற்பட்டதை அறியலாம். அதற் கேற்ற அமைப்பைப் கொண்டவையாகவே அவர்களின் வீட்டின் ஒரு பகுதியுடன் நீண்ட மண்டபங்கள் கட்டப்பட்டிருந்தன.

அந்தவகையில் சின்னக் குட்டி ஐயர், பொன்னுத்துரை ஐயர், விசாகரத்தின ஐயர், கந்தசாமி ஐயர் ஆகியோரினால் அடியவர்களுக்கு உணவு வழங்குவதற்கேற்ற வகையில் அவர்களுடைய வீடுகள் மடங்களாக வடிவமைக்கப்பட்டிருந்தன.

## அடியார்மடம்

சடைவரத சுவாமிகளால் செல்வச்சந்நிதியில் ஆரப்பித்து வைக்கப்பட்ட மடமே அடியார்மடம் என்று அழைக்கப்படுகிறது. இம்மடம் சந்நிதி றோட்டில் கோயிலுக்குக் கிழக்குப் புறமாக அமைந்துள்ளது. ஆரம்பத்தில் அன்னதானப்

பணியை மேற்கொள்ளும் நோக்கத்துடன் அடியார்மடம் ஆரம்பிக்கப்பட்டாலும், பின்னர் பஜனைகள் மற்றும் மாணவர்கள் மத்தியில் சமயப் போட்டிகளையும், பரீட்சைகளையும் நடாத்தி சைவசமய எழுச்சியை ஏற்படுத்தும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. இன்று இம் மடம் இளைப்பாறிய ஆசிரியர் திரு. வெங்கடாசலம் அவர்களால் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

சந்நிதியின் சுவாமிகள் பரம்பரையினரில் கூடுதலானவர்கள் அடியார் மடத்துடன் தொடர்புற்றிருந்ததை அறிய முடிகின்றது.

இவர்களுள் வடிவேல் சுவாமிகள், நாகமுத்து சுவாமிகள் போன்றவர்களை குறிப்பிடலாம்.

## ஆனந்தாச்சிரமம்

சந்நிதியில் 1940 ஆம் ஆண்டில் இருந்து 1987 ஆம் ஆண்டுவரை மிகச் சிறப்பாக அன்னதானப் பணியையும், ஆன்மீகப் பணியையும் மேற்கொண்டு வந்த மடமே ஆனந்தாச்சிரமம். சந்நிதி கோயிலின் தென்முனையில் அடர்ந்த தென்னஞ்சோலைகளின் மத்தியில் 'ஆனந்தாச்சிரமம்' எளிமையான ஒரு கட்டடத்தில் இயங்கிவந்தது.

யாழ்ப்பாணத்தில் வர்த்தகம் மூலம், பெரும் பணத்தைச் சம்பாதித்து வந்த மயில்வாகனம் சுவாமிகள் 1936 ஆம் ஆண்டில் துறவறம் பூண்டு ஊர் ஊராக யாத்திரை செய்து, திருவண்ணாமலைக்கும் சென்று வந்தார். இரமண மகரிஷியின் அருள் தீட்சையுடன் சந்நிதியை அடைந்த மயில்வாகனம் சுவாமிகளால் 1940 ஆம் ஆண்டு ஆடி மாதம் 20ஆம் திகதி இந்த மடம் கட்டப்பட்டது.

ஆரம்பத்தில் ஒரு சிறு அறையுடன், ஓலையால் வேயப்பட்ட கூரையைக் கொண்ட மண்டபமாகவே ஆச்சிரமம் காட்சி அளித்தது. பின்னர் ஆச்சிரமத்திற்கு வந்து போகும் பக்தர்களாலும், சுவாமிகளின் அபிமானிகளாலும் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டது.

மயில்வாகனம் சுவாமிகளால் ஆரம்பித்து நடத்தப்பட்டு வந்த ஆச்சிரமத்திற்கு வெளிநாட்டுத் துறவிகளும், ஏனைய துறவிகள், அன்பர்களும் வந்து அவரது முருக பஜனையில் கலந்து உணவருந்தி விட்டுப் போவது வழக்கமாக இருந்தது. அந்த வரிசையிலேயே ஜேர்மன் சுவாமிகள், நரிக்குட்டிச் சுவாமிகள், ஆனைக்குட்டிச் சுவாமிகள் போன்ற ஐரோப்பியர்களும் வந்து தங்கியிருந்து ஆன்மீகப் பணியாற்றியுள்ளனர்.

ஒரு தடவை கண்டியில் இருந்து 'பீர்பாவா' என்னும் முஸ்லிம் துறவி இந்த ஆச்சிரமத்திற்கு வருகை தந்திருந்தார். அந்த ஆச்சிரமத்தை மயில்வாகனம் சுவாமிகள் நடத்துவதைக் கண்டு ஆனந்தமடைந்த அந்த இல்லாமியத் துறவி, "இந்த இடம் மிகவும் ஆனந்தமாக இருக்கின்றது" என்று கூறி மகிழ்ந்தார் அன்று முதல் இந்த மடம் "ஆனந்தாச்சிரமம்" என்ற பெயருடனேயே இயங்கி வந்தது.

இந்த ஆச்சிரமத்தில் பக்தர்களுக்கு வழங்குதற்கு "உணவு தயாராக இருக்கின்றது" என்பதைக் காட்டும் அறிகுறியாக, வாசலில் வெள்ளைக் கொடி பறந்து கொண்டிருக்கும்.

இந்த ஆச்சிரமம் வெறும் அன்னதான மடமாக மட்டும் இயங்காது, ஆன்மீக உணர்வுகளை வளர்க்கும் வகையில் பஜனைகள், கூட்டுப் பிரார்த்தனைகள், சமயப் பேருரைகள் என்பனவற்றையும் நடத்தி வந்தது. இங்கு பல அடியார்கள் தங்கிச் செல்லும் வகையில் இடவசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

1985 இல் மயில்வாகனம் சுவாமிகள் இறைபதம் அடைந்ததைத் தொடர்ந்து சில வருடங்கள் சிறப்பாக அன்னதானப் பணியை மேற்கொண்டு வந்த ஆச்சிரமம், 1986, 1987 இராணுவ நடவடிக்கைகளினால் உடைந்து சின்னாபின்னப் படுத்தப்பட்டபின் அதுவும் தன் பணியை முடித்துக் கொண்டு விட்டதும் துரதிர்ஷ்டவசமானதே!.

## *சந்நிதியான் ஆச்சிரமம்*

'ஆனந்தாச்சிரமத்தில்' மயில்வாகனம் சுவாமிகளின் சீடராக இருந்து அவரின் வழி நடத்தலில் நல்ல ஒரு தொண்டனாகத் தன்னை மாற்றிக்கொண்ட திரு. செ. மோகனதாஸ் அவர்களால் சந்நிதியான் ஆச்சிரமம் தோற்றுவிக்கப்பட்டது.

மயில்வாகனம் சுவாமிகளின் மறைவையடுத்து 'ஆனந்தாச்சிரமம்' சீராக இயங்கமுடியாத ஒரு சூழலில் சுவாமிகளின் அன்னதானப் பணியையும், ஆன்மீகப் பணியையும் தொடரவேண்டும் என்ற அவாவுடன் 1989 ஆம் ஆண்டு சிறிய அளவில் 'அரசம்மா மடத்தில்' ஆரம்பிக்கப்பட்டது.

இங்கும் அடியவர்களுக்கு உணவு படைக்கும் போது, ஆரம்பத்தில் பஜனையும் வழிபாடும் நடைபெற்ற பின்னரே அமுது உண்ணப்படுகின்றது. ஏனைய மடங்களில் இல்லாத இன்னொரு சிறப்பு சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு உள்ளது.

அநாதைகளும், பிள்ளைகளால் கைவிடப்பட்ட வயது முதிர்ந்த பெற்றோர்களும், ஒரு சில ஓய்வூதியம் பெறுவோரும் நிரந்தரமாகவே சந்நிதியான் ஆச்சிரமத்தில் தங்கியிருந்து தமது இறுதிக் காலத்தை இறைபணியிலும் கூட்டுப் பிரார்த்தனைகளிலும் கழித்து வருகின்றனர். அவர்களுக்கு மூன்று வேளையும் உணவு அளித்துக் காக்கும் பணியை 'சந்நிதியான் ஆச்சிரமம்' மேற்கொண்டு வருகின்றது.

சந்நிதியான் ஆச்சிரமம், அன்னதானப் பணியுடன் மாணவர்களிடையே சமய அறிவை வளர்க்கும் நோக்குடன் பண்ணிசைப் போட்டிகள், சமய அறிவுப் போட்டிகள் என்பவற்றையும் நடாத்தி வருகின்றது.

அறுபத்து மூவர் குரு பூசை, மயில்வாகனம் சுவாமிகள், முருகேசு சுவாமிகள் குருபூசைகள், திருவாசக விழா, வைகாசிப் பெருவிழா போன்றவற்றை வருடா வருடம் பக்தியுணர்வுடன் கொண்டாடி வருகின்றது.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஒரு அங்கமாக "சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, 1993 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இன்றும் சைவ, தமிழ்க் கலைப்பணிகளை ஆற்றிவருகின்றது.

இம் மடங்களையும், ஆச்சிரமங்களையும் விட திருவிழாக் காலங்களிலும், வெள்ளிக்கிழமைகளிலும், விசேட உற்சவ தினங்களிலும் விசாகரத்தின ஐயர் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட "தகர மடம்" சாவகச்சேரி சுப்பிரமணியம் என்பவரால் கட்டப்பட்ட "மணியம் மடம்", அரசம்மாமடம், வல்லிபுரம் மடம் ஆகிய மடங்கள் இன்றும் அன்னதானப் பணியை மேற்கொண்டு வருகின்றன.

தகவலுக்காகவும், அழியாது இருப்பதற்காகவும் அழிக்கப்பட்ட அல்லது மூடப்பட்ட மடங்களையும் இங்கு குறிப்பிடுவது காலத்தின் தேவையாகும்.

வெள்ளிக்கிழமை மடம், செல்லையா ஐயர் மடம், சரஸ்வதி மடம், பூக்கொல்லை மடம், வைரமுத்துசாமி மடம், கந்தசாமி ஐயர் மடம், தற்போது வாகன சாலையாகப் பாவிக்கப்படும் 'கந்த சஷ்டி மடம்' என்பற்றுடன் சாதியின் பெயரால் இயங்கிய பல மடங்களையும் குறிப்பிடலாம்.

இவ்வாறு சந்நிதிச் சூழலுடன் சேர்ந்த பக்தி உணர்வுடன் இரண்டறக் கலந்து விட்ட மடங்கள் சந்நிதிக்குப் பெருமை சேர்த்துள்ளன. சந்நிதியின் சூழலே அங்கு பெருமளவு மடங்ளும் ஆச்சிரமங்களும் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தன. அழிந்து போன மடங்கள் புதுப்பிக்கப்பட்டு, மீண்டு 'சந்நிதிச் சூழல்" உருவாக அந்த வேலவனே தரை இறங்கவேண்டும்.

## சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


சந்நிதியான் ஆச்சிரமத்தில் 1993 ஆம் ஆண்டில் இருந்து செயற்பட்டுவரும் "சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை" சைவத்தையும் தமிழையும், திராவிடக் கலை, பண்பாட்டுப் பாரம் பரியங்களையும் வளர்த்து வருகின்றது.

1993இல் அமரரும் முன்னாள் யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தருமான பேராசியர் அ. துரைராஜா அவர்களின் தலைமையில் முதலாவது வைகாசிப் பெருவிழாவைக் கொண்டாடியது.

இப் பேரவை ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் வாராந்த நிகழ்வு என்ற பெயரில் சமயச் சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள் என்பவற்றைச் சிறப்பாக நடாத்தி வருகின்றது.

ஒவ்வொரு வருடமும் நடைபெற்றுவரும் வைகாசிப் பெருவிழாவானது ஒரு காலத்தின் பதிவாக பல தடங்களைப் பதித்துள்ளது. இப்பெருவிழாவிலேயே மிகச் சிறந்த கலைஞர்கள், தமிழ் அறிஞர்கள் ,சமூகப் பணியாளர்கள் ஆகியோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு "ஞானபண்டித" என்ற பட்டம் அளித்து விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டு வருகின்றனர்.

இப் பேரவையினால் சமய அறிவைவளர்க்கும் நோக்குடன் 'ஞானச்சுடர்' என்ற மாத சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகின்றது. ஒரு ஆதீனத்தின் அந்தஸ்தை அடைந்து கொண்டிருக்கும் இப்பேரவை காலப்போக்கில் சந்நிதியின் இன்னொரு செல்வமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.



*35 வருடங்களுக்கு முன்னர் பூங்காவனத்தில் வேலவனின் எழில் கோலம்*

# 12 சந்நிதியும், கதிர்காமமும் ஒரு ஒப்பீடு

ஈழத்து மாமன்னன் இராவணேஸ்வரனாலும், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாராலும், சுந்தரமூர்த்தி நாயனாராலும், திருமூலராலும் 'சிவபூமி' எனப் போற்றப்பட்டுப் பாடல் பெற்ற இலங்கையில் முருக வழிபாடு எந்த நிலையில் இருந்தது என்பதை ஆராய்வதற்கும், ஈழத்தின் பரந்துபட்ட முருக வழிபாட்டின் தோற்றுவாயை அறிந்து கொள்வதற்கும் புராண கால வரலாற்றையுடைய கதிர்காமத்தையே மையமாகக் கொள்ள வேண்டியுள்ளது.

ஈழத்தின் தென்முனையில் அமைந்துள்ள கதிர்காமத்திற்கான வரலாற்றுச் சான்றாதாரங்கள் உள்ளபோதும், வடமுனையில் புகழ்பெற்றிருக்கும் சந்நிதியானுக்கு 20 ஆம் நூற்றாண்டுக்கு முந்திய காலம் வரை எழுத்து வடிவிலான சான்றாதாரங்கள் போதியளவு கிடைக்கவில்லை.

இந்த நிலையில் சந்நிதி பற்றிய செய்திகளை அறிவதற்குச் செவிவழிச் செய்திகளும், சந்நிதியோடு தொடர்பானஐதீகங்களும், இன்றைய கோயில் நடைமுறைகளும், கதிர்காமத்துடன் தொடர்பான சடங்குகளும் இதுவரை சந்நிதி தொடர்பாக வந்த இலக்கியங்களுமே மூலாதாரங்களாகின்றன.

சந்நிதி முருகன் தனக்கென ஒரு ஆலயம் கட்ட வேண்டும் என்று திருவுளம் கொண்டதால் சிறுவன் வடிவில் வந்து, சாதாரண கடற்றொழிலாளியாக இருந்த மருதர் கதிர்காமரைப் பூசகராக்கித் தன் ஞான சக்தியாகிய வேலைப் பிரதிட்டை செய்து பூசிக்குமாறு பணித்ததுடன், அவருக்குக் கதிர்காமப் பூசை முறைகளையும் காட்டிய திருவிளையாடல்களுடன் சந்நிதி ஆலயத்தின் தோற்றம் எழுச்சிபெறத் தொடங்கியது.

அதன் தொடர்ச்சியாகவே சந்நிதிக்கும் கதிர் காமத்திற்குமான உறவும், வழிபாட்டு மரபுகளும் பலவழிகளில் ஒத்த தன்மையைக் கொண்டவையாக வளர்ச்சி பெற்றமை வடக்கும், தெற்கும் முருகவழிபாட்டுப் பாரம்பரியத்தைப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கொண்டுள்ளன என்பதை உணர்த்துகின்றது.

அந்த வகையில் கதிர்காமம், சந்நிதி இரண்டிற்கும் இடையிலான பின்வரும் தொடர்புகளை நோக்கும் பொழுது, ஈழத்தில் வளர்ச்சி பெற்றிருக்கும் முருகவழிபாடு காலத்தால் முந்தியது என்பதை அறியமுடிகின்றது.

1. கதிர்காமத்திலும், செல்வச் சந்நிதியிலும் ஆகமச் சாயல் கொண்ட வானுயர்ந்த கோபுரங்களோ, விமானங்களோ, தூபிகளோ, சிற்பவேலைப்பாடுகள் நிறைந்த கட்டிடங்களோ, கொடிக்கம்பம், பலிபீடம் போன்றவைகளோ இல்லை. இது தமிழர்களால், தமிழ்க்கடவுளாக வணங்கப்படும் முருகன் எப்பொழுதும் எளிமையையே விரும்புபவன் என்பதையே காட்டுகின்றது.

2. இரு ஆலயங்களிலும் பிராமணரல்லாத ஜீவனோபாயத் தொழில் புரிந்தவர்களின் பரம்பரையினரால் பூசைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கதிர்காமத்தில் வேடுவர் குலப் பரம்பரையினராலும், சந்நிதியில் பரதவர் குலப் பரம்பரையினராலும் பூசைகள் செய்யப்படுகின்றன.

3. இரு ஆலயங்களினதும் பூசகர்கள் பண்டைத் தமிழர் பண்பாட்டிற்கமைய வாய் கட்டி மௌனபூசைகளை மேற்கொள்கின்றனர். இங்கு பூசை வழிபாட்டில் மந்திரங்கள் உச்சாடனம் செய்யப்படுவதில்லை.

4. இரு ஆலயங்களிலும் வேதாகம முறையிலான பூசைகள், அபிஷேகங்கள், ஓமம் வளர்த்தல் என்பன நடைபெறுவதில்லை ஆகமம் சாராத இயற்கை நெறிப் பாரம்பரியங்களுக்கு அமையவே பூசைகள் நடைபெறுகின்றன.

ஆனால் சந்நிதியில் அண்மைக்காலமாக அபிசேகம், போன்ற சமஸ்கிருதமயப்படுத்தப்பட்ட சாயல் மருவி வருவதையும், ஆகமம் சார்ந்த கட்டிட அமைப்புக்கள் படிப்படியாக வருவதையும் காணக் கூடியதாக உள்ளது.

5. இரு ஆலயங்களினதும் தலவிருட்சமாகப் பூசிக்கப்படுபவை இடைவெப்ப வலயத்திற்குரிய தாவரங்களாகவே காணப்படுகின்றன.

சந்நிதியின் தலவிருட்சமாக பூவரசு மரமும், கதிர்காமத்தின் தல விருட்சமாக வேப்பமரமும் பூசிக்கப்பட்டு வருகின்றது.

6. மூலஸ்தான மூர்த்தியாக இரு ஆலயங்களிலும் வேல் வழிபடப்படுகின்றது. இதனால் இரண்டு ஆலயங்களுமே படைக் கோயில்கள் எனப்படுகின்றன. இங்கு முருகனின் மூல விக்கிரகம் வழிபடப்படுவதில்லை. மேலும் பூசைகளின் போது

கதிர்காமத்திலும், சந்நிதியிலும் மூலஸ்தான மூர்த்திக்குரிய பூசைகள் முடிவடைந்த பின்னரே ஏனைய விக்கிரகங்களுக்குரிய பூசைகள் இடம்பெறும்.

7. இரண்டு ஆலயங்களும் ஆறுகளுடனேயே மருவிக் காணப்படுவதால், இரண்டுமே 'ஆற்றங்கரையான்' எனச் சிறப்பிக்கப்படுகின்றன.

கதிர்காமம் மாணிக்க கங்கைக் கரையிலும், செல்வச்சந்நிதி. தொண்டைமானாற்றங்கரையிலும் அமைந்து எழில் கோலத்தை வழங்குகின்றன.

8. உற்சவ காலங்களில் செல்வச்சந்நிதியில் மருதர் கதிர்காமரின் பரம்பரையைச் சேர்ந்த பருவமடையாத சிறுமிகள் நெய்விளக்கு கொண்டு ஆராத்தி எடுப்பது போல, கதிர்காமத்தில் வேடுவர் குலப் பெண்கள் நெய்விளக்கெடுத்து ஆராத்தி எடுக்கும் மரபு பேணப்பட்டு வருகின்றது.

9. பண்டைய சங்க இலக்கியங்களில் முருகனுக்குத் தேனும், தினைமாவும் நிவேதனமாகக் கொடுக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்தது. அவ்வழிபாட்டின் எச்சமாகவே இன்றும் ஈழத்தின் முதன்மையான வேற்படைக் கோயில்களான சந்நிதியிலும், கதிர்காமத்திலும் தேனும், தினைமாவும் முக்கியமான நிவேதனப் பொருட்களாக்கி மாவிளக்காகப் படையல் செய்யப்படுகின்றது.

முருகனுக்கு வள்ளி வழங்கியதாகக் கூறப்படும் தேனும், தினைமாவும் சேர்ந்த உணவை நினைவு கூரும் வகையிலேயே இன்றும் இரு ஆலயங்களிலும் இவை சிறப்பாகப் படையல் செய்யப்படுகின்றன.

10. கதிர்காமத்தில் கொடியேற்றம் நடைபெறுவதற்கு முதல் நாள் செல்வச்சந்நிதியில் இருந்து வேல் வழியனுப்பு விழாவும், கதிர்காமத் தீர்த்தத் திருவிழா அன்று கதிர்காமத்தில் இருந்து முருகன், சந்நிதிக்குத் திரும்பி வரும் பொழுது வரவேற்கும் சடங்கும் இன்றும் பேணப்படுகிறது. இந்த இரு பூசைவழிபாட்டிலும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். அதேபோன்று கதிர்காமத் தீர்த்தத் திருவிழாவின் இறுதியில் வேற்பெருமானை யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கும் நிகழ்ச்சியும் நடைபெற்று வருவது கதிர்காமத்திற்கும், செல்வச்சந்நிதிக்கும் முருகவழிபாட்டுடன் இருந்த நெருங்கிய தொடர்பு புலப்படுத்தப்படுகின்றது.

இதனாலேயே கதிர்காமத் தலத்தைப் பற்றியும், அங்கு நடைபெறும் சடங்குகளைப் பற்றியும் நன்கு அறிந்து வைத்திருந்த அருணகிரிநாதர் அவ்வாலயம் பற்றிய பல திருப்புகழ்களைப் பாடி விட்டு, யாழ்ப்பாணம் பற்றியும் குறிப்பிட்டுள்ளமை நோக்கற்பாலது.

அருணகிரி நாதரின் பாடல் அடிகளில் வரும் .

*"ஏற்போர் தம் வந்திச்சையின் மகிழ்வொடு*
*வாய்ப்பாய் வீசும் பொற்பரப்பை நெடுமதின்*
*யாழ்ப்பா ணாயன் பட்டினமருவிய பெருமாளே!"*

என்று யாழ்ப்பாணம் செல்லும் முருகப்பெருமானைப் பற்றிப் பாடியுள்ளார்.

ஆண்டுதோறும் கதிர்காமத் தீர்த்த உற்சவத்தின் இறுதியில், யாழ்ப்பாணத்திற்கு வேல் வழியனுப்பும் சடங்கினை அறிந்திருந்த அருணகிரிநாதர்.

"யாழ்ப்பா ணாயன் பட்டின மருவிய பெருமாளே!"

என்று சந்நிதி முருகனையே பாடியுள்ளார் என்பதை அறிய முடிகின்றது. ஏனெனில் நல்லூரிலோ, மாவிட்ட புரத்திலோ, கந்தவனக் கடவையிலோ கதிர்காமக் கந்தன் திருவிழா முடித்துத் திரும்பி வரும் உற்சவமும், சடங்கும் நடைபெறுவதில்லை. இவ்வாறு கதிர்காமத்துடன் செல்வச் சந்நிதியுடனான தொடர்பை அருணகிரி நாதர் அறிந்தமையினாலேயே, அதனை மனதில் கொண்டே இப்பாடலைப் பாடியுள்ளார் போலும்.

11. சந்நிதியைப் போலவே கதிர்காமத்திலும் நடைபெறும் உற்சவ காலச் சடங்குகளில் தினமும் வீதியுலாவின் பொழுது சுவாமி வள்ளியம்மன் கோயிலுக்குள் சென்று தங்கியிருந்து செல்வதும், தீர்த்த உற்சவத்தன்று தீர்த்தமாடி முடித்து, மூடு பல்லக்கில் மீண்டும் திரும்பும் பொழுது முருகன் தனது மூலஸ்தானக் கோயிலுக்குள் செல்லாது வள்ளியம்மன் கோயிலுக்கே சென்று, அன்று மாலைவரை அங்கேயே தங்கியிருந்து பக்தர்களுக்குக் காட்சி கொடுப்பார்.


இதன் அடிப்படையில் கதிர்காமமும், செல்வச்சந்நிதியும் ஈழத்தின் தொன்மை மிக்க ஆலயங்களாக இருந்துள்ளன என்பதை பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையின் பின்வரும் குறிப்புக்கள் மேலும் ஆதாரங்களாக விளங்குகின்றன.

"தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் நடக்கும் வழிபாட்டுக்கும், கதிர்காமத்தில் நடக்கும் வழிபாட்டுக்கும் நெருங்கிய ஒற்றுமையுண்டு. திருமுருகாற்றுப் படையில் முருகனுக்கு வெவ்வேறு இடங்களில் வேதாகம முறைப்படி நடந்த வழிபாடுகளும், பழைய திராவிட முறையில் அமைந்த வழிபாடுகளும் கூறப்படுகின்றன. ஈழநாட்டு முருகன் கோயில்களிலே கதிர்காமத்திலும் செல்வச்சந்நிதியிலும் வேதாகம முறையிலான வழிபாடுகள் இல்லை. இரண்டிடங்களிலும் முருகனுடைய விக்கிரகங்கள் வழிபடப்படுவதில்லை. பூசை செய்பவர்கள் பிராமணரல்லாதோர், பூசையில் மந்திரங்கள் இடம் பெறுவதில்லை. இவற்றை நோக்கும் போது கதிர்காமத்தைப் போல செல்வச்சந்நிதியும் மிகுந்த தொன்மையுடையதாக இருக்கக் கூடும்".

அவரது குறிப்பு இரண்டு ஆலயங்களினதும் தொன்மையை மட்டுமின்றி, இரண்டுக்கும் இடையிலான மரபு ரீதியான வழிபாட்டு முறைகளும், சடங்குகளும் பல வழிகளிலும் ஒத்துப் போவதையே எடுத்துக் காட்டுகின்றது.



*சந்நிதியில் வாய்கட்டி பூசைகளை மேற்கொள்ளும் ஐயரின் தோற்றம்.*



வந்தார்க்கு அருள் வழங்கும் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின்
முந்திய முகப்புத் தோற்றம்.



தற்போதைய சந்நிதியின் முகப்புத் தோற்றம்.



முருகன், வள்ளி
திருக்கல்யாண
உற்சவத்தில்
வீதியுலாக்
காட்சி



உடைந்த உருக்குலைந்த ஆலயத்தின் பின்புறத் தோற்றம். அருகே ஆற்றங்கரை உள்ளது.



நாக சாத்துப்படிச் சோடனையுடன்
வேலவன் வீதியுலா வருதல்.



முன்புறம் 65 ஆலம் இலைகளில்
பச்சரிசி அமுதும் பயற்றம் கறியும்
படைக்கப்பட்டிருக்கின்றது.



பழமை வாய்ந்த கட்டுத் தேரில்
முருகன் பவனி வரும் காட்சி.



எரிக்கப்பட்ட சித்திரத் தேரின்
கம்பீரமான தோற்றம்.

# 13 சந்நிதியான் அற்புதங்கள்

ஆற்றங்கரையான், அன்னக்கந்தன், சந்நிதியான், கல்லோடைக் கந்தன் என்றெல்லாம் பெருமையுடன் போற்றிப் புகழப்படும் சந்நிதி வேலவனின் அற்புதங்கள் எண்ணற்றவை.

'சந்நிதி வேலவனுடன்' அன்னியோன்னிய உறவில் உரிமையுடன் மேற்கொள்ளப்படும் 'உறவாடல்' நிலை, சந்நிதியின் தனித்துவத்தை எடுத்துக் காட்டுவனவாகும். அவனைக் குழந்தையாக, சிறுவனாக, தாயாக, வயோதிபனாக ஒவ்வொருவரும் தமது இயல்பு நிலைக்கு ஏற்ப மெய்யுருக 'உறவாடும்' காட்சி உணர்வு பூர்வமாக இருக்கும். அந்த உறவாடல் முருகனுக்கும் பக்தர்களுக்கும் இடையிலான நேரடித் தொடர்பாடலாகவே இருக்கும்.

மனித வாழ்வில் நடைபெறும் துயரங்கள், சோதனைகள் மத்தியில் திடீரென எவருமே எதிர் பார்க்காத வகையில் நிகழ்ந்து விடும். சாதகமான சம்பவங்களோ அல்லது திருப்பங்களோ அல்லது நாம் நினைத்துக் கொண்டிருப்பவர்கள் திடீரென எம்முன் வந்து காட்சி கொடுப்பதோ நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி விடுகின்றன.

இவை எப்படி நடைபெறுகின்றன...... இத்தகைய சக்திகள் எவ்வாறு தோற்றுவிக்கப்படுகின்றன என்ற வினாக்கள் எல்லாம் காலம் காலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அதற்கு ஆன்மீக வாதிகள் 'இறை சக்தி' என்றும் 'இறைவனின் அற்புதங்கள்' என்றும் கூற அதற்கு உடன் பட்டாற் போல் விஞ்ஞானிகளும் 'ரெலிப்பதி' என்றும் 'கட்புலனாகா சக்தி' என்றும் காரணங்களையும் உதாரணங்களையும் கூறி வருகின்றனர்.

ஆனால் அதற்கெல்லாம் அப்பாற்பட்ட நிலையில் காலங்கடந்து நிற்கும் சந்நிதி முருகனின் சக்திகள் அவனால் மேற்கொள்ளப்படும். அற்புதங்கள் மனித உள்ளங்களைப் புல்லரிக்கச் செய்துவிடும்.

சந்நிதிச் சூழலில் நடைபெறும் 'அற்புதங்கள்' அவன் அடியார்களின் நேரடி அனுபவங்களில் இருந்தும் பண்டைய வரலாறுகளில் இருந்தும், கர்ணபரம்பரைக் கதைகளில் இருந்தும், அங்கே வாழ்ந்த, வாழ்ந்து வரும் சித்தர்கள், ஞானிகளில்

இருந்தும் அறியும் பொழுது அந்த வேலவனின் மீதான அன்னியோன்னிய உறவும், பக்தி நிலை உணர்வும் மேலும் அதிகரிப்பது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

## ஆலிலையில் அமுதுண்ணும் வேலவன்

தொண்டைமானாறு ஆற்றங்கரை எந்த நேரமும் சிறு அளவில் மீன்களைப் பிடித்து விற்கும் ஏழைத் தொழிலாளர்களால் நிறைந்திருக்கும்!

அவர்களில் ஒருவராக அந்தக் கிராமத்தின் குறியீடாக வாழ்ந்து வருபவர் தான் மருதர் கதிர்காமர். அவரும், ஒரு முருக பக்தர்..... சீவனோபாயத்திற்காகக் கடற்றொழிலைச் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதை நினைத்து அவரே பல தடவைகளில் வருத்தப்பட்டுக் கொள்வார்.

ஆம்!..... சந்நிதி முருகன் ஆலயத்தின் ஆரம்ப கர்த்தாவாகிய மருதர் கதிர்காமர் அன்றும் வழமைபோல் ஆற்றிலே மீன் பிடித்துக் கொண்டிருந்த பொழுது,

"கதிர்காமா!...... இக்கரைக்கு வா...." என்ற குரல் கேட்டு வியப்புடன் கரைக்கு வந்தார். அங்கே, முருகன் ஒரு அழகிய சிறுவன் வடிவத்திலே தோன்றி,

"இந்தத் தொண்டைமான் ஆற்றங்கரையில் உள்ள பூவரச மரத்தடியில் எனக்கு ஒரு ஆலயம் அமைத்து வழிபடுக..." என்று பணித்து விட்டுச் சிரித்தபடி நின்றான். அந்தச் சிறுவனின் பணிப்புக்குக் கட்டுண்ட மருதர் கதிர்காமர் வியப்புடன் அவனை நோக்கினார். அந்தச் சிறுவன் தன்னை இனங்காட்டி "கண்ணை மூடுக" என்று பணித்து கதிர்காம பூசை முறைகளைக் காட்டி வழிபடுவதற்கு ஒரு வேலையும் வழங்கினான்.

அன்று முதல், அவர் செய்து வந்த கடற்றொழிலையே கைவிட்டு, முழுநேர முருகன் அடியவராகவே மாறிவிட்டார். அதனைத் தொடர்ந்து மருதர் கதிர்காமர் ஆசார சீலராகி, தொண்டைமானாற்றங்கரையில் செழித்து வளர்ந்திருந்த பூவரச மரத்தின் கீழ் சிறிய ஓலைக் குடிசை ஒன்றை அமைத்து, அங்கே வேலவனைப் பிரதிட்டை செய்து வழிபட்டு வந்தார்.

எப்படிப் பூசை செய்வது என்று குழம்பிப் போய் இருந்த மருதர் கதிர்காமருக்கு கதிர்காமத்தில் நடைபெறும் பூசை முறைகளைக் காட்டியதும் தான் அவரது அச்சமும் அவநம்பிக்கையும் அகன்றது. முருகனின் கட்டளைப்படியே வாய்கட்டி, மந்திரமின்றி, மௌன பூசை செய்து வந்தார்.

மருதர் கதிர்காமர், தினமும் அபிடேகம் செய்து ஒழுங்காக மூன்று வேளையும் தீபம் காட்டிப் பூசைகள் செய்து வந்தாலும் அவருடைய உள்ளத்தை ஒரு குறை உணர்த்திக்கொண்டிருந்தது. தன்னால் பூசித்து வழிபடப்படும் அந்தச் சந்நிதி வேலவனுக்கு என்ன நைவேத்தியம் படைப்பது என்று அதையே நினைத்து மனம் வருந்திக் கொண்டிருக்கும் பொழுதுதான் அந்தச் சம்பவம் நடந்தது!

அந்த ஆலய முன்றலில் உள்ள களிமண் மேடைக் கட்டில், மருதர் கதிர்காமர் அமர்ந்திருந்தபடியே வேலவனைப் பார்த்துத் தன் இயலாமையை எண்ணி மனம் உருகிக்கொண்டிருந்தார்.

"முருகா!...... என்னை ஏன் இப்படி வருத்துகிறாய் ......
நீதான் ஒரு வழியைக் காட்ட வேண்டும்.....".

அவரது உள்ளம் கசிந்துருகியது. இறைவனுக்கு நைவேத்தியம் படைப்பவர்களுக்கும் ஒரு தகுதி இருக்க வேண்டும் என்று அவரது மனம் துடித்தது.

அப்பொழுது, அவரை நோக்கி ஒரு முதியவர் சிறிது களைத்த நிலையில் வருவதைக் கண்டதும், மருதர் கதிர்காமர் அவரையே கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தார்.

"அப்பா!...... கதிர்காமர்!.....நான் நல்லாக் களைத்துப் போய்விட்டன்..... எனக்குக் கொஞ்சம் அமுது தர மாட்டாயா?...."

அந்த முதியவரின் கணீரென்ற குரல் மருதர் கதிர்காமரைத் துணுக்குற வைத்துவிட்டது.

"அமுது...." மருதர் கதிர்காமர், திரும்பத் திரும்ப தனக்குள்ளாகவே உச்சரித்துக் கொண்டிருந்தார்.

"ஐயா !.... பெரியவரே!.... தாங்கள் என்னிடம் என்ன கேட்கின்றீர்கள்....?"

மருதர் கதிர்காமருக்கு, உள்ளம் பட படத்துக் கொண்டிருந்தது..... கூடவே, ஒரு இனம் புரியாத ஒரு உவகையும் அவரை ஆட்கொண்டது.

"கதிர்காமர்!..... எனக்கு ஒரு ஆலிலையில் கொஞ்சம் பச்சரிசிப் பொங்கலையும், பயற்றங்கறியும் வைத்துத் தந்தால் அதுவே போதும்....."

அந்த வயோதிபர் சொல்லிக்கொண்டே 'கல கல' என்று சிரித்துக் கொண்டிருந்தார். அவரது வார்த்தைகளைக் கேட்டதும் இயந்திரமாகச் செயல்பட்ட மருதர் கதிர்காமர் அவசர அவசரமாக உணவைத் தயாரிக்கத் தொடங்கிவிட்டார். சற்று நேரத்திற்குள், ஆறு புதிய ஆலம் இலைகளை எடுத்து அதில் பச்சை அரிசிப் பொங்கலைப் பிடித்து வைத்து அதன்மேல் வறுத்துக் காய்ச்சிய பயற்றங் குழம்பையும் ஊற்றி, இரு கைகளாலும் எடுத்து பவ்வியமாக அவரிடம் நீட்டினார்.

"ஐயா!... பெரியவரே!..... தாங்கள் என்னிடம் வந்து இந்த அமுதைப் பெறுவதற்கு அடியேன் செய்த பாக்கியம்தான் என்னே!.... ஐயா, இந்த அமுதை மனமுவந்து ஏற்றுக் கொள்ளுங்கள்..... இது போதுமா?..... இன்னும் ....".

அவர் கேட்டுக் கொண்டே ஆவலுடன், அந்த முதியவர் 'அமுது' அருந்துவதையே பார்த்துப் பரவசம் அடைந்தார்.

"போதும் ..... போதும்...... ஆஹா.... என்ன அற்புதமான பொங்கல்.... அப்பா!..... கதிர்காமா!...... என்னுடன் அங்கே இன்னும் அறுபத்து மூன்று பேர் இருக்கின்றார்கள்.

அவர்களுக்கும் உனக்கும் சேர்த்துத் தினமும் அறுபத்து ஐந்து இலைகளில் அமுதும் பயற்றங்கறியும் தருவாயா?"

அவர், பூவரச மரத்தடியைக் காட்டிய படியே, கதிர்காமரிடம், அறுபத்து ஐந்து இலைகளில் அமுது தரவேண்டும் என்று கேட்டதும், மருதர் கதிர்காமருடைய உடல் எல்லாம் ஒரு கணம் புல்லரித்தது போல் இருந்தது.

அந்த இன்ப நினைவில் கண்களை மூடியபடி மெய் மறந்து சந்நிதி வேலவனைத் தியானித்துக் கொண்டு நின்றார். சிறிது நேரம் பக்திப் பரவசத்தில் திளைத்திருந்த கதிர்காமர் கண்களைத் திறந்து பார்த்தபோது முருகன் காட்சி கொடுத்து மறைந்தார்.

"முருகா! ..... என்னே உன் விளையாட்டு?"

மருதர் கதிர்காமர் கண்ணீர் உகுத்தபடியே, மெய் சிலிர்க்க, "முருகா! ..... முருகா!...." என்று கூவியபடி மூலஸ்தானத்தை நோக்கி ஓடினார்.

அங்கே, வேலவன் சந்நிதியினுள் 'கலகல' என்ற ஒலி கேட்டுக் கொண்டே இருந்தது. தூண்டாமணி விளக்கு இன்னும் சற்றுப் பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டிருந்தது!

அன்று வழக்கத்திற்கு மாறாக அந்த 'வெள்ளி வேல்' பிரகாசமாக ஜொலித்துக் கொண்டிருந்தது.

"முருகா!...... என் செல்வமே!.... ஞானக் கொழுந்தே! என்னிடம் நீயா அமுது வாங்கி உண்டாய்? ... முருகா!.... சாதாரண கடற்றொழிலாளியான என்னிடம் அமுதுண்ண நீ ஆடிய நாடகமா இது?..... என்னே உன் சோதனை?....."

கண்ணீர் மல்கிய நிலையில், மெய் விதிர்த்து அந்த முருகன் சந்நிதியில் அவன் நாமத்தையே உச்சரித்தபடி ஆனந்தக் கூத்தாடிக் கொண்டிருந்தார்.

"ஆம்!.... அன்று முதல் சந்நிதி முருகன் ஆலம் இலையில் வைக்கப்பட்ட "பச்சரிசிப் பொங்கலும் நெய்மணக்கும் பயற்றுக் குழம்பும்" உண்டதாக ஆலய வரலாறுகள் காட்டுகின்றன.

செல்வச் சந்நிதியில் ஒவ்வொரு பூசை நேரத்தின் போதும் அறுபத்து ஐந்து ஆலம் இலைகளில் அமுது படைக்கும் வழக்கம் இன்றும் இருந்து வருகின்றது..... இந்த 'அமுதையே' 'மருந்து' என்று அடியவர்களால் அழைக்கும் மரபு செல்வச் சந்நிதியில் இருந்து வருகின்றது.

அந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஆலயத்தின் முன்னால் உள்ள சிறிய திண்ணையில் மருதர் கதிர்காமருடன் சிறுவனாக, வயோதிபராக, நேராகவே வந்து அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதுடன் பூசை முறைகள் பற்றிக் கலந்துரையாடிய தாகவும் இன்றும் பேசப்படுகிறது.

## அமுது அளிக்கும் கந்தன்

'வேல்முருகா வேல் முருகா
வா வா சண்முகா!
கால் பிடித்தோம் காத்தருள
வா வா சண்முகா!'

பஜனைகளும், பாராயணமும், பண்ணிசையும் ஒலித்துக் கொண்டிருக்க "சந்நிதியான் ஆச்சிரமத்தின்" அன்றைய நண்பகல் பூசை ஆரம்பமாகியது!

அந்த ஆச்சிரமத்தின் பொறுப்பாளரான மோகனதாசின் கணீரென்ற குரல் நாத வெள்ளமாக அந்த ஆச்சிரமத்தின் நாலாதிசைகளிலும் பரவிக் கொண்டிருந்தது. மோகனதாஸ் உரத்துப் பாடும் பொழுது அவரைத் தொடர்ந்து அங்கே இருக்கும் முருகன் அடியவர்கள் பக்தி பூர்வமாகப் பண்ணுடன் பாடிக் கொண்டிருப்பார்கள்.

ஆம்!... மாகேசுவர பூசைக்கென்றே மகத்துவம் பெற்றதுதான் சந்நிதிச் சூழல்... "அன்னதானக் கந்தனாக" விளங்கும் செல்வச்சந்நிதி முருகன் தன்னை நாடி வரும் பக்தர்களுக்குத் தினமும் இல்லையென்னாது வயிறார உணவு வழங்கிப் பசிப்பிணி போக்கும் மருத்துவனாக தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆற்றங்கரையோரத்தில் அருள் ஆட்சி புரிந்து வருகின்றான்...!

இந்த அன்னதானப் பணியை உணர்வு பூர்வமாக மேற்கொள்வதற்கென்றே ஆலயச் சூழலில் ஏராளமான மடங்களும், ஆச்சிரமங்களும் இருக்கின்றன.

சந்நிதியானை நம்பி வரும் அடியவர்களுக்கு மாகேஸ்வர பூசை செய்வதற்கும், இப்பணி குறைவின்றிச் சிறப்புற நடைபெறவும் அந்தச்சந்நிதி வேலவன் புரிகின்ற அற்புதங்களும், திருவிளையாடல்களும் ஏராளம். அத்தகைய பணிகளைச் செவ்வனே புரிந்து வரும் மடங்களில் ஒன்றாக விளங்குவது தான் "சந்நிதியான் ஆச்சிரமம்!"

1987 ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா இராணுவத்தின் வடமராட்சி ஒப்பரேசன் லிபரேசன் தாக்குதலைத் தொடர்ந்து அழிவுற்ற ஆலயமும், அதனைச் சூழவுள்ள மடங்களில் சிலவும் புனரமைக்கப்பட்டதைத் தொடர்ந்தும் சந்நிதி ஆலயமும் மீண்டும் புதுப்பொலிவுடன் நிமிர்ந்து நின்றது.

அந்தக் காலத்தில் "ஆனந்தா ஆச்சிரமத்தின்" நிறுவனராக இருந்து அன்னதானப்பணிக்கு உயிர் கொடுத்து சமாதி அடைந்துவிட்ட மயில்வாகனம் சுவாமிகளின் சீடனாக இருந்து, அவருடைய அன்னதானப்பணியில் தன்னையும் ஈடுபடுத்தி அதற்கே அர்ப்பணித்து வந்த மோகனதாஸ் இன்று அவரது பெயரால் அவரது ஆத்மாவின் ஆசியுடன் "சந்நிதியான் ஆச்சிரமத்தை" நிர்வகித்து வருகின்றார்.

'மோகன்' என்று அடியவர்களாலும் நண்பர்களாலும் அன்புடன் அழைக்கப்பட்டு வரும் மோகனதாஸ் அங்கே தஞ்சமடைந்து வரும் நூற்றுக்கணக்கான அனாதைகளுக்கு மூன்று வேளை உணவும் இருப்பிடமும் வழங்கிப் பராமரித்து வருவதால் எந்த நேரமும் அங்கே 'அன்னம்' பொங்கி வழிந்து கொண்டிருக்கும்!

ஆனால் நாளை...?

மோகனின் மனதை ஊடறுத்து அரித்துக் கொண்டிருந்தது!... எல்லா இருப்புமே முடிந்துவிட்ட நிலையில் அரிசிக் குவையைப் பார்த்த மோகனுக்கு நெஞ்சு திக் கென்றிருந்தது.

"முருகா!... என்ன சோதனை?.... நாளைக்கு பசியுடன் காத்திருக்கும் அடியவர்களுக்கு என்ன செய்வது? .... சந்நிதி வேலவா!.... அன்னக் கந்தா...! நாளைய அன்னதானப் பணிக்கு என்ன செய்யப் போகின்றேன்.... எப்படி இந்த அன்னதானப் பணியை நிறைவேற்றி வைக்கப் போகின்றேன் நீதான் ஒரு வழி சொல்ல வேண்டும்...."

தன்னையே மறந்து "பூரண சரணாகதி" நிலையில் நாளைய பொறுப்பை சந்நிதி முருகனிடமே கொடுத்துவிட்டுக் கண்களை மூடியபடியே தியானித்து விட்டு "சும்மா" இருந்து விட்டார்.

அதே நினைவுடனேயே அன்றைய இரவைக் கழித்து எழுந்த மோகனதாஸ், காலைப் பணிகளை வழமை போல் செய்யத் தொடங்கிவிட்டார்.

"ஐயா!..... ஐயா!...."

ஆச்சிரமத்தின் வாசலில் வந்து நின்ற கேம்பிறிட்ஜ் காரில் இருந்து இறங்கிய அந்த மனிதர் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்.

தனது பணிகளை எவ்வித சலனமும் இன்றிச் செய்து கொண்டிருந்த மோகன், ஆச்சரியத்துடன் வாசலை நோக்கி ஓடினார்!

அங்கே! ...

வாசலில் நிற்பாட்டப்பட்டிருந்த 'கேம்பிறிட்ஜ்' காரில் இருந்து அரிசி மூடைகள், காய்கறிகள் என்பவற்றை இறக்கித் தூக்கிக் கொண்டு ஆச்சிரமத்தின் வாசலை நோக்கி வந்தார்கள்.

"ஐயா!.... இன்றைக்கு ஐநூறு பேருக்கு அன்னதானம் கொடுக்க வேணும். அதற்கு வேண்டிய எல்லாச் சாமான்களும் இதிலை இருக்கு.... இன்றைக்கு உங்களாலை முடியும் தானே..."

வாசலில் நின்ற அந்த மனிதர் இரு கரங்களையும் கூப்பியபடியே கேட்டுக் கொண்டு உள்ளே வந்தார்.

"முருகா!... கந்தா!.... சந்நிதி முருகா!..... என்னே உன் சோதனையும், விளையாட்டும்.....?"

ஆச்சரியத்தால் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த மோகனதாசின் உள்ளம், அந்த முருகனின் அற்புதத்தை நினைத்துக் கசிந்துருகியது!...

அவர் கண்களில் இருந்தும் "பொலபொல" வென்று கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது.

## அரசியல் ஞானத்தை அருளியவன்

1949ஆம் ஆண்டு ஒரு நாள்...!

அமைதியும், சாந்தமும் நிலவிக் கொண்டிருக்கும் அழகிய தொண்டைமானாறு அந்த நிலவொளியில் தூங்கி வழிந்து கொண்டிருந்தது.

அங்கே கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும், செல்வச்சந்நிதி ஆலயம் நாத ஒலிகள் ஒய்ந்துபோய் ஆலய வாசலில் படுத்திருந்த அடியவர்கள் முருகன் நாமத்தை உச்சரித்தபடியே தூக்கத்திற்காகக் காத்திருந்தனர்.

இந்திய சுதந்திரத்தைத் தொடர்ந்து வெள்ளைக்காரன் இரவோடிரவாக இலங்கைக்கும் சுதந்திரத்தைக் கொடுத்துவிட்டு ஓடிய முதலாண்டு நினைவுகள் கூட 'வெள்ளைக்காரன்' வரலாறுகளாகவே இருந்து வந்துள்ளன!

" வெள்ளைக்காரன் அப்பிடி இருந்தான்.... இப்படி இருந்தான் ..... அது செய்தான் .... இது செய்தான்..." என்று அவனுடைய வரலாறுகளையே பேசிப் பேசிக் கழித்துக் கொண்டிருந்த காலத்தில், சங்கார மூர்த்தியாய் அந்தக்கிராமத்தில் அருள் ஒளி பரப்பும் கந்தனின் சந்நிதியில் தான்எத்தனை உயிர்கள் அந்த வேலவனின் தாள்களே சரணம் என உறங்கிக் கொண்டிருக்கின்றன.

அந்த ஆலயத்தில் தவம் புரியும் பல சுவாமிகளின் அற்புதங்கள் கூட ஒரு பக்கம் மக்களைப் பரவசப்படுத்திக் கொண்டிருந்தன.

கடையிற் சுவாமிகள்..... சுப்பிரமணிய சுவாமிகள் .... என்று இப்படி எத்தனையோ சுவாமிகள் வாழ்ந்த மண் அது...!

"சுவாமி!.... எனக்கு மெய் ஞானத்தைத் தாங்கள் வழங்கி ஆசீர்வதித்து ஆட் கொள்ள வேண்டும்..."

மிகவும் பணிந்து அந்த சுவாமிகளின் தாள்களை வணங்கிய துரைரத்தினம், அந்த சுவாமிகளின் முன்னால் கைகட்டி வாய் புதைத்தபடி பணிவுடன் நின்றார்.

தொண்டைமானாற்றில் பிறந்து வளர்ந்த துரைரத்தினம் , அப்பொழுது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவு மாணவனாகப் படித்துக் கொண்டிருந்தார்.

சந்நிதி முருகன் மீது எவ்வளவு பக்தியும் அன்பும் கொண்டிருந்தாரோ அந்த அளவுக்கு ஆலயச் சூழலில் வாழ்கின்ற தவ முனிவர்கள் மீதும் பக்தியையும், பணிவையும் கொண்டிருந்தார்.

"சீ.....போடா!....உனக்கு இப்போதைக்கு அருள்ஞானத்தை வழங்க முடியாது. அதை ஏற்றுக் கொள்கின்ற பக்குவம் இன்னும் உனக்குவர வில்லை..... போ.... போ..."

செல்வச்சந்நிதி ஆலயத்தின் தெற்குப்புறமாக ஓங்கி வளர்ந்து நின்ற மகிழ மரத்தின் கீழ் யோக நிட்டையில் இருந்த சுவாமிகள் துரைரத்தினத்தைப் பார்க்கவே விரும்பாதவராக மறுத்துக் கொண்டிருந்தார்.

அந்தச் சுவாமியின் கண்களில் இருந்தும் தெறித்துக் கொண்டிருந்த ஒளிப்பிரவாகம், இளைஞன் துரைரத்தினத்தின் ஊனக் கண்களைத் திறக்க வைத்தது.

பல்கலைக் கழக வாழ்வில் பெற்ற அனுபவங்களினூடாக அவர், மார்க்சியச் சிந்தனைகளால் கவரப்பட்டிருந்த போதும் 'சந்நிதியான்' என்றால் ஏனோ தெரியவில்லை அவருக்கு ஒரு பிடிப்பு அவரை அறியாமலேயே இருந்தது.

"சுவாமி!.... தாங்கள் அப்படி நிராகரிக்கக் கூடாது.... தயை கூர்ந்து, என்மீது கருணை கொண்டு மெய்ஞ்ஞானத்தை உபதேசிக்க வேண்டும்....."

சிறுவயதில் இருந்தே சைவசித்தாந்த சாத்திரங்களை ஊன்றிப்படித்த துரைரத்தினத்திற்கு மெய்ஞானத்தின் இன்ப உணர்வை அனுபவிக்க வேண்டும் என்ற ஆவல் கிளர்ந்து கொண்டிருந்தது.

மனம் தளராத நிலையில், உறுதியாக நின்ற துரைரத்தினம், சுவாமியின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கிக் கொண்டே நின்றார். அங்கே நின்ற துரைரத்தினத்தின் மனம் சுவாமியின் அருளுக்காக ஏங்கிக் கொண்டிருந்தது.

"அடேய்!.... மடையா!.... உனக்கு இந்தப் பிறவியில் ஞானத்தை உபதேசிக்க முடியாது ..... அதை அடையும் தகுதியும் உனக்குக் கிடைக்காது ..... உனக்கு இந்தப் பிறவியில் வேறு ஒரு பணி காத்திருக்கின்றது. அதை இதய சுத்தியுடன் செய்து உனது சமூகத்திற்காக வாழ்ந்து கொள் ... போ.... போ..."

சுவாமிகள் அப்படியே கூறிவிட்டு நிஷ்டையில் ஆழ்ந்துவிட்டார்.

"சுவாமி !...."

அலறித் துடித்தெழுந்த துரைரத்தினம் பரக்கப் பரக்க விழித்துக் கொண்டிருந்தார்.... சிறிது நேரம் தான் படுத்திருந்த பாயைச்சுற்ற வரப் பார்த்துத் திகைத்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது தான் அதுவரையில் தான் கண்டது கனவு என்பதை அறிந்து வியப்பும், திகைப்பும் அடைந்தார்.

அன்று கண்ட கனவின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாது தவித்த துரைரத்தினம் சந்நிதி முருகனின் அருள் தனக்குக் கிடைக்காமல் போய் விடுமோ என்று துயரத்தில் ஆழ்ந்தார்.

சதா காலமும் "முருகா!..... முருகா!..." என்றே அவர் உதடுகளும் உச்சரித்துக் கொண்டு இருந்தன.

அந்த நினைவுடனேயே பல்கலைக் கழகப் பட்டப்படிப்பைச் சிறப்பாக முடித்து வெளியேறி பருத்தித்துறை "புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையில்" ஆசிரியராகக் கடமையாற்றத் தொடங்கினார்.

ஆசிரியராக இருக்கும் காலத்திலேயே முற்போக்குச் சிந்தனையுடனும், நகைச்சுவையாகவும் பேசும் ஆற்றல் படைத்திருந்த துரைரத்தினம் அப்போது தமிழ்ப் பகுதிகளில் முனைப்போடு நிகழ்ந்து கொண்டிருந்த 'சிங்கள சிறி' எதிர்ப்புப் போராட்டங்களில் பங்குபற்றியதுடன், தமிழரசுத் தந்தை அமரர் சா. ஜே. வே. செல்வநாயகத்தின் அரசியல் கோட்பாட்டினால் ஈர்க்கப்பட்டார்.

ஆம் !.... அவர் தான் பிற்காலத்தில் பருத்தித்துறையின் புகழ் பெற்ற பாராளுமன்ற உறுப்பினராகப் பிரகாசித்த துரைரத்தினம்.

"அன்று சந்நிதியான் தான் சுவாமியின் வடிவத்தில் கனவில் தோன்றி இந்தப் பிறவியில் மெய்ஞானத்தை விட அரசியல் ஞானத்தைப் பெற்று அதன் மூலம் பிரபல்யம் அடைவாய் என்று அருள் புரிந்தவன்.... அவன் தான் எனக்குள் இருக்கின்றான்...."

என்று அடிக்கடி சொல்லிக் கொள்ளுவார்.

இஸ்ரேல் திராட்சைப் பழத்தை இலங்கையர் மலிவாகச் சாப்பிடக் கூடிய அளவுக்கு திராட்சைப் பழத்தை இலங்கைக்கு முதன் முதலில் அறிமுகம் செய்து வைத்த துரைரத்தினம் "ஒரு சந்நிதியான் பக்தன்" என்பது பலருக்குத் தெரியாதிருந்தது.

அவர் தனது இறுதிக் காலத்தில் ஓய்வாக இருக்கும் போது 1987 ஆம் ஆண்டு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொலை செய்யும் சதித் திட்டம் ஒன்றில் வானொலியின் காலைச் செய்தியறிக்கையில் "துரைரத்தினம் நேற்று இரவு அவரது வீட்டில் வைத்து இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்..." என்ற செய்தி வந்த போது தன்னை அந்த முருகனே காப்பாற்றியவன் என்று பெருமையோடு சொல்லிக் கொண்டவர்.

"முதல் நாள் இரவு கனவில் வந்து வேறு ஒரு இடத்தில் போய் இரு என்று அவன் இட்ட கட்டளைதான், என்னுடைய உயிரையும் கௌரவத்தையும் காப்பாற்றியது..."

என்று மெய்சிலிர்க்கக் கூறிய துரைரத்தினம், அன்று தனது வீட்டில் இரவு தங்கியிருந்திருந்தால் கொலையாளிகளின் திட்டத்தின்படி அவரும், சுடப் பட்டிருப்பார்.

## *சந்நிதி மண்*

பருத்தித்துறையில் "குழந்தைப் பிள்ளை வைத்தியர்" என்றால் எல்லோருக்கும் நன்கு பரிச்சயமானவர் தான் டாக்கடர் பத்மநாதன்............

குழந்தை வைத்தியத்தில் நிபுணத்துவம் பெற்று செல்வாக்கோடு வாழும் பத்மநாதனும், அவருடைய குடும்த்தினரும் சந்நிதி முருகனிடத்தில் அளவிலாத பக்தி கொண்டவர்கள். அவர்களுடன் சிலகாலம் முருகேசு சுவாமிகள் வாழ்ந்து வந்தார்.

முருகேசு சுவாமிகள் முருகன் நாமத்தையே சதா காலமும் உச்சரித்து அவனது அருட் கடலில் ஆழ்ந்து ஞானம் பெற்ற ஒரு மகானாகி விட்டவர். அமைதியாக இருந்தே பல அற்புதங்களைச் செய்து கொண்டிருப்பவர்.....

ஆம்!..... தனது ஞான தரிசனத்தினால் முருகனின் பேரொளியைக் கண்டு களித்தவர்.

சிவலிங்கம் வரவழைப்பது, மண்ணைத் திருநீறாக்குவது; நாள்பட்ட நோய்களைக் குணமாக்குவது............ இப்படியே அவர் சந்நிதி முருகன் அடியவராக மாறியபின், அவனருளாலேயே அற்புதங்களைச் செய்து வருவதால் அவரைச் சந்தித்து அவரிடம் ஆசிப்பெறுவதைப் பெரும் பேறாகக் கருதி நூற்றுக் கணக்கில் வந்து திருநீறு வாங்கிச் செல்வார்கள்.

திடீரென என்றாவது ஒரு நாள் தனக்குப் பிடித்தமான ஒரு வீட்டிற்குச் சென்று, அவர்கள் வீட்டில் சில நாட்கள் தங்கித் திரும்புவார்.

அந்த வகையில் பேறு பெற்ற ஒரு குடும்பம்தான் பத்மநாதன் குடும்பம்!

1978 ஆம் ஆண்டு சந்நிதி முருகனின் தேர்த் திருவிழா.....!

அன்று அலை போல மக்கள் வெள்ளம் கரை புரண்டு கொண்டிருந்தது.......... "எள் போட்டால் விழ இடமில்லாத" அளவுக்கு வெளிவீதி, உள்வீதி எங்கும் முருக பக்தர்களால் நிறைந்திருந்தது.

"முருகா ......... முருகா....." என்ற நாமம் எங்கும் ஒலித்து விண்ணகமே அதிர்ந்து கொண்டிருந்தது.

அன்று காலையில் இருந்து இரவு முழுவதும் சனக் கூட்டத்திற்குக் குறைவில்லை.

இரவு பெரிய சிவத்தக் குதிரை வாகனத்தில், முருகன் வேல் வடிவில் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட படல் சாத்துப்படியுடன் வீதியுலா வருவது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

அந்தக் காட்சியைக் கண்குளிரப் பார்ப்பதற்கென்றே பக்தர் கூட்டம் அந்த வீதியெங்கும் நிறைந்து வழிந்து கொண்டிருந்தது.

காவடிகள்..... பால் செம்பு எடுப்பவர்கள்..... துலாக்காவடிகள்...... கரும்புக் காவடிகள் என்று எங்கு பார்த்தாலும் நூற்றுக்கணக்கில் நேர்த்திக் கடன்களைச் செய்து கொண்டிருப்பவர்கள் ஒரு புறமும், திக்குளிப்பவர்கள் வாசல் புறமுமாக அந்தச் சந்நிதித் தெருவே பக்திப் பரவசத்தில் மூழ்கிப்போய் இருந்தது.

அன்று இரவு முருகனைத் தரிசிப்பதற்காகப் பெரும் சிரமத்திற்கு மத்தியில் கோயிலுக்கு வந்து சேர்ந்த டாக்டர் பத்மநாதனும், அவரது மனைவியும் தமது வாகனத்தில் வந்து சேர்ந்தனர். கூடவே அவர்களுடன் முருகேசு சுவாமியும் வந்திருந்தார்.

கோயில் சூழலில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் வாகனங்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் தமது காரை நிறுத்தி வைத்துவிட்டு, அந்த மூவரும் சந்நிதிக்கோயிலை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

பத்மநாதனின் மனைவியினால், அந்தச் சனக் கூட்டத்தில் முண்டி அடித்துக் கொண்டு கோயிலுக்குள் செல்ல முடியவில்லை.

கோயிலுக்குள் சென்று முருகனை வழிபட்டு விபூதி வாங்கிப் பூசமுடியவில்லையே என்று மனம் நொந்து கொண்டிருந்தார்.

"சுவாமி!.... இந்தச் சனக்கூட்டத்திலை என்னாலை கோயிலுக்குள் சென்று விபூதி வாங்கிப் பூசமுடியவில்லையே..... முருகா!... ....... வழமையாகச் செய்யிற காரியத்தைக் கூடச் செய்ய ஏலாமல் இருக்கு....."

அவருடைய தவிப்பை எண்ணிப் பார்த்துப் பரிதாபப்பட்ட முருகேசு சுவாமிகள் சிரித்துக் கொண்டே, பத்மநாதனின் மனைவியின் கண்களை உற்றுப் பார்த்தார்.

"மகள்!....... இந்தச் சந்நிதியான் எங்கும் பரந்து நிற்கின்றான்........ அந்த ஞானக் குமரனின் கால் அடி படாத மண்ணே இங்கு இல்லை. இந்தக் கோயிலின் புனிதமான மண்ணை எடுத்து, திருநீறு என நினைத்துப் பூசினால் அது திருநீறாகவே இருக்கும்.........."

"சுவாமி!........ மண்ணை எடுத்து விபூதி என்று பூசுவதா?"

அந்தப் பெண்ணின் மனம் குழம்பிக் கொண்டிருந்தது. அதே வேளை முருகேசு சுவாமிகளின் அந்த வார்த்தையை அவளால் தட்ட முடியவில்லை.

"அம்மா!......மகள்!...... முருகனை நினைத்துக் கொண்டு, அவனது நாமத்தைச் 'சரவணபவ' என்று உச்சரித்துக் கொண்டே செய்தால், அது திருநீறாகவே உன் நெற்றியை அலங்கரிக்கும்....."

சுவாமிகள் மேற்கே திரும்பி, முருகன் சந்நிதானம் இருந்த திசையை நோக்கிக் கும்பிட்டுக் கொண்டே அவர்களிடம் இருந்து விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

அதற்கு மேல் சிறிதும் தாமதிக்காத அந்தப் பெண்,

"முருகா!.... ஓம்........ சரவணபவ ............

ஓம் ..... சரவணபவ....."

திரும்பத் திரும்ப முருகனின் சடாட்சர மந்திரத்தை உச்சரித்தப்படியே தன் காலுக்குக் கீழ் இருந்த மண்ணில் சிறிதளவை தன் வலக்கையின் மூன்று விரல்களால் எடுத்து நெற்றியில் பூசினாள்.

என்ன ஆச்சரியம் ....?

அது வழமையாகக் கோயிலுக்குள் அர்ச்சகரிடம் வாங்கிப் பூசுகின்ற விபூதியாகவே இருப்பதை உணர்ந்த அந்தப் பெண்ணின் உடல் ஒரு கணம் சிலிர்த்தது!

அவளுடைய முகத்தில் ஏற்பட்ட வியப்பும் மகிழ்ச்சியும் பல மடங்கு அதிகரித்தது!

"இஞ்சேருங்கோ அப்பா!.... முருகனின் திருவிளையாடலை"...........?

அவளுடைய கண்களில் இருந்தும் கண்ணீர் 'பொல பொல' வென்று வழிந்தோடியது!

## *நீக்கமற நிறைந்தவன்*

செல்வேந்திரா! ... கொழும்பில் பிரபலமான ஒரு பட்டயக் கணக்காளராக தனித்துவமாக இயங்கி வருபவர்.

1983 இன அழிப்பு நடவடிக்கையின் பொழுது, கொழும்பில் உள்ள அவரது சொத்துக்கள் எல்லாவற்றையும் இழந்து தாய் மண்ணே தஞ்சம் என்று எண்ணி, யாழ்ப்பாணத்திற்கு ஒடி வந்த ஆயிரக்கணக்கான தமிழர்களில் அவரும் ஒருவராகி யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்தவர்.

காலம் கரைய அவரது எஞ்சிய சேமிப்புக்களுமே கரையத் தொடங்கிவிட்டது... மனம் ஒடிந்து போன செல்வேந்திரா மீண்டும் கொழும்புக்குச் சென்றார்.

"சே ! ... இங்கை இருந்து அடிமையாகப்
பயந்து பயந்து வாழ்வதை விட
சாம்பியாவுக்குப் போய்வந்தால் தான்
மீண்டும் தலை நிமிரலாம்...!"

அவரது உள் மன உணர்வுகள் துடித்துக் கொண்டிருந்தன!

அந்த நேரம் சாம்பியா, நைஜீரியா போன்ற ஆபிரிக்க நாடுகளில் கணக்காளர்களுக்கு நல்ல கிராக்கி இருந்தது ....! சாம்பியாவுக்குப் போகவேண்டும் என்று நினைத்த உடனேயே தூதரகத்திற்கு விண்ணப்பித்தும் விட்டார். அவரது தகைமை, அனுபவம் அவருக்குக் கைகொடுத்து விட்டது ... !

ஆம் !... சாம்பியாவின் அரச வேலை வாய்ப்பு வழங்கும் நிறுவனத்தில் நல்ல சம்பளத்துடன் நியமனம் கிடைத்துவிடட்து, ... அரைகுறை மனதுடன் சாம்பியா போவதற்குத் தன்னை ஆயத்தப்படுத்தத் தொடங்கிவிட்டார்.

கேகாலையில் அவரது தம்பியின் வீட்டில் இருந்தபடியே எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருந்தார்... நாட்கள் செல்லச் செல்ல அவரது மனதை ஏதோ ஒரு சுமை அழுத்தியது போல் இருந்தது....!

எதையோ இழந்து விட்ட நிலையில் அவரது உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது.

"என்னப்பா ?... கொஞ்சநாளா உங்கடை முகம் ஒரு மாதிரி இருக்குது... ஏன்...? சாம்பியாவுக்குப் போறது பிடிக்கேல்லையோ?"

கடந்த சில நாட்களாக அவரது முகவாட்டத்தை அவதானித்துவந்த அவருடைய மனைவி சரஸ்வதிக்கு மனம் பொறுக்கவில்லை...! அவருடைய வேதனையை சரஸ்வதியால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"ம் ... இவ்வளவு காலமும் சொந்த மண்ணில் இருந்துவிட்டு, இப்ப ஒரு அன்னிய நாட்டுக்குப் போறதை நினைக்கத்தான் ஒரு மாதிரி இருக்கு... சந்நிதி முருகனிட்டைப் போகாமல் இருக்கிறதுதான் கவலையாகஇருக்குது. ஒருக்கால் ஊருக்குப் போய் வரலாம் என்றாலும் காலமும் நேரமும் போதாமல் இருக்குது ..."

சொந்த ஊர்ப்பற்றும் கடவுள் பக்தியும் கொண்டு வாழ்ந்து வரும் செல்வேந்திராவின் மனம் கூனிக் குறுகியது போல் இருந்தது.

"அதுக்கு இப்ப எங்களாலை என்னதான் செய்யமுடியும் ...? இப்ப உள்ள போக்கு வரத்துப் பிரச்சினைக்குள்ளை போய் வர ஏலாது தானே? ... முருகன் எல்லா இடமும் நிறைந்திருக்கிறார்... இங்கை இருந்தே அவனை நினைத்து

வழிபடுங்கோ ... கூடவே இருப்பான்..."

சரஸ்வதி, அசரீரி மாதிரிக் கூறியது அவருக்கு ஏதோ ஒருவகையில் ஆறுதலைக் கொடுத்தது.

மனதுக்குள் அந்தச் சந்நிதி வேலவனை வணங்கியபடியே பயணம் போவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்தார்.

சாம்பியாவில் உள்ள 'எம்ப்ளோய்மென்ற் எக்சேஞ்ச்' நிறுவனத்தில் சென்று கடமையை ஏற்பதற்கு இன்னும் ஐந்து தினங்கள் மட்டும்தான் இருந்தது.! அவரது சகோதரரான டாக்டர் தெய்வேந்திராவின் வீட்டில் இருந்து புறப்பட்டு அன்று இரவு புகைவண்டியைப் பிடித்துக் கொழும்புக்குச் செல்ல வேண்டும். மறுநாள் விமானத்தில் பயணம் செய்வதற்கான இடம் ஒதுக்கீடும் செய்து விட்டார்.

நேரம் போய்க் கொண்டிருக்க அவரது நெஞ்சு 'திக்திக்' என்று அடித்துக் கொண்டிருந்தது... செல்வேந்திரா, அடிக்கடி கையில் உள்ள மணிக்கூட்டைப் பார்த்தபடி பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்.

நேரம் ஐந்து மணியாகி விட்டது...!

"சரஸ்! ... எல்லாம் சரி தானே?... இப்ப
புறப்பட்டால்தான் ஆறு மணிப் புகை
வண்டியைப் பிடிக்கலாம்..."

அவர், தனது மனைவியைத் துரிதப்படுத்திக் கொண்டே பயணப் பொதிகளையும் ஏற்றிவிட்டு, மோட்டார் வண்டியை 'ஸ்ராட்' பண்ணினார்.

கேகாலையில் இருந்து புறப்பட்ட, அவரது கார், அந்தக் காட்டுப் பாதை வழியே விரைந்து கொண்டிருந்தது.

அடர்ந்த யானைக் காடு... வீதிவழியே வேறு வாகன நடமாட்டமே இருக்கவில்லை. சுற்றிவர எங்கு பார்த்தாலும் ஒரே கும்மிருட்டாக இருந்தது. அது இன்னும் அவர்களுக்குப் பீதியைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

"முருகா! ... முருகா!... இருவருமே எதுவுமே பேசாது, அந்த முருகனின் நாமத்தையே உச்சரித்துக் கொண்டிருந்தனர்.

வேகமாக எந்தவித கரைச்சலும் கொடுக்காது ஓடிக்கொண்டிருந்த கார், சிறிது தூரம் சென்றதும், "விக்கி, விக்கி" மெதுவாக ஓடத்தொடங்கியது... காரைச் செலுத்திக் கொண்டிருந்த செல்வேந்திராவுக்கு உடலெல்லாம் வியர்க்கத் தொடங்கி விட்டது...

"சரஸ் !... எல்லாம் 'அப்செற்' ஆகப்போகுது... பெற்றோல் ராங்கில், பெற்றோல் முடிந்து விட்டது போல ... சேக் ... அவசரத்திலை பெற்றோலைக் கவனிக்கவில்லை..."

காரை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு, எரிபொருள் மானியைப் பார்த்ததும் திகைத்தே போய் விட்டார்.

ஆம்!... அவரது சகோதரனிடம் இருந்து, காரை வாங்கிய பொழுது எரிபொருளின் அளவு காட்டும் மீற்றரைப் பார்க்காது வந்தது, எவ்வளவு முட்டாள் தனம் என்பதை அப்பொழுதுதான் உணர்ந்து கொண்டார். அவரது தம்பி, ஏற்கனவே புகைவண்டியில் இடம் ஒதுக்கீடு செய்வதற்காகப் புகையிரத நிலையத்திற்குப் போகும் அவசரத்தில் இதுபற்றிக் கூறவில்லை.

காரிருள் சூழ்ந்த காட்டுப்பாதை ... கடைகளோ கண்ணுக்கு எட்டிய தூரத்திற்கே இல்லை... காட்டு வண்டுகளின் ஓசை மட்டும் காதைப் பிளந்து கொண்டிருந்தது. அந்த மோட்டார் வண்டியில் இருந்தும் இறங்கி, நீண்டு செல்லும் பாதையையே பார்த்த செல்வேந்திராவுக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை.

"முருகா! ... என்ன சோதனை? ... இன்னும் பத்து
நிமிடத்துக்குள்ளை புகைவண்டியைப் பிடிக்காவிட்டால்
என்ரை, பயணமே ரத்தாகி விடுமே...!"

அவரது பயணம் தடைப்பட்டுவிட்டால், அதனால் ஏற்படப்போகும் பாதிப்புக்களை அவரால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

அவரது மனம் அந்தச் சந்நிதி வேலவனிடமே பூரண சரணாகதியடைந்து விட்டது!

"அண்ணை! ... இதிலை ஏன் நிற்கிறியள்...? இந்தக்
காட்டுப்பாதையிலை கனநேரமா நிற்கிறியளோ?"

அந்தப் பாதையால் சைக்கிளில் வந்து கொண்டிருந்த யாரோ ஒரு இளைஞன் தூய தமிழில் பேசியபடி அவருக்கு முன்னால் வந்து நின்றான்.

காரின் வெளிச்சத்தில் அந்த இளைஞனை நிமிர்ந்து பார்த்த செல்வேந்திராவுக்கு அப்பொழுதுதான் நெஞ்சில் ஈரம் கசிந்தது போல் இருந்தது.

"தம்பி! இங்கனேக்கை எங்கையும் கடைகள் இருக்குதோ?... ற்றெயினுக்குப் போற அவசரத்தில் பெற்றோலைக் கவனிக்காமல் வந்துவிட்டம்... அதுதான் இடையிலை நின்று போச்சுது ..."

"ஓம் அண்ணை ... இதிலை கொஞ்சத்தூரம் போனால் வளைவிலை ஒரு பண்ணை இருக்குது... பெற்றோல் கானைத் தாருங்கோ ... நான் வாங்கிவாறன்..."

அந்த இளைஞன், அவரிடம் இருந்து, பெற்றோல் கானையும் அதற்குரிய பணத்தையும் வாங்கிக்கொண்டு வந்த வழியே திரும்பிச் சென்றான்.

"சரஸ்! ... இந்தப் பையனைத் தெரியுதோ?... முந்தி எங்கையோ பார்த்த மாதிரியும் இருக்குது..."

" இல்லை ... எனக்கும் யாரென்று தெரியவில்லை... கடவுள் மாதிரி அந்தரத்திற்கு உதவி செய்ய வந்துட்டுது... இல்லையென்றால் இண்டைக்கு எங்கடை கதியென்ன...?"

பயணத்தில் நடுக்காட்டில் ஏற்பட்ட தடங்கலினால் மனம் பேதலித்துப் போய் இருந்த சரஸ்வதியும் அப்பொழுது தான், மெதுவாக வாய் திறந்து கதைத்தார்.

சில நிமிட நேரத்திற்குள் அந்த இளைஞனும் 'பெற்றோல் கானுடன்' திரும்பி வந்துவிட்டான். அவனிடம் இருந்து அதை, ஆவலுடன் வாங்கி காரின் பெற்றோல் தாங்கியினுள் விட்டதும்தான் செல்வேந்திராவுக்குப் போன உயிர் திரும்பி வந்தது போல இருந்தது.

"தம்பி! ... உங்களை எனக்கு மறந்து போயிற்றுது ... யாற்றை மகன்..."

பெற்றோலைத் தாங்கியினுள் நிரப்பிவிட்டு ஆச்சரியத்துடன் அந்த இளைஞனைப் பார்த்துக் கேட்டார்.

'அண்ணை ! உங்களை எனக்கு நல்லாத் தெரியும் ... நான்
தொண்டைமனாறு பெரிய கடற்கரை தங்கவேலாயுதத்தின்ரை
மகன் தான் ... இங்கை ஒரு கடையிலை வேலை செய்யிறன்...
சரி, அண்ணை புறப்படுங்கோ, ற்றெயினுக்கு நேரமாச்சுது ...
உங்களை ஊரிலை சந்திக்கிறன்...'

அந்த இளைஞன் , சொல்லிக் கொண்டே தான் வந்த திசையிலேயே திரும்பிச் சென்று இருட்டில் மறைந்து விட்டான்.

" முருகா... சந்நிதிக் கந்தனே"...
என் செல்வமே ... உன் கருணையே கருணை..."

அந்த இளைஞன் போன திசையையே பார்த்துக் கொண்டு முருக நாமத்தை உச்சரித்த தம்பதிகளின் உடல் புல்லரித்தது!

## *எரிந்த தேரும் எரியாத பழமையும்*

**1986 ம் ஆண்டு .................**

அந்த நிசப்தமான நள்ளிரவில் செல்வச் சந்நிதி ஆலயம் இருள் கவ்விப் போய் இருந்தது........... காலையிலும், மாலையிலும், இரவிலும்கூட பக்தர்களால் நிரம்பி வழியும் அந்த முருகன் ஆலயம் யாருமற்ற சூனியப் பிரதேசமாக மங்கிப் போய்க் கிடந்தது...........!

ஆம்.................! இலங்கை இராணுவமுகாம் எல்லைக்குள் இருந்த தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயமும், ஆலயச் சுற்றாடலும் மாலை ஆறு மணிக்குப் பிறகு ஒளி இழந்து, இருள் கவ்விப் போய் இருக்கும்...... அதற்குப் பிறகு யாருமே அந்தப் பக்கம் போய் வரமாட்டார்கள்.

பகல் நேரங்களில் அந்த ஆலயமும் சுற்றவர உள்ள மடங்களும் கலகலப்பாக இருக்கும்............!

அந்தச் சந்நிதியானுக்கு அழகான மிகப் பிரமாண்டமான சித்திரத் தேர் அமைக்க வேண்டும் என்று ஊரவர்களும், அயல் ஊரவர்களும் விரும்பியிருந்தனர்.

எந்தஇராணுவ நெருக்குதலிலும் முருகன் கோயில் மீது மட்டும், இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொள்ள மாட்டார்கள் என்ற நம்பிக்கை அந்த

ஊர்மக்களிடமும் பூசகர்களிடமும் இருந்தது. கதிர்காமத்தில் பல்லாயிரக் கணக்கான சிங்கள மக்கள் பக்திபூர்வமாகச் சென்று, நேர்த்திக் கடன்களைக் கூடச் செய்து வருகின்றனர்.

"முருக தெய்யோ...........!'' என்று மதிப்பு வைத்து வணங்கப்படும் அந்த முருகன் ஆலயம் எப்போதும் பாதுகாப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையினால் சித்திரத் தேர் அமைக்க வேண்டும் என்ற ஆவல் அவர்களிடம் ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை.

அந்த ஊர் இளைஞர்கள் சித்திரத் தேர் அமைப்பது தொடர்பான ஒரு ஆலோசனைக் கூட்டத்தை ஒழுங்கு செய்து புதிய தேர் அமைப்பதற்கென ஒரு தேர்த் திருப்பணிச் சபையையும் தெரிவுசெய்தனர்.

"எங்கடை திட்டத்தின் படி பார்த்தால் தேர் கட்டி முடிப்பதற்குப் பதினைந்து லட்சம் ரூபாவரை வேணும் போல கிடக்கு.........."

சித்திரத் தேர் அமைப்பதற்கென தெரிவு செய்யப்பட்ட சபையின் தலைவர் வில்வரத்தினம், திருப்பணிச்சபைக் கூட்டத்தில் தெரிவித்து, இதற்கான நிதியை எப்படிச் சேர்ப்பது என்று தன் ஆதங்கத்தை வெளிக்காட்டிக் கொண்டிருந்தார்.

" சே! உது என்ன பெரிய தொகையோ?...........
ஒரு நாலு மாதத்திலை சேர்த்துப் போடலாம் ........"

"எங்கடை ஆக்கள் எத்தனையோ பேர், வெளிநாட்டிலை இருக்கினம்......... இது பற்றி, ஒரு செய்தியை அனுப்பினால் போதும், பணம், பணமாக வந்து குவியும்.........."

"ஓம்....... ஓம்........ இப்ப ஊரிலையும் கூட, சந்நிதி முருகனுக்குத் தேர் என்றால் அள்ளிக் கொடுக்கிறதுக்கு எத்தனை சனம் இருக்குது........"

வில்வரத்தினம் சும்மா பேச்சுக்குக் கூறியது தான் தாமதம், அந்தச் சபையில் இருந்த இளவட்டங்கள் ஒவ்வொருவரும் உற்சாகமாகத் தங்களுடைய கருத்துக்களைக் கூறிக்கொண்டிருந்தனர்.

"அட தம்பிமாரே! .......... நீங்கள் சொல்லுறது எல்லாம் சரி ....... எங்கடை முருகனுக்குக் காசு சேர்க்கிறது பெரிய காரியமில்லை ............ ஆனால் அந்த ஆடம்பரத்தை எங்கடை முருகன் விரும்புவானோ?......... அப்பிடியெண்டால் இப்ப இருக்கிற பழைய கட்டுத்தேரை என்ன செய்யிறது?............."

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இடத்தில் ஒரு மூலையில் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த சீனிவாசகத்தாரால் அந்த நேரம் தன் உள்ளக்கிடக்கையை வெளிக்காட்டாமல் இருக்கமுடியவில்லை.

சந்நிதி முருகன் என்றைக்குமே எளிமையை விரும்புபவன் என்பதாலேயே அந்த ஆலயத்தின்சுவர்களும் கட்டிடங்களும் மிகவும் எளிமையாகவும் ஆடம்பரமில்லாமலும் அமைக்கப்பட்டுள்ளன.

"அண்ணை! ............ இப்ப உலகம் எவ்வளவு
நாகரிகமாக முன்னேறிக்கொண்டிருக்குது...
ஊர் வழியை சின்னச் சின்னக் கோயில்
களிலை எல்லாம் நல்ல வடிவான சித்திரத்
தேர் கட்டி ஓடுறாங்கள்......... இவ்வளவு பேரும்
பெருமையும் பெற்ற எங்கடை சந்நிதியானுக்கு
இன்னும் சித்திரத் தேர் இல்லையென்றால் ............"

"சரியடா மோனை ........ ஏதோ நான்
என்ரை மனதிலை பட்டதைச் சொன்னன்...........
எல்லாரும் ஒத்துவந்தால் சந்தோசம் தான்...........
அப்ப பிறகென்ன ............ நாங்கள் எல்லோரும்
ஒன்று சேர்ந்து காசு சேர்த்து எங்கடை
அப்பனுக்குப் புதுத்தேர் அமைக்கிறதைப்
பார்ப்பம்..."

சீனிவாசகத்தார் முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டே ஒரு தடைவை அந்தக் கூட்டத்தில் சமூகமளித்திருந்த ஒவ்வொருவரையும் பெருமையுடன் பார்த்துக் கொண்டார்.

"எட தம்பிமாரே!........... இவ்வளவு காலமும்
எங்கடை முருகப்பா, அந்தப் பழைய
கட்டுத்தேரிலைதான் ஏறிவலம் வந்தவர்...........
எதுக்கும் அதை அழியவிடாதையுங்கோ............"

சீனிவாசகம் இதைக் கூறும் பொழுதே அங்கே இருந்தவர்களின் கண்களில் நீர்பனித்தது.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர்கூட இதே மாதிரித்தான், சந்நிதி ஆலய உட்பிரகாரத்தைச் சுற்றிவர உள்ள அரைச் சுவர்களை உயர்த்திக் கட்ட முயற்சிகள் நடைபெற்றபொழுது, அப்பொழுது இருந்த முதிர்ந்த அர்ச்சகர் ஒருவரின் கனவில் வந்த முருகனின் கட்டளையை இன்னும் அவர் ஒரு தடவை நினைத்துப் பார்த்தார்.

"எனது ஆலயத்திற்கு ஆடம்பரம் எதுவும் வேண்டாம்.......... உள்ளதை, உள்ளபடி அப்படியே விடுங்கள்............ எல்லோரும், எங்கு நின்றாலும் என்னைப் பார்க்கக்கூடிய முறையில் கோயில் அமைப்பு இருக்கவேண்டும்........"

அந்தத் 'தேவவாக்கு', அந்த ஊர் முதியவர்களின் உள்ளத்தில் இன்னும் இரண்டறக்கலந்து, ஊறிப்போய் இருந்ததால், சீனிவாசகம் அந்தக் கூட்டத்தில் அப்படி ஒரு கருத்தை முன்வைத்தார்.

அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏகமனதான முடிவைத் தொடர்ந்து, எவருமே கருத்து வேறுபாடு கொள்ளவில்லை........... அங்கிருந்து வெளியேறிய எல்லோருமே சந்நிதியானுக்குச் சித்திரத் தேர் அமைக்கவேண்டும் என்ற முடிவுடன் செயல்படத் தொடங்கினர்.

ஆம்! உள்ளூரில் இருந்தும், வெளி ஊர்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் சித்திரத்தேர் நிதிக்குப் பணமாகவும், நகையாகவும் சேரத் தொடங்கிவிட்டது.

மஞ்சள் உணா.......... வேம்பு......., இப்படித் தமது வீடுகளில் இருந்த பெரிய மரங்களையெல்லாம் கூட வெட்டிக் கொண்டுவந்து தேர் அமைப்பதற்கு அன்பளிப்பாகக் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

பெண்கள், பிள்ளைகள் தமது நகைகளைக்கூட முருகனின் தேர்த் திருப்பணிக்குத் தானமாகக் கொடுத்தனர்.

சந்நிதியானின் தேர் அமைப்பதற்கு ஊரே வாரிக் கொடுத்தது............!

தமிழ் நாட்டில் இருந்தும் விசேடமாக வரவழைக்கப்பட்ட சிற்பாசாரியார்களும், உள்ளூரில் பிரசித்திபெற்ற சிற்பாசாரியார்களும் ஒன்றிணைந்து அந்தப் பிரமாண்டமான சித்திரத்தேரை மிக அழகாக, கலைத்திறனுடன் அமைத்துக் கொண்டிருந்தனர்.

ஏற்கனவே திட்டமிட்டபடி பதினைந்து லட்சம் அந்தத் தேருக்கு முடிந்துவிட்டது..........!

புதிதாக அமைக்கப்பட்ட அந்தச் சித்திரத் தேர், வெள்ளோட்டத்திற்குத் தயாரான நிலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. கம்பீரமாக நின்ற அந்தத் தேரின் அழகும், எடுப்பான தோற்றமும் எல்லோரையும் பரவசப்படுத்திக் கொண்டிருந்தது...............!

வெள்ளோட்டம் முடிந்து, அடுத்த ஆண்டின் பெருந் திருவிழாவில், சந்நிதி வேலவன் அந்தப் பிரமாண்டமான தேரில் வலம் வருவதைக் காணப் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் குழுமியிருந்தனர்.

இலங்கையின் முதலாவது மிகப்பெரிய சித்திரத் தேர் என்ற பெருமையுடன், அதற்கென அமைக்கப்பட்ட புதிய அகன்ற வெளி வீதி வழியே, ஆடி அசைந்து ஆயிரம் வெள்ளி மணிகள் ஒலிக்க வலம் வந்தபொழுது அன்று எழுந்த "அரகர" ஒலிகள் வானைப் பிளப்பது போல் இருந்தது.

அந்த வரலாற்றுப் பெருமை மிக்க முருகனின் புதிய தேரோட்டம் முடிந்து ஐந்து மாதங்கள்கூட முடிந்திருக்காது.

ஒருநாள்........ யாருமே எதிர்பார்த்திருக்காத நேரத்தில், இரவோடிரவாக தொண்டைமானாறு முகாமில் இருந்து தீப்பந்தங்களுடனும், மண்ணெண்ணெய், பெற்றோல் தாங்கிகளுடனும் ஆறு சிப்பாய்களும் பதுங்கிப் பதுங்கி வெளியேறி வந்து கொண்டிருந்தனர். அந்த ஆறு சிப்பாய்களினதும் கண்கள், சித்திரத் தேர் இருந்த இடத்தைத் துளாவிக் கொண்டிருந்தன.

பிரமாண்டமான அந்தத் தேரைச் சுற்றிப் பாதுகாப்பாகத் தகரத்தினால் மூடிக் கொட்டகை அமைக்கப்பட்டிருந்தது.

அன்று அமாவாசை நாள்............! ஒரே கும்மிருட்டாக இருந்ததால் ஆளை ஆள் தெரியவில்லை. தீப்பந்தங்களின் ஒளியில் அந்தத் தேர்க் கொட்டகை மலை போல் காட்சி அளித்துக் கொண்டிருந்தது.

நாய்கள் விட்டு, விட்டு ஊளையிட்டுக் கொண்டிருந்தன............. கோயில் வாசலில் ஒரே ஒரு தூண்டாமணி விளக்கு மட்டும் ஒளிர்ந்து கொண்டிருந்தது. அங்கே நின்ற சிப்பாய்களின் கண்களில் ஏதோ ஒரு வெறி தாண்டவமாடிக் கொண்டிருந்தது............! அவர்களுடைய வெளிச் சுவாசத்தில் இருந்தும் சாராய வாடை அடித்துக் கொண்டிருந்தது.

அவர்களுடைய நடமாட்டத்தைத் தூரத்தே மேற்கு வீதி மூலையில் உள்ள கடையின் பூட்டப்பட்ட கதவின் இடுக்கின் ஊடாகப் பார்த்தபடி நின்ற ஆறுமுகத்திற்குப் பயத்தினால் உடல் எல்லாம் வியர்த்துக் கொண்டிருந்தது.

அவர்கள் செய்யப்போற அந்தக் கொடும் செயலை நினைத்துப் பாத்ததும் ஆறுமுகத்தின் இரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது.

தகரக் கொட்டகையின் ஒரு மூலையில் உள்ள தகரத்தை அலவாங்கினால் உடைத்துப் பிய்த்து எறிந்த ஒரு சிப்பாய், மற்றவர்களுடன் சிங்களத்தில் உரையாடிக் கொண்டிருந்தான்.

தேர் முட்டிக்கு அருகில் வந்து நின்றவர்கள் சிங்களத்தில் ஏதோ எல்லாம் பேசிக்கொண்டே சுற்றிவர மண்ணெண்ணெயையும், பெற்றோலையும் ஊற்றிவிட்டு விலக, தீப்பந்தத்தைக் கையில் வைத்திருந்த இன்னொரு சிப்பாய் அந்தத் தீப்பந்தத்தை தேர் முட்டியை நோக்கி வீசி எறிந்தான்.

அந்த ஒரு கணத்தில் தேரைச் சுற்றித் தகரத்தால் பூட்டி வைக்கப்பட்டிருந்த கூடு பெருத்த சத்தத்துடன் வெடித்துச் சிதறியது...... அதற்குள் மிக அலங்காரமாக ஜொலித்துக் கொண்டிருந்த அந்தப் பிரமாண்டமான தேர், சுவாலை விட்டு எரியத் தொடங்கியது .............!

அந்தக் கோரக் காட்சியை மறைந்து நின்று பார்த்துக் கொண்டிருந்த ஆறுமுகம் அலறித் துடித்தபடி, அப்படியே மூர்ச்சையாகி விழுந்து விட்டார்.

வானத்து முகட்டை எட்டும் அளவுக்கு தேரில் இருந்தும் எழுந்த அந்தத் தீச் சுவாலை கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது.........!

வீடுகளுக்குள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவர்கள் விழித்துக் கொண்டுவிட்டனர்............. வெளியே வரப் பயந்தவர்களாக நின்று, வானத்தையே நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருந்தனர்........... அந்தச் செந்நிறத் தீச் சுவாலைகளின் வெப்பக் காற்று அந்தக் கிராமத்தையே கொதிப்படைய வைத்துக் கொண்டிருந்தது.

ஆம்!.......... எத்தனையோ ஆயிரக்கணக்கான மனிதர்களின் உழைப்பில் உருவாகிய அந்த அழகிய தேர், ஒரு சில மணித்தியாலங்களுக்குள் உருத்தெரியாது எரிந்து சாம்பல் மேடாய்க் கிடந்தது.

தேர்ச் சக்கரங்களின் உலோக வளையங்கள் எரிந்து சுருண்டுபோய் மூலைக்கு ஒவ்வொன்றாகத் தூக்கியெறியப்பட்டிருந்தன.

அந்த ஊர் அழுதது .........! சைவப் பெரு உலகம் கதறித் துடித்தது ...! அங்கே நின்ற இளைஞர்களோ ஆத்திரத்தால் துடித்துக் கொண்டு நின்றனர்.

"எடேய் !....... தம்பிமாரே .............! எல்லாம் போச்சுதடா முருகா.........இந்தக் கொடூரத்தை நீயுமா பார்த்துக் கொண்டிருக்கிறாய்........? அந்தக் கொடிய காட்டு மிராண்டிகளை உன்னுடைய வேல் சுட்டெரிக்காதா.........?"

எரிந்து முடிந்த தேரின் சாம்பல் மேட்டைத் தள்ளி நின்று பார்த்தபடியே தலையில் அடித்துக் கதறிக் கொண்டிருந்த சீனிவாசகத்தின் கண்கள், முருகனின் பழைய கட்டுத்தேரைத் துளாவிக் கொண்டிருந்தன.

அந்தக் கூட்டத்தில் ஒருவராக நின்று கண்ணீர் விட்டுத் தலையில் அடித்து அழுது கொண்டிருந்த ஆறுமுகத்திற்கு அன்று இரவு நடந்த சம்பவம் எல்லாமே கனவு போல் இருந்தது.

"எடேய் !....... தம்பியள் ........ அயத்துப் போன
னடா ........ ஓடிப்போய் எங்கடை அப்பன்ரை
பழைய தேரை ஒருக்கால் திறந்து பாருங்கோ........."

சீனிவாசகம் அப்பொழுது தான் நினைவுக்கு வந்தவராக அங்கே நின்ற இளைஞர்களிடம் சத்தம் போட்டுக் கூறினார்.

சுற்றிவர 100 மீற்றர் தூரத்தில் உள்ள கடைகள் , மரங்கள், கட்டிடங்கள் எல்லாமே எரிந்து சாம்பராகிவிட்ட நிலையில் சித்திரத்தேருக்கு அருகில் இருந்த அந்தப் பழைய மரத்தேரும் எரிந்து சாம்பராகிப்போய் இருக்கும் என்று சீனிவாசகத்தாரின் மனம் உள்ளூரத் துடித்துக் கொண்டிருந்தது.

அதுவரை அந்தத் தேரைப் பற்றியே சிந்தித்துப் பார்த்திராத இளைஞர்கள் ஓடிச்சென்று அந்தப் பழைய கட்டுத் தேரைச் சுற்றிவர அடைந்திருந்த தகரங்களைப் பிரித்து எறிந்தார்கள். அந்தத் தகரம் அனலாய்க் கொதித்துக் கொண்டிருந்தது.

அங்கே ...!

அந்தத் தேர் ............. அந்தப் பழைய கட்டுத்தேரின் பீடம் அப்படியே புத்தம் புதிய தேர் போன்று பொலிவுடன் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

அதில் தீச்சுவாலையின் எந்த மறுவும் இருக்கவில்லை...

"முருகா !........... வெற்றி வேலாயுதனே!..........."

அங்கே நின்று கரங்களைக் கூப்பியபடி ஆர்ப்பரித்துக் கொண்டு நின்றவர்களின் உதடுகள், சந்நிதியானின் அற்புதத்தை நினைத்து, அவன் நாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தன.

ஆம் ........! எளிமையையும் பழமையையும் விரும்பும் சந்நிதி வேலவன், இன்று மீண்டும் அந்தப் பழைய கட்டுத்தேரையே, தன் சொந்தமாக்கிக் கொண்டு விட்டான்.

(இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்ட பெயர்கள் மட்டும் கற்பனை)

## வலை மறைத்து வடம் எடுத்த வேலன்

சந்நிதிக் கந்தனின் சித்திரத் தேர்த் திருப்பணிகள் முடிவுறும் தறுவாயில் இருந்தது. இலங்கையிலேயே மிகப் பெரிய சித்திரத் தேர் என்ற பெருமையைப் பெறப்போகும் அந்தத் தேரின் சிற்ப வேலைப்பாடுகள் மிக அழகாக, சிற்பாசாரியார்களினால் மேற் கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தன.

ஆயிரம் வெள்ளி மணிகள் பூட்டப்பட்டு ஆறு அடி உயரமான இரு குதிரைகளும் முன்னோக்கிப் பாய்ந்த படி நிற்கும் பொழுது அந்த அழகிய சித்திரத் தேரின் தோற்றம் கம்பீரமாகத்தான் இருந்தது.

தேர்த் திருப்பணிச் சபையைச் சேர்ந்த சிறிதரனும், இன்னும் வேறு சிலரும் அங்கே நடைபெறும் வேலைகளைச் கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

தேர்வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. தலைமை ஸ்தபதி சோமலட்சுமண ஆசாரியார் இயந்திரம் போல் சுழன்று கொண்டிருந்தார்.

அழகான ஓவியம் ஒன்று, உயிர்பெற்று வருவது போல், அந்தத் தேரின் ஒவ்வொரு சிற்பங்களும் உயிர்த்தெழுந்தன.

"அண்ணை!.........."

தேரின் வேலைப்பாடுகளையே கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்த சிறிதரன், தனக்குப் பின்புறம் இருந்து அழைத்த குரலுக்குரிய வரைத் திரும்பிப் பார்த்தார்.

"அண்ணை!........... கடலில் இருந்து, பென்னம் பெரிய வடமொன்று கண்டெடுத்து வந்திருக்கிறார்கள்......... அதை ஒருக்கால் வந்து பாருங்கோ...."

அசரீரி போல் ஒலித்த அந்தக் குரலைக் கேட்டதும் சிறிதரனால் தன் காதுகளையே நம்பமுடியவில்லை.

அதுவரை வடம் பற்றிச் சிந்திக்காது இருந்த அவர்களுக்கு அந்தச் செய்தி அதிர்ச்சியாகவும், வியப்பாகவும் இருந்தது. அந்தத் தேருக்குப் பொருத்தமான வடம் செய்விக்கின்றதென்றால் குறைந்தது ஒரு லட்சம் ரூபாவாவது வேண்டும்.

"என்ன?........ வடமா.......... தம்பி நீங்கள்
யார்? எங்கேயிருந்து வாறியள்?"

ஆச்சரியத்தினால் அவரது கண்கள் அகலத் திறந்தன.!

"அண்ணை......... நான் வல்வெட்டித்துறை ஆதி கோயிலடியில் இருந்து வாறன்............. அந்த வடம் இப்ப அங்கை தான் இருக்குது.......... நீங்கள் வந்தால் பார்க்கலாம்........."

அவர், அவசர அவசரமாக கூறிவிட்டுத் தன்னுடைய சைக்கிளை எடுத்துக் கொண்டு வந்த வழியே திரும்பி விட்டார்.

அன்று மாலையே ஶ்ரீதரன், பிரதம ஸ்தபதியையும் அழைத்துக் கொண்டு ஆதிகோயிலடிக்குச் சென்றார்.

அங்கே வளைத்து வைக்கப்பட்டு மலைபோல் இருந்த வடத்தைக் கண்டதும், சிறிதரனுக்கும் பிரதம ஸ்தபதிக்கும் உடலெல்லாம் புல்லரிப்பது போல் இருந்தது.

எட்டு அங்குலச் சுற்றளவுள்ளதாகவும், பளபளப்பான நீல நிறத்தில் பார்க்க மிகவும் அழகாகவும் புத்தம் புதிய கயிறாகவும் இருந்தது.

கடலில் இருந்து அந்த வடத்தைக் கொண்டு வந்து சேர்த்த வள்ள உரிமையாளர் நாராயண சாமி வெளியே எங்கோ போய்விட்டதாக அவருடைய மனைவி கூறினார். அந்த வீட்டில் அவருடைய மனைவியும், உறவினர்களும் தான் நின்றார்கள்.

வெளியே புதினம் பார்ப்பதற்கென்றே ஒரு பெரிய கூட்டமே அந்த வடத்தைச் சுற்றி நின்றது.

"இராத்திரி தொழிலுக்குகென்று கடலுக்குப் போனவர்கள்....... ஒரு மீன் கூட வலையிலை படவில்லை. இந்த வடம் தான் கிடைத்தது. இந்தப் பெரிய வடம் எப்படி வலைக்குள்ளை வந்து சேர்ந்தது என்று தான் தெரியேல்லை."

அங்கே, நின்றவர்களில் ஒருவர் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் கூறினார்.

"சரி!.......... எல்லாம் அந்த அப்பனின் திருவிளையாடல் தான்........ இந்த வடத்தைக் கோயிலடியிலை கொண்டு வந்து தாருங்கோ.......... வள்ளத்திலை வாரத்துக்குப் போன ஆக்களுக்குரிய சம்பளத்தை நாங்க கொடுக்கிறம்......"

அளவு கடந்த மகிழ்ச்சியில் கூறிய சிறிதரன், ஒரு வாகனத்தையும் அதற்காக ஒழுங்கு செய்து கொடுத்து விட்டு, அங்கிருந்து விடை பெற்றுச் சென்றுவிட்டார்.

ஆனால், எக்காரணத்தாலோ தெரியவில்லை. அவர்களால் அன்று அவ்வடத்தைக் கோயிலுக்குக் கொண்டு போய்ச் சேர்க்க முடியவில்லை. முதல்நாள் வடத்தைக் கடலில் இருந்து இழுத்து எடுத்து வந்த உரிமையாளர் வழமை போல் அன்றும் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று விட்டார்.

அந்த "மைம்மல்" இருட்டில் ஆழக் கடலில் வலையை வீசிவிட்டு, மீன்களுக்காகக் காத்திருந்தார்கள்........ நேரம் போய்க் கொண்டிருந்தது. வழமையைவிட அன்று காற்றுப் பலமாக வீசிக்கொண்டிருந்தது .......... அந்த வேகத்தில் வலையுடன் போட்டிருந்த கயிறு கழன்று விட்டதும், அதனோடு பிணைக்கப்பட்டிருந்த வலைகளுமே கடலுக்குள் காணால் போய்விட்டன. சுமார் 10,000 ரூபா பெறுமதியான வலைகளும், நீண்ட நைலோன் கயிறுகளும் காணாமல் போய்விட்டதில் வள்ளச் சொந்தக்காரர் நாராயணசாமிக்குத் தாங்க முடியாத துயரம் ஏற்பட்டுவிட்டது.

ஒரு வாரமாகத் தேடியும், அந்த வலைகளும், கயிறுகளும் கிடைக்கவில்லை....... சந்நிதியானின் மீது ஆழ்ந்த பக்தியைக் கொண்டிருந்த நாராயணசாமி, முருகனை நினைத்து நேர்த்திக் கடன் வைத்துவிட்டு அவற்றைத் தேடுவதற்காகக் கடலுக்குள் சென்ற எட்டாம் நாள் அவர்களுக்கு அந்த வலைகளும் கயிறுகளும் அப்படியே கிடைத்தன.

கடலுக்குள் இருந்து, தூக்கி எடுத்து வள்ளத்தினுள் வைத்த நாராயணசாமிக்குக் கண்கள் குளமாகிக்கொண்டு வந்தன.

"முருகா!......... நான் செய்த தவற்றினை உணர்த்துவதற்காக நீ செய்த நாடகமா இது?"

அன்று கடலால் வந்ததும், நாராணசாமி கோப்பி கூடக் குடிக்காது, கிணற்றில் சென்று நீராடிவிட்டு, வடத்தை ஒரு வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சந்நிதி முருகன் கோயிலில் கொண்டு போய் ஒப்படைத்தார்.

ஆம்!......... சந்நிதியான், தனது தேருக்கு வேண்டிய வடத்தைப் பணம் கொடுத்து வாங்கவா வேண்டும் என்று எண்ணியோ என்னவோ, தனது அடியவன் மூலம், அவனது வலையையும், கயிறுகளையும் மறைத்து வைத்துத் தனது வடத்தைப் பெற்றுக் கொண்டான்.

இவ்வாறு வடம் கிடைத்த வரலாறு எரிந்த சித்திரத் தேரில் சிற்பமாக வடிக்கப்பட்டிருந்தது.

## *உயிர்காக்கும் வேலவன்*

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நகர்ந்து கொண்டிருந்தது....... குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள், ஆடு, மாடுகள், நாய் பூனைகள், வண்டில்கள், வாகனங்கள் என்று இப்படியே ஒட்டு மொத்தமாக இடம் பெயர்ந்து கொண்டிருந்த அந்தத் துயரம் தோய்ந்த நிகழ்வுகளை யாழ்ப்பாண மக்களால் ஒரு போதும் மறந்துவிட முடியாது.

அதே போன்று, வடமாராட்சியில் இருந்தும் இடம் பெயரவேண்டிய நிலை ஏற்பட்டதும் தான் அந்தத் துயரத்தின் வடுக்களை எங்களாலும் உணர முடிந்தது.

வீட்டில் இருந்து வெளியேறுவதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கியதும் ஒவ்வொருவர் முகங்களிலும் சோகம் குடிகொள்ளத் தொடங்கியது.

"என்ன அப்பா!.............இவ்வளவு காலமும் குடி இருந்த வீட்டை விட்டு வெளிக்கிடுறதோ?....."

"அந்தக் காட்டுக்குள்ளை எங்கைபோய் இருக்கிறது? யார்தான் எங்களுக்கு அங்கை இருக்கினம்"?

"கொஞ்ச நாளைக்கு வேற இடத்திலை இருந்துட்டுப் பிறகுவருவம்"........ எனது பிள்ளைகளின் ஏக்கம், அவர்களுடைய வார்த்தைகளினுடாக வெடித்துக் கொண்டிருந்தது.

"பிள்ளைகள் !....... அந்தச் சந்நிதி முருகன் எங்களை ஒரு போதும் கைவிட மாட்டான். அவன் எங்களுடன் கூடவே துணை இருப்பான் ஒண்டுக்கும் யோசிக் காதையுங்கே ...... அந்த வேலவன் துணை இருக்கும் வரைக்கும் எங்களுக்கு ஒரு குறையும் வராது....."

நான் உறுதியோடு கூறியதும், எனது மனைவிக்கும் எனது மூன்று பிள்ளைகளுக்கும் ஏதோ ஒரு உத்வேகமும், நம்பிக்கையும் ஊற்றெடுத்தது போல் இருந்திருக்க வேண்டும்.

இயந்திரமாகத் தொழிற்படத் தொடங்கிவிட்டனர். உடுப்புக்கள், புத்தகங்கள், பாத்திரங்கள்....... என்று ஒவ்வொன்றாகத் தேவையான பொருட்களை அடுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

"அம்மா!.... எங்கடை முருகனையும் பிள்ளையாரையும் மறக்காமல் எடுத்து வையுங்கோ............"

ஒரே நேரத்தில் அந்த மூன்று பிள்ளைகளும் இதனைக் கூறியதும்தான் எனக்கு அந்த 'முருகன் சிலை' நினைவுக்கு வந்தது.

சுமார் ஐந்து அங்குல உயரமுள்ள வெண்கலத்தினாலான அழகிய முருகன் விக்கிரகமும், நின்றருள் செய்யும் தோற்றமுடைய விநாயகர் விக்கிரகமும் பலவருடங்களாக எங்கள் வீட்டுப் பூசையறையில் வைத்துப் பூசிக்கப்பட்டு வந்தன.

அண்மையில் சில மாதங்களுக்கு முன்னர்தான் முருகனின் கைவேல் எங்கோ காணாமல் போய் விட்டது. அந்தநிலையிலேயே வேலாயுதம் அற்ற முருகன் எங்கள் பூசை அறையில் இருந்தான் அந்த விக்கிரகங்கள் வந்த பின், எங்கள் காவல் தெய்வங்களாகவே இருந்தமையால் அவற்றையும் நாங்கள் கொண்டு செல்லும் பொருட்களுடன் கவனமாக எடுத்து வைத்தோம்.

எங்களுடைய வன்னிக்கான பயணம் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்டது. எறிகணைத் தாக்குதல்கள், விமானக் குண்டு வீச்சுக்கள், பீரங்கித் தாக்குதல்களின் மத்தியில் நாங்கள் பயணம் செய்த படகு, மரணப் பொறியாக விளங்கிய கிளாலிக் கடலையும் கிழித்துக் கொண்டு விரைந்தது.

அந்த ஒவ்வொரு கணமும் எங்களுடைய உயிர் போய்த்திரும்பி வருவது போல் இருந்தது. எனது மூன்று பிள்ளைகளும் மனைவியும் "முருகா!......... முருகா!....." என்று இடைவிடாது செபித்துக் கொண்டே இருந்தனர்.

என்னுடைய உதடுகள் பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தன.

எப்படியோ ஒருவாறு அந்த மரணப் பொறியைக் கடந்து அக்கரை சேர்ந்ததும்தான் எங்களுக்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது. அங்கிருந்து கிளிநொச்சி மத்திய கல்லூரியில் லொறிகளில் கொண்டு போய் இறக்கி விட்டார்கள்.

புதிய இடம்.....! புதிய மனிதர்கள்!..... எங்கே போவது, யார் வீட்டில் தங்குவது என்று மனங் குழம்பிப் போய் இருந்த எங்களுக்கு ஒரே தவிப்பாக இருந்தது.

"முருகா..... என்ன சோதனையோ? நீதான் ஒரு வழி காட்ட வேண்டும்...."

"அவன்" மீதே எங்கள் சுமைகளை இறக்கி வைத்துவிட்டு அந்தக் கல்லூரியின் ஒரு வகுப்பறையில் குந்தி இருந்து விட்டோம்.

"சேர்.... எப்ப வந்தனீங்கள்?.... நான்
உங்களையும் வருவியள் என்று யோசித்தனான்...."
எனக்கு அருகில் திடீரெனக் கேட்ட குரலால் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்ததும் வியப்பாக இருந்தது.

என்னுடைய மாணவன் லிங்கேஸ்வரன் சிரித்துக் கொண்டே எங்களுக்கு அருகில் வந்து நின்றான்.

"சேர்.... எங்கடை வீட்டுக்குப் போவம்.... அங்கைபோய்க் கதைப்பம்...." அவன் அதிகம் பேசவில்லை. உடனடியாக "ஆட்டோ" வாகனத்தைக் கொண்டு வருவதற்காகப் போய் விட்டான்.

அப்பொழுது, எனது கையில் இருந்த அந்த முருகன் விக்கிரகத்தைப் பார்த்தேன்..... என்னைப் பார்த்துச் சிரிப்பது போல் இருந்தது!

லிங்கேஸ்வரனின் தந்தை கச்சேரியில் நிர்வாக அலுவலராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர்களுடன் சில நாட்கள் தங்கிவிட்டு, மீண்டும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் எனது வேலையைப் பொறுப்பேற்க வேண்டியிருந்ததால் அங்கிருந்தும் பஸ்வண்டியில் புறப்பட்டுச் சென்றோம்.

அங்கேயும் கூட நாங்கள் செய்த நற் காரியங்களோ என்னவோ, நல்ல வசதியான வீடு கிடைத்துவிட்டதில் எங்கள் எல்லோருக்கும் பரம சந்தோஷம்.

இடப் பெயர்வினால் ஏற்பட்ட துயரமே தெரியாத அளவுக்கு அந்த ஊர் மக்களும், ஊரும் எங்களுக்கு நன்றாகப் பிடித்துக் கொண்டது.

புதிதாக வந்து சேர்ந்த வீட்டில், நாங்கள் அமைத்த சுவாமி அறையில் எங்களுடைய முருகன், பிள்ளையார் விக்கிரகங்களையும் வைத்துப் பக்தியுடன் பூசித்து வந்தோம்.

மீண்டும் சில மாதங்களில் பின்னர் அந்த வீட்டில் இருந்து எழும்பி வேறு வீடு மாற வேண்டிய நிலை ஏற்பட்டது. எப்படியோ புதிதாகச் சேர்ந்த நண்பர்களின் உதவியால், அதைவிட இன்னும் வசதியான ஒரு வீடு கிடைத்ததும், எங்கள் உடைமைகளை அந்த வீட்டிற்கு மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது.

அந்த வீடு துர்க்கா வீதி என்று அழைக்கப்படும். அதேதெருவிலேயே, சுமார் இருநூறு மீற்றர் தூரம் தள்ளி இருந்தது.

ஒரு நாள் இரவிலேயே, எங்கள் சைக்கிள் வண்டிகளிலும், மோட்டார் சைக்கிளிலும் பொருட்களை ஏற்றி இறக்கினோம். எல்லாப் பொருட்களும் எடுத்த பின் கடைசியாகச் சுவாமி அறையில் இருந்த பொருட்களை ஒரு பிளாஸ்ரிக் கூடையில் அடுக்கி, அவற்றுக்கும் மேலாக அந்த இரு விக்கிரகங்களையும் கவனமாக வைத்து எனது சைக்கிளில் கொழுவி, உருட்டியபடியே சென்றேன்.

அந்தப் பாதையின் இரு மருங்கிலும் அடர்ந்த முதிரை மரங்களும், பலா மரங்களும் இருந்ததால், ஒரே கும்மிருட்டாக இருந்தது.

வானத்தில் மின்னிக் கொண்டிருந்த நட்சத்திரக் கூட்டங்களின் வெளிச்சம் தான் பாதையை ஓரளவு மங்கலாகக் காட்டிக் கொண்டிருந்தது. நாங்கள் போய்க் கொண்டிருந்த பாதை மேடும் பள்ளமுமாக இருந்ததால் சைக்கிளும் ஏறிக் குதித்துச் சத்தமிட்டுக் கொண்டே வந்தது.

எங்களுடைய புதிய வீட்டை அடைந்ததும், பொருட்களை இறக்கி ஒழுங்குபடுத்தி வைப்பதில் எங்களுடைய பொழுது கழிந்து கொண்டிருந்தது. கடைசியாக எனது கூடையில் இருந்த சுவாமி அறைக்குரிய படங்கள், குத்து விளக்குகள், தீபங்களை எடுத்து வைத்த பொழுது அதற்குள் பிள்ளையார் விக்கிரகம் மட்டும் இருந்தது. அதனுடன் இருந்த முருகன் சிலையைக் காணவில்லை. வரும் வழியில் எங்கோ தவறிவிட்டது.

எங்கள் எல்லோருக்கும் ஒரே அதிர்ச்சியாகப் போய்விட்டது! ஐந்து பேருமே இடிந்து போய் உட்கார்ந்து விட்டோம். இந்தக் கும்மிருட்டில் எங்கேயும் போய்த் தேடிப் பார்க்க முடியாது.

எனக்குக் கையும், காலும் ஓடவில்லை....... எல்லோருமே என்னை ஒரு குற்றவாளியைப் பார்ப்பது போல் நிற்பதாக ஒரு பிரமை! அப்படியே 'ஓவென்று' அழவேண்டும் போல் இருந்தது.

"இதுக்கென்னப்பா யோசிக்கிறியள்? சன நடமாட்டம் இல்லைத்தானை.... விடியப்புறம் எல்லாரும் போய்த் தேடிப் பார்ப்பம்....... எங்கையாவது பாதையிலை இருக்கும்........"

எனது மனைவியின் ஆறுதல் வார்த்தைகளுடன் அன்று எல்லோருமே அரைகுறைத் துயரத்துடன் நித்திரைக்குப் போய் விட்டோம்.

மறுநாள் அதிகாலை, பொழுது புலருவதற்கு முன்பே எல்லோரும் சேர்ந்து அரிக்கன் லாம்புடன் தேடுவதற்காகப் புறப்பட்டு விட்டோம். விடிந்து, சூரியன் உதித்து கதிர்களின் சூடு ஏறும்வரைக்கும் தேடிக் களைத்து விட்டோம்.

அந்த அழகான திருச்செந்தூர்க் கோல முருகன் எங்களுக்குக் கிடைக்கவேயில்லை.

சுவாமி அறையில் முருகன் இல்லாது தனித்து நின்ற பிள்ளையார் விக்கிரகத்தைப் பார்க்கும் போதெல்லாம் எங்கள் ஒவ்வொருவரையும் துயரம் பிழிந்து எடுத்தது.

இப்படியே ஆறு மாதங்கள் போய்விட்டன. நாங்களும் படிப்படியாக அந்தக் கவலையை மறந்து விட்டோம். எங்காவது அதே போன்று ஒரு விக்கிரகம் கிடைத்தால் வாங்க வேண்டும் என்ற ஒரு ஆவல் என்னுடைய மனதில் துளிர்விட்டுக் கொண்டேயிருந்தது.

ஒருநாள், வெள்ளிக்கிழமை அன்று எனது மனைவியும், கடைசி மகளும் கோம்பாவில் காட்டாமணக்கு பிள்ளையார் ஆலயத்தின் இரவுப் பூசைக்காகப் போய் இருந்த பொழுதான் அந்த அற்புதம் நிகழ்ந்தது.!

"அம்மா! அங்கை பாருங்கோ. எங்கடை முருகன் மாதிரி ஒரு சாமி சிலை இருக்குது...."

விநாயகருக்குக் கற்பூரதீபம் காட்டப்படும் பொழுது எனது மகள் விநாயகரின் பீடத்திற்குக் கீழ் பூக்குவியல்களுக்கு மத்தியில் இருந்த ஒரு முருகன் சிலையைக் கண்டுவிட்டு உணர்ச்சி ததும்பக் கூறினாள்.

எனது மனைவி அந்தச் சிலையையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"இல்லை போ...... எங்கடை சிலை மாதிரித்தான் இருக்குது. அது கோயில் சாமியாகத் தான் இருக்கும்.... அந்த முருகன் கையிலை வேல் இருக்குது பார்..."

என்று கூறிக் கொண்டு பூக்களுக்கு மத்தியில் மறைந்தும் மறையாது காட்சி கொடுத்துக் கொண்டிருந்த முருகனை மீண்டும் உற்றுப் பார்த்து விட்டுத் திரும்பினாள்.

"அம்மா!.... ஏன்னை அவசரப்படுறியள்?
இது எங்கடை முருகன்தான் அம்மா.......
ஒருக்கால் ஐயரிட்டைக் கேட்டுப் பாருங்கோவன்"

எனது மகளின் கண்களுக்கு அந்த முருகன் சிலை ஜெகஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

"சரி.... எதுக்கும் ஒருக்கால் குருக்களிடம் இது பற்றிக் கேட்டுப் பார்க்கலாம்....." என்று மனைவி, பூசை முடிந்து எல்லோரும் போனபின் குருக்களிடம் சென்று,

"ஐயா.... இந்த முருகன் சிலை எங்காலை உங்களுக்குக் கிடைத்தது? இது மாதிரி எங்கடை ஒரு முருகன் சிலை, ஆறுமாதத்திற்கு முன் வழியிலை காணாமல் போய்விட்டது...."

எனது மனைவி பணிவாகக் கூறியதும், கோயில் குருக்கள் சிரித்துக் கொண்டே,

"ஓம் பிள்ளை.... ஆறுமாதத்திற்கு முன் வழியிலை கண்டெடுத்ததாக ஒரு பால்காரப் பெடியன் கொண்டு வந்து தந்தவர். அவர்தான் இதற்கு ஒரு அழகான வேலையும் செய்து தந்தவர்...."

குருக்கள் இப்படிக் கூறியதும், எனது மனைவியும் மகளும் ஆச்சரியத்தால் அதிர்ந்து போனார்கள்.

"ஐயா...... இது எங்கடை பூசை அறையிலை வைத்துக் கும்பிட்டு வந்தனாங்கள்...... இதை எங்களிட்டைத் தருவியளோ?..... நாங்கள் கோயிலுக்கு ஏதாவது செய்யிறம்".

"பிள்ளை! கோயிலுக்கு வந்த பொருட்களைத் திருப்பிக் கொடுப்பதில்லை. எதற்கும் நாளைக்கு ஆலய அறங்காவல் குழுக் கூட்டம் நடைபெறும். அதிலை தீர்மானித்துத் தரலாம். என்று ஆலயக் குருக்கள் சொல்லிவிட்டுத் திரும்பினார்.

நாளை விடிந்தால், செல்வச் சந்நிதி முருகனின் கொடியேற்றம்.... .. அதற்கு முதல்நாள் தன்னுடைய உற்சவத்தை நினைவூட்ட அந்த முருகன் ஆடிய திருவிளையாடலை நினைந்து அவனை வணங்கி விட்டு இருவரும் திரும்பினார்கள்.

மறுநாள் காலையிலே அறங்காவல் குழுக்கூட்டத்தின் முடிவுக்கு அமைய, ஆலயத்திற்குப் பெரியகல்வனைசு வாளி ஒன்றை வாங்கித் தருமாறு கூறி, அந்த வேல் ஏந்திய அழகிய முருகனை எனது மனைவியின் கையில் கொடுத்து விட்டுத் திருநீறு போட்டு ஆசி கூறினார்.

செல்வச் சந்நிதி கொடியேற்ற நாள் அன்று, அந்தப் புனிதமான நாளில் காணாமல் போன முருகன் வேல் தாங்கியவனாக எங்கள் வீடு வந்து சேர்ந்தது எங்கள் எல்லோருக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

ஆம்... தொலைந்து போன தன் வேலை நாங்கள் போடாதிருந்த குறையை உணர்த்தி, மீண்டும் அந்த முருகன் எங்களிடமே வந்து சேர, அவன் ஆடிய நாடகத்தை நினைத்து எங்கள் உடல் சிலிர்த்தது.

# பொன்னாகும் பூவரசு

செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடமாடி, அருள் ஆசி வழங்கும் முருகேசு சுவாமிகளிடம் சென்று, அவரது கையினால், சந்நிதி விருட்சமாக விளங்கும் புனித பூவரசு மரத்தின் உதிர்ந்த பழுத்த இலைகளைப் பெற்றுச் சென்று பக்குவப்படுத்தும் அடியவர்கள் பலர் இருக்கின்றார்கள்.

கரவெட்டி கரணவாய் வடக்கில் வாழ்ந்து வரும் பொன்னம்பலத்தின் மனைவி ஒரு முருக பக்தை. இவர் பதினைந்து வருடங்களுக்கு முன், திருமணம் முடிக்காத ஒரு இளம் யுவதியாக இருந்த காலத்தில் சந்நிதி கோயிலுக்குப் போய்வரும் போதெல்லாம் முருகேசு சுவாமிகளிடம் இருந்து, அந்தப் புனிதம் நிறைந்த பூவரசம் இலையைப் பெற்று வீட்டில் சுவாமி அறையில் வைத்துப் பத்திரப்படுத்திப் பூசித்து வருவார்.

காலம் செல்லச் செல்ல அவளுடைய சுவாமி அறையில் நிறைய இலைகள் சேரத் தொடங்கி விட்டன.

அந்தப் பெண்ணின் செயலைப் பார்த்த அக்கம் பக்கத்தில் இருக்கும் பெண்கள், அவளைப் பார்த்துக் கேலி செய்யத் தொடங்கி விட்டனர்.

"என்னடி....! உனக்குப் பைத்தியமோ ?... தெருக் குப்பைகளையெல்லாம் பொறுக்கிக் கொண்டு வந்து இப்படிப் பத்திரப்படுத்தி வைக்கிறாய்... ஏன், தோட்டத்திற்கு உரம் போடப் போறியோ ?"

"ஏண்டி...? இது உனக்கு என்ன பணத்தை வாரிக் கொட்டப் போகுதோ?"

அவர்களுடைய கேலியும், குத்தல் பேச்சுக்களும் அந்தப் பெண்ணின் மனதை நோகச் செய்து விட்டன.

"முருகா ! .... என்ன இது... எல்லாரும் இப்படி என்னைக் கேலி செய்கிறார்களே... உன்னுடைய பெருமையை அறியாமல் இப்படிப் பழிக்கிறார்களே!... முருகா .....:"

மனம் வருந்தி வேதனைப்பட்ட நிலையில்தான் சுவாமி அறையினுள் சென்று அங்கே பத்திரப்படுத்தி வைத்திருந்த பூவரசம் இலைகளைக் கண்களில் ஒற்றிக் கண்ணீர் விட்டு அழுது தொழுதாள்.

சிறிது நேரம் அமைதியாக நின்று கந்த சஷ்டி கவசத்தை மனமுருகப் பாடிக் கொண்டிருந்தாள்.

கந்த சஷ்டி கவசத்தைப் பாடிக் கொண்டிருக்கும் போதே நெஞ்சில் இருந்த பாரம் சிறிது சிறிதாகக் குறைந்து வருவது போல் இருந்தது.

அந்த நிறைவுடனேயே அன்று பிற்பகல் சந்நிதிக்குச் சென்ற அந்தப் பெண்ணைக் கோயில் வாசலிலேயே கண்டுவிட்டு முறுவலித்த முருகேசு சுவாமிகள்,

"எனக்குத் தெரியும் நீ இன்றைக்கு இங்கு வருவாய் என்று....."

அந்தப் பெண்ணுடைய மன வாட்டத்தையும் கலக்கத்தையும் மானசீகமாகவே அறிந்த முருகேசு சுவாமிகள் ஆச்சரியப்படவில்லை.

"பிள்ளை !... ஏன் இப்படி அவநம்பிக்கை கொள்கிறாய் ?.... எங்கே பக்தியும் பரவசமும் இருக்கின்றதோ... அங்கெல்லாம் அதற்கு எதிரான கருத்துக்களும் கண்டனங்களும் இருக்கத்தான் செய்யும்... மாயை இருளில் கிடந்து உழலுகின்ற மனித ஆத்மாக்களுக்கு ஞானத்தைக் காட்டுவதும் அற்புதங்களைச் செய்து மெய்மையை உணரச் செய்வதும் தானே இந்தக் குமரனின் விளையாட்டு....."

முருகேசு சுவாமிகள் அமைதியாகச் சிரித்துக் கொண்டே சந்நிதி கோயிலின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலய வாசலுக்குக் கூட்டிச் சென்றார். அந்த மண்டபத்துடன் ஓங்கி வளர்ந்து நின்ற பழமை வாய்ந்த பூவரச விருட்சத்தைச் சில வினாடிகள் அண்ணாந்து உற்று நோக்கினார்.... அப்பொழுது அந்த மரத்தில் இருந்து பழுத்து மஞ்சள் பூத்த பூவரசம் இலை ஒன்று அவர் முன்னால் வந்து விழுந்தது !

அவர் முருகனின் 'சரவணபவ' மந்திரத்தை உச்சரித்த படியே அந்தப் பழுத்த பூவரசம் இலையை எடுத்து அந்தப் பெண்ணின் கையில் வைத்தார்.

சிறிது நேரத்தில் அந்தப் பெண் கைகளை விரித்துப் பார்த்ததும், அவளுடைய கைகளில் புத்தம் புதிய ஐம்பது ரூபா நோட்டுப் பளிச்சென்று ஒளி வீசிக் கொண்டிருந்தது.

அந்தப் பெண்ணின் கண்களையே அவளால் நம்ப முடியவில்லை!... வியப்புடன் தனது கையில் இருந்த நோட்டையும் முருகேசு சுவாமியையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டாள்...

"முருகா ! ... என்னே உன் கருணை ?... சுவாமி ! ... என் மனக்குறையை குறிப்பால் அறிந்து போக்கி என்னைத் தலைநிமிர்ந்து வாழ வைத்து விட்டீர்கள்...."

மனதில் இருந்த சுமை நீங்கிப் புதிய உணர்வு பெற்ற அந்தப் பெண், முருகேசு சுவாமியை வணங்கி விட்டுச் சந்நிதி முருகனின் தூபியை நோக்கிக் கரம் குவித்தாள்.

அவளுடைய உடல் சிலிர்த்துக் கண்களில் இருந்தும் கண்ணீர் வழிந்தோடியது. உட்சுற்றுப் பிரகாரத்தைச் சுற்றி வணங்கி விட்டு வீட்டிற்குச் சென்றாள்.

அந்தச் சம்பவத்தின் பின், சில நாட்களில் திருமணம் நடந்து முடிந்து, முருகன் அருளால் அடுத்தடுத்து ஐந்து குழந்தைகளும் பிறந்தன.

ஆம் !.... அவள், தனது மனம் நிறைந்த கணவனுடனும் பிள்ளைகளுடனும் சந்தோஷமாகவும் செல்வச் செழிப்புடனும் வாழ்ந்து வருகின்றாள்.

## உணர்த்தும் உள்ளம்

தன்னை அண்டியவர்களுக்கு அருள் புரிந்து காக்கும் முருகன் சில சந்தர்ப்பங்களில் தன் அடியவர்களையே, சோதனைக்காளாக்கியும் வருகின்றான்.

முருகனை மறந்து, அவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை உதாசீனம் செய்தாலோ உரிய நேரத்தில் நிறைவேற்றத் தவறிவிட்டாலோ அவர்களுக்குரிய தண்டனையும் வழங்கி அவர்களை உணரவைத்தும் விடுவான் என்பதற்குத் தில்லையம்பலம் என்ற ஒரு முருக பக்தரின் வாழ்வில் நடந்த சம்பவம் ஒரு பாடமாகும்.

தவறுகள் செய்பவர்களையும் தன்னை மறந்து திரிபவர்களையும் உணர வைத்து, அவர்களை மிக நெருங்கிய அடியவர்களாகவே மாற்றி விடுகின்ற முருகனின் திருவிளையாடல்களும் அற்புதமாக இருக்கும்.

1983ம் ஆண்டில் இலக்கணாவத்தை, உடுப்பிட்டியைச் சேர்ந்த தில்லையம்பலம் ஒரு வாடகைக் கார்ச் சாரதியாக இருந்து தொழில் பார்த்து வந்தார்.

அவருக்குத் தெரிந்த முருகன் அடியவர் ஒருவர் அவரிடம் வந்து,

''தில்லையம்பலம் !.... நாளைக்குச் சந்நிதியிலை ஒரு அன்னதானம் செய்யப் போறம். இந்தச் சாமான்களைக் கொண்டு போய் ஒருக்கால் சந்நிதியின் ஆச்சிரமத்திலை பறித்து விட்டு வரவேணும்.....'' என்று கூறினார்.

தில்லையம்பலமும், தான் அவற்றைக் கொண்டு போய்ச் சேர்ப்பதாகக் கூறிவிட்டு, வீட்டிற்கு வந்ததும், யாழ்ப்பாணம் செல்வதற்கான *'ஓட்டம்'* வந்ததும் சந்நிதியான் ஆச்சிரம மடத்தில் அன்னதானப் பொருட்களைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும், என்ற அந்தப் பணியை யோசிக்கவில்லை.

''யாழ்ப்பாணம் போய் வந்தால் ஒரு ஆயிரம் ரூபா தேறும்... இதைப் பின்னேரமும் கொண்டு போய் மடத்திலை கொடுக்கலாம் தானே ....''

''முருகன் காரியமப்பா..... பிந்திக் கிந்திப் போனாலும்..... இதை அங்கை இறக்கிட்டு வாங்கோவன்......''

அவருடைய மனைவிக்கு இது ஒரு பெரிய குறையாக இருந்தது.

''நான் போறதும் வாறதுமா உடனே வந்து விடுவன். வீணாக வந்த ஓட்டத்தை விடக்கூடாது...... எப்பிடியும் இண்டைக்குக் கொடுத்திடுவன்.....'' தில்லையம்பலம் சிறிது சினந்துகொண்டே கூறியபடி, தனது வாகனத்தை எடுத்துக் கொண்டு யாழ்ப்பாணம் புறப்பட்டுவிட்டார்.

அவரது வேகம், வாகனத்தில் தெரிந்தது ! ..... யாழ்ப்பாணத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்த வாகனம் கோப்பாயை நோக்கிச் செல்லும் பொழுது, சந்திக்கு முன்னால் இருந்த, ஒரு வளைவில் திரும்பவும் இரண்டு நாய்கள் சண்டை பிடித்துக் கொண்டு குறுக்கே பாய்ந்தன.

திடீரென அவை இப்படிப் பாய்ந்ததும் அதிர்ச்சியடைந்த தில்லையம்பலத்திற்கோ சடுதியாகக் கை உதறத் தொடங்கி விட்டது. வாகனத்தை வெட்டி எடுத்ததும், அது எதிரே உள்ள சுவருடன் மோதித்தலை குப்புறக் கவிழ்ந்து விட்டது.

*''முருகா...! என்னைக் காப்பாற்று....''*

அந்த நேரம் அவரால் எதுவுமே செய்ய முடியவில்லை.

அந்தச் சந்நிதிக் குமரனையே கூவி அழைக்க முடிந்தது..... அருகே அயலில் நின்றவர்கள் எல்லோரும் ஓடிவந்து மெதுவாக வாகனத்திற்குள் இருந்தவர்களை வெளியே இழுத்து எடுத்து, கவிழ்ந்து இருந்த வாகனத்தையும் நிமிர்த்தி விட்டனர்.

"நல்ல வேளை சேதமில்லாமல் தப்பி விட்டியள். ஏதோ அந்த முருகன் செயல்தான்..."

இவ்வளவு பெரும் விபத்துக்குள்ளாகியும் அந்த வாகனத்தில் இருந்த ஆட்களுக்கு எவ்வித ஆபத்தும் இல்லாது தப்பிப் பிழைத்தது எல்லோருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. தில்லையம்பலமும் காரில் இருந்தவர்களும் சிறு காயங்களுடன் தப்பி விட்டனர்.

அந்த வாகனத்தை மீண்டும் திருத்தி அமைக்க அவருக்கு இரண்டாயிரம் ரூபாவுக்கு மேல், செலவாகி விட்டது....

"முருகனை உதாசீனம் செய்து, ஒரு ஆயிரம் ரூபா லாபத்தைப் பார்த்த எனக்கு அவன் இருமடங்காகத் தண்டனையைத் தந்து உணர்த்தி, என்னையும் காப்பாற்றி விட்டான்".

மெய்சிலிர்க்கக் கூறிய தில்லையம்பலம் அன்று தொடக்கம் முருகன் அடியவனாகவே மாறி, ஆச்சிரமத் தொண்டுகளைப் புரிந்து வரத் தொடங்கி விட்டார்.

## நெற் குவியலில் விக்கிரகம்

பருத்தித்துறையின் குழந்தை வைத்தியர் டாக்டர் பத்மநாதனின் குடும்பத்தில், "சந்நிதி மண்" திருநீறாக மாறிய அந்த அற்புதம் நடந்தது. சில வருடங்களில் அவரது குடும்பத்தினர் ஒருநாள் வீட்டில் இருந்து பேசிக் கொண்டிருந்தபோது முருகேசு சுவாமிகளும் அவர்களுடன் கூடவே இருந்து இறைபக்தியைப் பற்றி அளவளாவிக் கொண்டிருந்தார்.

"சுவாமி !... இறை பக்தியினால் தீர்த்தம், விக்கிரகங்கள் போன்றவற்றைக் கூடப் பெற்றுக் கொள்கின்றார்களாமே... எங்களுக்கு அப்படி ஒன்றும் கிடைக்கவில்லை......"

வீட்டு விறாந்தையில் இருந்து நெல்லைப் புடைத்துக் கொண்டிருந்த அந்தப் பெண்ணின் உள்ளத்திலே எழுந்த ஆவலை அடக்க முடியவில்லை....

"மகள் ! ..... முருகனை முறைப்படி தியானித்து, அவனையே சதா நினைப்பவர்க்கு வேண்டுவன ஈபவன் அல்லவா? உனக்கு ஏன் இந்தச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது...?"

முருகேசு சுவாமிகள், பத்மநாதனின் மனைவியைப் பார்த்துதுக் கொண்டே சில கணம் கண்களை மூடியபடி தியானித்தார்.

"சுவாமி !..... எனக்கு ஒரு விக்கிரகம் வேண்டுமே....." அந்தப் பெண்ணின் பக்தி உணர்வுகள் பல மடங்காக அதிகரித்தது....

"அம்மா !... மகள் !.... உன் கண்களை மூடிக் கொண்டு இரு கைகளாலும் நெற் குவியலைப் பொத்திக் கொண்டு அந்தச் சந்நிதி முருகனையே மனதில் நிறுத்தி, அவனிடமே வேண்டுதல் செய். உன் ஆசை நிறைவேறும்".

ஆவல் கரைபுரண்டோட அந்தப் பெண், சுளகில் இருந்த நெல்லை ஒன்று கூட்டிக் குவிக்கத் தொடங்கினாள்.

"கொஞ்சம் பொறு !......"

முருகேசு சுவாமிகளின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஒரு கணம் துணுக்குற்ற அந்தப் பெண், அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

"நீ முருகனையே நினைந்து அவனை வேண்டுதல் செய்...... அவன் தன் தாயாகிய அம்பாள் சிலையையே தந்து அருளுவான்... அதனை முறைப்படி கோயில் வைத்துப் பூசித்தும் வரவேண்டும்......"

முருகேசு சுவாமிகள் எழுந்து நின்று கண்களை மூடியபடி தியானித்தார்.

அந்தப் பெண் நெஞ்சு படபடக்க நெல் குவியலைக் கைகளால் மூடி, முருகனையே நினைந்து, நினைந்து வேண்டிக் கொண்டிருந்தாள்.

சில நிமிடங்களில் கண்களைத் திறந்து கைகளைத் தூங்கியபோது, அங்கே, நெற் குவியல் இருந்த இடத்தில், ஒரு சிறிய கைக்கு அடக்கமான அழகான அம்மன் சிலை பளபளத்துக் கொண்டிருந்தது.

"முருகா ! ..... தாயே !...... என் குலதெய்வமே !...... எங்களை வாழ்விக்க வந்த கருணைக்கடலே......"

ஆனந்தப் பரவசத்தால், அந்தப் பெண் முருகனை ஆடிப்பாடித் தொழுதாள்.

அன்று முதல் அந்த அம்மனுக்குச் சிறிய கோயில் ஒன்றை அமைத்து வழிபடத் தொடங்கினார்கள். இன்றும் பருத்தித்துறையில் உள்ள, செட்டி வீதியிலுள்ள அவர்களது சொந்தக் காணியில் உள்ள அந்தக் கோயிலில் பூசித்து வரப்படும் அம்மன் சக்தி வாய்ந்த அன்னையாக அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

## *மனக்குறை தீர்ப்பான்*

பொலிகண்டி, கந்தவனக் கடவை, வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு முருகன் ஆலயம்.... அங்கே மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் அமைந்துள்ள அமைதியும் சாந்தியும் நிலவும் சூழலாக அது இருக்கின்றது !

செல்வந் சந்நிதி கோயிலில் இருந்து கிழக்கே மூன்று கிலோமீற்றர் தொலைவில் கந்தவனக் கடவை அமைந்துள்ளது.

அந்தக் கந்தவேள் கோட்டம் புனிதமும் அற்புதங்களும் நிறைந்த ஒரு தலம் !

நடராசா தன் தந்தையின் வழிப் பாரம்பரியத் தொடர்பினால் அந்த ஆலயத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பவர். திருவெம்பாவைக் காலம் தொடங்கி விட்டால், தினமும் அதிகாலையிலேயே குளித்து, தோய்த்து உலர்ந்த வஸ்திரமும் அணிந்து சிறுவனான கந்தசாமியையும் கூட்டிக் கொண்டு கோயிலுக்கு வந்து விடுவார்.

அவருக்கும் அங்கே ஒருநாள் பூசை உபயம் இருக்கின்றது... அந்த நேரம் உள்ள தனது பொருளாதாரக் கஷ்டத்தின் மத்தியிலும் அதனை ஒரு பெரும் பேறாகச் செய்து வந்தார். அவரைத் தொடர்ந்து அந்தப் பூசையைப் பொறுப்பேற்றுச் செய்து வருகின்றார் அவரது மகனான கந்தசாமி.

"அம்மா !..... இந்த முறை பூசைக்கு நிறையப் பணம் கொடுக்க முடியவில்லை... ஏதோ, என்னால் முடிந்த அளவுக்குச் சேர்த்து ஆயிரத்து ஐநூறு ரூபாவைத் தருகிறேன்..... ஏதோ செய்து முடித்து அருமைக்குக் கொஞ்சம் பிரசாதம் தந்தால் போதும்..... அயல் வீடுகளுக்கு முருகன் பேரினால் கொடுக்கவாவது......"

கந்தசாமி மிகவும் பணிவோடு கூறியபடி, அந்த ஆலயத்தின் முகாமையாளரான ஆச்சியிடம் பணத்தைக் கொடுத்தார்.

அந்த நேரம் அந்த ஆச்சியின் முகத்தில் இருந்த குதூகலம் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது.

"என்ன ஆயிரத்து ஐநூறோ.....?"

அவவுடைய உதடுகள் வெறுப்பைக் கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தன.

மார்கழி மழையும் கடுங்குளிருமாக இருந்த அந்தக் காலைப் பொழுதில் பூசை முடிந்த கையோடு, அந்தப் பணத்தைக் கொடுத்து விட்டுத் திரும்பிய கந்தசாமியின் இதயம் கனத்துக் கொண்டிருந்தது.

"முருகா ! .... எவ்வளவு காலத்திற்குத்தான் எங்களை இப்படிக் கஷ்டத்திற்குள்ளை வைத்துப் பார்க்கப் போகிறாய்....? உனது சோதனைக்குத்தான் ஒரு முடிவே இல்லையா ?"

அந்த ஆலயத்தின் முன்னால் வந்து நின்று மூன்று தரம் தன்னைத்தானே சுற்றி முருகனை வணங்கி விட்டுத் திரும்பினார்.

ஆலயத்தையும் மூலமூர்த்தியையும் சுற்றி வலம் வந்து வணங்குவதற்குப் பதிலாக மனிதர்கள் தம்மைத் தாமே சுற்றி வணங்கும் முறைகூட இந்துப் பாரம்பரியத்தில் வளர்ந்து வந்திருக்கின்றது.

*"உள்ளம் பெருங்கோயில்*
*ஊனுடம்பு ஆலயம்*
*வள்ளல் பெருமானார்க்கு*
*வாய் கோபுர வாசல்"*

என்ற திருமூலர் வாக்கிற்கேற்ப மனித உடலே கோயிலாக உருவகிக்கப்படுவதாலோ என்னவோ ஒவ்வொரு மனிதரும் தன்னையே இறைவனாக் கருதுகின்றனர் போலும்.

மறுநாள் வழமை போலவே பூசை முடிந்து வீட்டில் வந்து பூசைப் பெட்டியைத் திறந்து பார்த்ததும் கந்தசாமிக்கு ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது.

அதனைப் பார்த்துக் கொண்டு நின்ற அவரது மனைவிக்குத் திகைப்பாக இருந்தது ! அந்த நிலையைச் சமாளிப்பதற்காக,

"என்னப்பா ! ...... மனேச்சரம்மா, ஒரு பலகாரப் பிரசாதம் கூட வைக்காமல் விட்டு விட்டாவே...... ம்....... சரி, சரி..... ஏதோ இந்த முறை செலவு கூடிட்டுது போல கிடக்கு...... அயல் வீட்டுக்காரச் சனங்கள் எங்கடை பூசையென்றதாலை ஏதும் பிரசாதம் வரும் என்று நினைப்பார்களே ......"

ஏதோ ஒரு சமாதானத்தைக் கூறி அந்த நேரம் ஏற்பட்ட மனக்குறைக்கு ஒரு ஆறுதலை வழங்கி விட்டுத் திரும்பினார்.

"சே !.... எங்கடை ஊர்ப் பிள்ளையார் கோயில்லை ஒரு இருநூறு ரூபா பூசைக்குக் கொடுத்தால் எவ்வளவு வடை, மோதகம், சர்க்கரை அமுது, முறுக்கு எல்லாம் ஒரு தாம்பாளத்திலை தருவினம்..... இது என்னண்டால்......"

எனது மனைவி தனக்குள்ளாகவே புலம்பிக் கொண்டிருந்தாள். இதை வாய் திறந்து பெரிதாகக் கூறவும் அவள் விரும்பவில்லை.

*"கோயிலுக்குக் கொடுப்பதில்*
*லாப நட்டம் பார்த்தால் பாவம்....."*

என்று கந்தசாமி அடிக்கடி சொல்லிக் கொள்வது அவளுக்கும் தெரியும்.

என்ன இருந்தாலும் அன்று அவரது மனம் ஏதோ அவரை அறியாமலேயே சங்கடப்பட்டுக் கொண்டிருந்தது.

கோயில் பூசைப் பலகாரங்கள் என்றால் அக்கம், பக்கத்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் சிறிது மருந்தாகவேனும் கொடுத்து உண்பதில் ஒரு திருப்தியும் புண்ணியமும் கிடைக்கும் என்பதைப் பலர் சொல்லக் கேட்டும் அனுபவித்தும் வந்துள்ளபடியால் அந்தச் சுமையே அவனை அமுத்தியது.

அவரது மனம் அன்று காலையில் இருந்தே முருகனை நினைத்து வருந்திக் கொண்டிருந்தது....

அன்று எனது வேலையை நேரத்துடன் முடித்து விட்டு நண்பகலுடன் வீட்டுக்கு வந்து சேர்ந்த கந்தசாமி சந்நிதி முருகனைத் தியானித்தபடியே பாயை விரித்து அதில் சாய்ந்து கொண்டார்.

"ஐயா !..... ஐயா !....."

மனமும் உடலும் களைத்துப் போன நிலையில் அப்படியே அசதியினால் சிறிது கண்ணை மூடி உறக்கத்திற்குப் போய்க் கொண்டிருந்தார்.

திடீரென வாசல் புறமாகக் கேட்ட குரலினால் திடுக்குற்று எழுந்து வாசலை நோக்கி ஓடினார்.

"ஐயா !.... இந்தப் பார்சலை, தம்பிஐயா உங்களிட்டைக் கொடுக்கச் சொன்னார்....."

அவரது வீட்டுத் தலை வாசலில், சிரித்த முகத்துடன் நின்ற அந்த இளைஞனை அவரால் அடையாளம் காண முடியவில்லை. வேட்டியும் வெள்ளைச் சேட்டும் அணிந்திருந்தான். நெற்றியில் திருநீற்றுப் பூச்சுடன் சிரித்தபடி நின்றான்.

"எந்தத் தம்பிஐயா ?......"
கந்தசாமி எதுவுமே புரியாத நிலையில் குழம்பிக் கொண்டிருந்தார்.

"செல்வச் சந்நிதி கோயிலில் பூசை வைக்கிற சிவசண்முகம் ஐயாதான்.....
உங்களிட்டை இதைக் கொடுத்து விட்டு வரச் சொன்னவர்...."

அந்த இளைஞன், கந்தசாமியின் நீட்டிய கைகளில் அந்தப் 'பார்சலை' வைத்து விட்டு, அவருடைய பதிலுக்குக் கூடக் காத்திருக்காது சென்று விட்டான்.

அந்தப் பென்னம்பெரிய பொதியை, வாங்கி வீட்டிற்குள் கொண்டு வந்து அவிழ்த்துத் திறந்து, அந்தப் பார்சலில் இருந்த பலகாரங்களைக் கண்டதும் அவரது கண்கள் ஆச்சரியத்தால் அகலத் திறந்தன !

*"முருகா ! ...... சந்நிதி வேலவா !.....*
*என்னே உன் கருணை..... "*

கண்களில் கண்ணீர் சொரிந்த நிலையில், சந்நிதிக் கந்தனின் அற்புதத்தை நினைத்து நினைத்து உருகி நின்ற அவரால் அவரது கண்களையே நம்பமுடியவில்லை.

"சொர்ணம் !.... சொர்ணம் !...." இங்கை வந்து பாரேன்....."


அடுக்களையில் நின்ற அவரது மனைவி ஓடிவந்து அந்தப் பார்சலைப் பார்த்ததும் ஒரு கணம் விக்கித்து நின்று விட்டாள் !

ஆம் ! ..... அந்தப் பொதியினுள் இன்று சந்நிதிக் கந்தனுக்குப் படைத்த பிரசாதங்கள்...... ஏராளமான அவித்த மோதகங்கள், பொரித்த மோதகங்கள்,

வடைகள், பச்சை அரிசி அமுதும் பயற்றுக் கறியும், சர்க்கரை அமுது, முறுக்கு ...... என்று பல ரகங்களிலும் நிறைய இருந்தன.....!

அவற்றைக் கண்டதும் கந்தசாமியின் உரோமங்கள் சிலிர்த்துக கொண்டு வந்தன! ..... கண்களில் இருந்தும் கண்ணீர் பொல பொல வென்று வந்து கொண்டிருந்தது.

அவற்றைப் பூசை அறையில் கொண்டுபோய் வைத்து தீபத்தைக் காட்டி முருகனை வணங்கி விட்டு, அயலவர்கள், உறவினர்களுக்கெல்லாம் மனம் போலக் கொடுத்து விட்டு வந்த கந்தசாமியின் உள்ளம் நிறைந்திருந்தது.



பல லட்சம் ரூபா செலவில் பல மனித உழைப்புக்களில் உருவான சித்திரத்தேர் வெள்ளோட்டத்திற்கு தயாரான நிலையில் (1985)

# 14 சந்நிதியின் அதிகரித்துவரும் ஆகமச் சாயல்கள்

செல்வச் சந்நிதிக்கே உரித்தான, அதன் சில விசேட தன்மைகளினால் சந்நிதியின் புகழ் பரவியுள்ளது என்பதை அங்கே வந்து போகும் பக்தர்களின் உணர்ச்சி வெளிப்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

சந்நிதிக்கெனத் தனித்துவமாகக் காணப்படும் சில பண்புகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. வாய்கட்டி, மந்திரமின்றி, தலையில் கண்டயமாலையும், பட்டு வஸ்திரமுமாக இயற்கை நெறிக்குள் அமைந்த வழிபாட்டு மரபு.
2. ஆகம நெறிக்குட்படுத்தப்பட்ட சிற்ப வேலைகள் கொண்ட கட்டிட அமைப்புக்களோ, கோபுரங்களோ தூபிகளோ அல்லது விமானங்களோ அற்ற ஆலய அமைப்பு. இது மடாலய வகைளைச் சேர்ந்தது.
3. சந்நிதியுடன் சேர்ந்த ஆற்றங்கரையின் அமைதியான சூழல்.
4. சந்நிதிச் சூழலில் பரவியிருந்து பணியாற்றிய மடங்களும், சத்திரங்களும்.
5. திராவிட முறையில் அமைந்த இயற்கையான பூசை முறைகள்.

இவ்வாறு வேறு ஆலயங்களின் சூழலில் காணமுடியாத தனித்துவமான பண்புகளைக் கொண்டமையினாலேயே செல்வச் சந்நிதி பல்வேறு சமூகக் குழுமங்களின் மத்தியிலும் தனித்துவமான ஒரு ஆலயமாக விளங்குகின்றது.

சந்நிதியின் தனித்துவமான வழிபாட்டு மரபில் இருந்தும், படிப்படியாக ஆகமம் சார்ந்த வழிபாட்டுமுறைகள் இன்று கலக்கப்பட்டு வருவதையும், சில வைதீகக் கிரியைகள் இடம் பெற்று வருவதையும் அண்மைக்கால வழிபாட்டு முறைகள் எடுத்துக்காட்டுகின்றன.

## *அதிகரித்து வரும் ஆகமச்சாயல்கள்*

சந்நிதியில் மருவி வரும் ஆகம முறையில் அமைந்த சாயல்களில் சிலவற்றைப் பின்வருமாறு குறிப்பிட்டுக்கூறலாம்.

1. சங்காபிசேகம், உருத்திராபிசேகம் போன்ற வைதீகக் கிரியைகள் சந்நிதியில் நடைமுறையில் கொண்டுவரப்பட்டமை.
2. ஆகம நெறியில் அமைந்த சிற்ப வேலைப்பாடுகளையுடைய கோயில் அமைப்பு படிப்படியாக மாற்றப்படுதல்.

3. விக்கிரகங்களின் பிரதிட்டையும் அவற்றுக்கான பூசை வழிபாடுகளும் ஏற்படுத்தப்படுதல்.
4. எண்ணெய்க் காப்புச் சார்த்துதலும், மண்டலாபிசேகமும்.
5. புராண படனங்கள் படிக்கப்படுதல்.

1983ஆம் ஆண்டில் இருந்து தொடரும் யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்கள் எதுவுமே செய்ய முடியாத கையறு நிலையில் இறைவனிடமே பூரண சரணாகதியை அடைந்தனர்.

## *பூரணசரணாகதி*

பூரண சரணாகதி என்பது இந்து மதத்தில் முக்கியமான ஒரு கோட்பாடாகக் கருதப்படுகின்றது. இறைவனிடம், தன்னை முழுமையாக ஒப்படைத்து, இறைவனின் சக்தியிலேயே பூரண நம்பிக்கையை வைத்து அவனையே வழிபடுவது பூரண சரணாகதி ஆகும். செல்வச்சந்நிதியின் பக்தர்கள், அவன் மீதே பூரண நம்பிக்கையை வைத்துச் செயற்படவதைக் காணலாம். அதனாலேயே முருகனின் அருட் காடாட்சம் அவர்களுக்கு கிடைத்து வருகின்றது.

இதற்கான ஒரு உதாரணமாக மகாபாரதத்தில் பாஞ்சாலிக்கும், கிருஷ்ணனுக்கும் இடையில் உள்ள பக்திநிலையைக் குறிப்பிடலாம். துரியோதனனின் சபையில், பாண்டவர்களின் முன்னிலையில், துச்சாதனனால் பாஞ்சாலியின் துகில் உரியப்படுகின்றது. அப்பொழுது தன் மீது நம்பிக்கை வைத்த பாஞ்சாலி, தன் கைகளினால் மார்புச் சேலையை இறுக்கிப் பிடித்தபடி "கிருஷ்ணா!..... கிருஷ்ணா!........" என்று அபயக்குரல் எழுப்பியபடி நின்ற போதும், துகில் படிப்படியாகக் களையப்பட்ட பொழுதும் இறுதியில் பாஞ்சாலியினால் எதுவுமே செய்ய முடியாத நிலையில் தன் இரு கரங்களையும் உயர்த்தி "கிருஷ்ணா காப்பாற்று" என்று அபயம் எழுப்பிய போதுதான் அவளுடைய துகில் வளரத் தொடங்கியது. இது மகாபாரதத்தில் நிகழ்ந்த ஒரு பூரண சரணாகதியாகும். பாஞ்சாலி கிருஷ்ண பரமாத்மாவின் மீது நம்பிக்கை வைத்து, தன்னையே அந்த இறைவனிடம் கையளித்த போதே பகவானின் அருள் அவளுக்குக் கிடைத்தது. அதே போன்று சந்நிதியானிடம் பூரண சரணாகதியை அடைபவர்களை அவன் என்றும் காத்து வருவான்.

## *வைதீகக் கிரியைகள் முக்கியம் பெறுதல்*

இலங்கையில் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தக் கெடுபிடிகளுக்கும் மத்தியில், எதிர் நின்று முகம் கொடுக்க முடியாது அல்லலுறும் சாதாரண மக்களால் "முருகா!......காப்பாற்று" என்று அபயம் எழுப்புவதைத் தவிர

வேறு எதைத்தான் செய்ய முடியும்? இந்த நிலையில் இராணுவ அனர்த்தங்களில் இருந்து மீண்டெழுந்தவர்கள், கடும் நோய்களில் இருந்தும் சுகமடைந்தவர்கள், பொருளாதார சுமையில் இருந்தும் ஆறுதல் பெற்றவர்கள், தடைப்பட்ட திருமணங்கள் நிறைவேறி நிம்மதி அடைந்தவர்கள் என்று பல்வேறு அழுத்தங்களில் இருந்தும் "சந்நிதியான் அருளினால்" சுகம் பெற்றவர்கள் அவனுக்கான தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதன் மூலம் ஆத்ம திருப்தியைப் பெற்றுக் கொண்டனர்.

இதனால் சந்நிதியில் அதிகரித்து வரும் பல்லின சமூகக் குழுமங்களின் தொகையும், அவர்களது மத ஜனநாயக உரிமைகளும், வேண்டுதல்களும் ஒன்று சேரப் படிப்படியாக வைதீகக் கிரியைகள் இடம் பெற்று வந்தமை தவிர்க்க முடியாததாகி விட்டது. அதன் விளைவாகவே, சங்காபிஷேகம், உருத்திராபிசேகம் போன்ற குமாரதந்திர முறையில் அமைந்த வைதீகக் கிரியைகள் இன்று இடம் பெறத் தொடங்கின எனலாம்.

## *சிற்ப அமைப்புக்கள்*

வேதாகம நெறிக்குட்படுத்தப்பட்ட ஆலயங்களின் அமைப்பானது சிற்பசாஸ்திரம், வாஸ்து சாஸ்திர விதிகளுக்கு அமைய சிற்ப வேலைப் பாடுகளையுடைய தூபி, விமான, கோபுரங்கள், தூண்கள் மற்றும் ஆலய முகப்பு வடிவங்கள் என்பன அமைக்கப்படுகின்றன. ஆனால் 18ஆம் நூற்றாண்டில் இருந்த சந்நிதி கோயிலின் அமைப்பானது இத்தகைய ஆகமம் சார்ந்த கட்டிட அமைப்புக்களையோ அல்லது சிற்பவேலைப்பாடுகளை உடைய தூபி, கோபுர அமைப்புக்களையோ கொண்டிருக்கவில்லை. அந்த அமைப்பில் ஒரு அழகும், எளிமையும், சாந்தியும் இருந்தது.

பின்னர் 20ஆம் நூற்றாண்டில் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்டு வந்த புனரமைப்புக்களினூடாக கோயிலின் தூபி, விமான அமைப்புக்களிலும் வாசல் முகப்புகளிலும் ஆகமச் சாயல் மருவியிருப்பதைக் காண முடிகின்றது.

## *விக்கிரக பிரதிட்டைகளும் வழிபாடும்*

பண்டைய தமிழரின் வழிபாட்டுப் பாரம்பரியத்தில் வேல் வழிபாடு முக்கியத்துவம் பெற்று விளங்கியது போல், சந்நிதியில் மூலஸ்தான மூர்த்தியாகவும், எழுந்தருளி மூர்த்தியாகவும் வேற்பெருமானே இருந்து வருகின்றமை அதன் தனித்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

பின்னர் காலப்போக்கில் பரந்துபட்ட அளவில் அதிகரித்த பக்தர்களின் வேண்டுதல்களையும், அபிலாசைகளையும் பூர்த்தி செய்யும் வகையிலும் சந்ததி வழியாக முக்கியத்துவம் பெறும் பூசகர்களின் மனோ நிலையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களின் காரணமாகவும், செல்வச் சந்நிதியில் விக்கிரக பிரதிட்டைகளும், பூசை வழிபாடுகளும் படிப்படியாக இடம் பெறத் தொடங்கின.

அதன் விளைவாகவே, ஆறுமுகக் கடவுள், விநாயகர் ஆகிய கடவுளர்களின் ஐம்பொன் விக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்டு அவையும் எழுந்தருளி மூர்த்திகளாக வழிபாடியற்றப்படுவது சந்நிதியின் மரபுகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களையே உணர்த்தி நிற்கின்றது எனலாம்.

## *மாறும் மரபுகளும் மாறாத உறவும்*

அண்மைக்காலமாக சந்நிதியில் இடம்பெற்று வரும் வைதீகக் கிரியைகளும், ஆகமம் சார்ந்த வழிபாட்டு மரபுகளும் "சந்நிதி முறையில்" மாற்றத்தை ஏற்படுத்துவது பற்றி, சந்நிதியானுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டவரும், அதன் ஆகமம் சாராத வழிபாட்டு முறையினால் கவரப்பட்டவருமான பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் கூற்று மேலும் தெளிவாக்குவதாக உள்ளது.

"சந்நிதிக்கான சமூக அங்கிகாரம் வளர சந்நிதிக் குழுமம் சமூக அதிகாரச் சின்னங்களைப் பகிர்ந்து கொள்ளும் நிலை ஏற்பட ஏற்பட சமஸ்கிருத நெறிப்பாடு வளர்ந்து வருகின்றது. இன்று மந்திரமில்லாமலேயே சமஸ்கிருத நெறிப்படுத்துகை நடக்கும் அசாதாரண நடைமுறையினைச் சந்நிதியில் காணலாம். அதாவது இங்குள்ள பாரம்பரியத்தில் இல்லாத ஆனால், உயர் கோயில்களில் பேணப்பட வேண்டியன என்று கருதப்படும் சடங்குகள், நடைமுறைகள் இங்கு மேற்கொள்ளப்படுவது தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகும்."


அவரது இந்தக் கூற்றின் மூலம், சந்நிதியின் வழிபாட்டு முறைகளில் சிறுகச் சிறுக சமஸ்கிருத மயப்படுத்துகை நடைபெற்று வருவதை அறியக் கூடியதாக உள்ளது.

இன்று ஆகம மரபு சார்ந்த வழிபாட்டு முறைகள் சமூகத்தில் செல்வாக்குப் பெற்று வருவதன் காரணமாகவும், அவை சார்ந்த குழுமங்களையும் கவருவதன் நோக்கமாகவும் கொண்டு, சந்நிதியிலும் இத்தகைய மரபு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றது போல் தெரிகின்றது.

ஆயினும் சந்நிதி முருகனுக்கும் அவனை நெருங்கி வழிபடும் அடியவர்களுக்கும் இடையில் இருக்கின்ற அந்த அன்னியோன்னிய உறவு முறையிலும் சுயாதீன வழிபாட்டு முறைகளிலும் இடைவெளியை ஏற்படுத்தாத வகையில் சந்நிதி மரபுகள் பேணப்பட்டு வரவேண்டும்.

'நீ ஏனடா என்னைப் பார்க்கவரவில்லை?' என்றும் 'என்ரை செல்வமே' என்றும் 'முருகப்பா' என்றும் உரிமையுடன் அவனுடன் ஏற்படுத்தும் உறவாடல்களை வேறு எந்த ஆலயங்களிலும் பார்த்திருக்க முடியாது.

ஆம்!...... சந்நிதி முருகனுக்கும், அவனது பக்தர்களுக்கும் இடையிலான இத்தகைய நெருங்கி உறவாடும் தொடர்பாடல்கள் அற்புதங்கள் நிறைந்தவையாக உள்ளன. அவை எம்மை அறியாமலேயே இயல்பாக நடந்து வரும் தெய்வீக – மானுட உறவாடல்களாகும் என்பதைச் "சந்நிதிச் செல்வம்" எப்பொழுதும் உணர்வு பூர்வமாக வெளிபடுத்திக் கொண்டே இருக்கும்.



எரிந்தும் எரியாத முருகன் பவனிவரும்
பழமைவாய்ந்த கட்டுத்தேர்

# 15 செல்வச் சந்நிதி முருகன் திருப்பள்ளியெழுச்சி

செல்வச் சந்நிதி முருகன் மீது பாடப்பட்ட பல இலக்கியங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அத்தகைய இலக்கியங்களைப் படைத்தவர்களில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தினால் இயற்றமிழ் போதகாசிரியர் என்ற பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்ட புலவர் ச. வயித்தியலிங்கம் பிள்ளை, பண்டிதர். க. வீரகத்தி, அல்வாயூர் மு. செல்லையா, வைத்தியர் ஆண்டியப்பர், கவிஞர். வி. கந்தவனம் பேராசிரியர் அ. சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ், சி. ஆ. வேதநாயகம் பிள்ளை, அருட்கவி. சி. விநாசித்தம்பி ஆகியோரைக் குறிப்பிடலாம்.

செல்வச்சந்நிதி முருகன் மீது பாடப்பட்ட 'திருப்பள்ளியெழுச்சி', புலவர் ச. வயித்தியலிங்கம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட "தொண்டை மானாறு செல்வச்சந்நிதித் திருமுறைகள்" என்னும் தொகுப்பில் உள்ளது. இத்தொகுப்பு பிள்ளைத் தமிழ், ஊஞ்சற் பாட்டு, எச்சரிக்கை, பராக்கு, திருச்சந்நிதித் தோத்திரமாலை முதலிய வேறு பதிகங்களையும் உள்ளடக்கியுள்ளது. இத்தொகுப்பு 1898 ஆம் ஆண்டு மாசிமாதத்தில் பிரசுரிக்கப்பட்டது.

இத்தொகுப்பில் உள்ள திருப்பள்ளியெழுச்சிப் பதிகத்தில் உள்ள மொழிவளமும், சொல்லாட்சி என்பனவும் அற்புதமானவை. கடந்த நூறு வருடங்களுக்கு மேலாக மார்கழித் திருவெம்பாவையின் போது, புலரிக்காலையில் இப்பள்ளியெழுச்சி பாடப்பட்டு வருகின்றது.

உ

## செல்வச்சநிதி முருகன்

# திருப்பள்ளியெழுச்சி

சீருறு நினதருள செறியடி யவர்தஞ்
சிந்தையி னிலமில கினவவ ருளமா
மேருறு கிரியெழு சிதமென வல்லோன்
இந்திர திசைவரை யினிலெழு கின்றான்
பேருறும் அரி முதல் அமரர்கள் பரவப்
பேசரு மறைமிகும் ஒலியொடு பரவ
நேருறு தொண்டைநன் நகருறு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 1

ஆண்டலை கூவின வன்னிய புட்ட
மன்பொடு கூவின புள்ளொலி பரந்த
மாண்டகு சங்கமொ லித்தன வானின்
மருவிய தாரகை மறைந்தன கடன்மேல்
ஏண்டகு கதிரவன் றோன்றினன் அன்பர்க்
கெளிவரு மறுமுக விறையவ மிகவே
நீண்டிடு மரநிறை வனமுறு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 2

தோத்திர மிசைத்திடு மடியவ ரொருபால்
சுற்றியஞ் சலிசெயு மடியவ ரொருபால்
காத்திடு வெனவரு மடியவ ரொருபால்
கைகுவித் தேதொழு மடியவ ரொருபால்
பூத்திரள் சிந்திடு மடியவ ரொருபால்
பொற்புற வெங்கணு நிறையவந் தடுத்தார்
நேத்திர மணியென குருபர வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 3

மணிமயி லதன்மிசை நீயிருந் தாங்கு
மறிகடன் மிசையொடு கதிரவ னுதித்தான்
அணியுறு மரைமலர் நினதரு ளடைந்த
வன்பர்த முகமென விகிசித மான
கணியுறு புனமதில் வருகுற மாது
காதலோ டணைதரு வாகுமுன் நான்கா
நிணமுறு படைநிசி சராதமை யடுசந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 4

அயனரி முதலிய வமரர்க ளறியா
வானந்த மெய்ப்பொரு ளேநின தடித்தொண்
டியன்முறை புரியடி யவர்தமக் கெளியாய்
இன்னமு தேகரும் பேமுடி மணியே
நயனம திடைநின்று களிதரு தேனே
நியமமொ டுறுபவர்க் கருடரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 5

ஓதரு மொளிவிடு முனதயில் கண்ட
வுறுமயில் புரியும்வஞ் சனிபடை யொப்பக்
கோதறு கதிரரி யெழுவது கண்ட
கூரிரு ளழிந்தது குலவிய மதிய
மூதொளி மழுங்கிய துனதமர்க் கழிந்த
மொய்யறு மவுணர்த முகமென வறமார்
நீதரு மற்ஞரும் வருதிரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 6

திறற்புய னாதிய வீரர்கள் சூழத்
திண்டிறல் கெழுமிய பூதர்கள் சூழப்
பிறப்படு முனிவரொ டமரர்கள் சூழப்
பேரயில் முதலிய படைத்திறஞ் சூழ
வறப்படு குழற்சி மகள்குற மகளோ
டருடர வமர்தரு வறுமுக வர்த்த
நிறக்கடம் பணிபுய நிறைதரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 7

பச்சிலை யொடுமலர் பரிவொடு கொணர்ந்தார்
பாலுறு காவடி பலப்பல கொணர்ந்தார்
வச்சிர நவமணி மாலைகள் கொணர்ந்தார்
மாமணி செறியுநன் மகுடங்கள் கொணர்ந்தார்
இச்சையொ டிருவிழி முதலிய கொணர்ந்தா
ரெண்ணிய வரம்பெற வீண்டின ரீங்ஙன்
நிச்சய முறுதவர் தொழுதிரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 8

ஐந்தொழில் நடம்புரி யையனு யுமையு
மன்பொடு தழுவுதற் சுகநினை வுற்றார்
சிந்துர வதனவைங் கரத்தலை வனுநற்
சிரமுகந் திடவிரும் பின்னரி முதலாஞ்
சுந்தர வமரர்கள் பணிசெய வந்தாய்
தூயநன் மறைமுதற் கலையுணர் புலவ
நிந்தையி லவர்துதி புரிநிறை வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 9

தென்மலை முனிவனுக் கருளிய குருவே
தேவர்க ளிடர்களைந் திடவரு முருவே
அன்னையம் பிகைக்குமுன் னுலவிடு பாதா
வரன்செவி யினிற்பிர ணவமுரை நாதா
முன்னடு முடிவில தாகிய ஜோதி
முத்தர்க டமதுள மேவிய வாதீ
நெல்மணி வயல்புடை சூழ்திரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 10

# துணை நின்ற நூல்கள்


1. சித்திரப் பெருந் தேர் வெள்ளோட்டச் சிறப்பு மலர்
2. ஆற்றங்கரையான் – சண்முகதாஸ், அ. மனோன்மணி, ச. வாராவொல்லை வெளியீடு – 1989.
3. அருள் கனி – சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை – 1994.
4. சந்நிதிச் செல்வம் பேணப்பட (கட்டுரை) – சிவத்தம்பி, கா. பேராசிரியர் (1994)
5. யாழ்ப்பாணச் சரித்திரம் – இராசநாயகம் முதலியார், செ.
6. நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டு மலர் – யாழ்ப்பாணம் – 1974.
7. புறநானூறு – கழக வெளியீடு, திருநெல்வேலி – 1973
8. நற்றிணை
9. திருப்புகழ் – அருணகிரிநாதர்....
10. செல்வச் சந்நிதி ஆலய வழிபாட்டு மரபு (கட்டுரை) – நாச்சியார், செ. (1994)
11. பரவசக் கண்ணிகள் – பிரதீபன். பால, நிர்மலன். பால
12. ஞானச்சுடர் – இதழ்கள் – சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெளியீடு.
13. வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும் – சிவலிங்கராஜா, செ வடமராட்சிக் கல்வி வட்டம் – 1994.
14. ஸ்ரீ செல்லச் சந்நிதி ஆலய சிறப்பு மலர் – தெய்வேந்திரம் ஐயர், வி. தொண்டைமானாறு (2000)
15. சிட்னி முருகன் கும்பாபிஷேக மலர் – அவுஸ்திரேலியா – 1999
16. யாழ்ப்பாணச் சித்தர் மரபம்சங்களும் யாழ்ப்பாணச் சுவாமிகளும் – ஞானக்குமரன், நா. (பேராசிரியர் அ. சண்முகதாஸ் மணிவிழா மலர் – வடமராட்சி)

தமிழகத்து முருக வழிபாடுகளில் இருந்தும் வேறுபட்ட, தமிழர் மரபு வழிப்பட்ட முருக வழிபாட்டுப் பாரம் பரியத்தைக் கொண்டுள்ள ஈழத்தின் வேற்படைக் கோயில்களான கதிர்காமம், செல்வச் சந்நிதி, மண்டூர் ஆகிய மூன்று முருகன் ஆலயங்களும் தனித்துவமானவை!

அவற்றுள் செல்வச் சந்நிதி முருகன் சாதாரண மக்களுடன் மக்களாக ஒட்டி உறவாடும் எளிமைக் குரியவனாக விளங்குவதே அவன் சிறப்பமிசமாகும்.

ஆம் ! . . . . . சந்நிதி முருகன் மக்களில் ஒருவனாக, எளியவர்களுள் எளியனாக நீக்கமற நிறைந்திருப்பதால் அவனை அடையாளம் காண்பதற்கும் ஒரு பக்குவம் வேண்டும்.

அந்தப் பக்குவத்தை அளிக்கும் ஒரு சூழலாக விளங்குவதே *சந்நிதிச் செல்வம்.*

வல்வை. ந. அனந்தராஜ்

**ISBN 955 -96845-1-5**

Printed by Unie Arts (Pvt) Ltd., Colombo - 13. T. P. 330195